குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விகாரி ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—59 [இதழ் 11

திருக்கயிலாய தரிசன யாத்திரையில்
மானசசரோவரத்தில் திருமஞ்சனமாகி வழிபாடு செய்து நிற்றல்
(திருக்கயிலாய மலர்)

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :-

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர் :-

வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

உட்பொருள்

பக்கம்

1. சிவ ஞான போதம் ... 695
2. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி 701, 714, 734, 759
3. வாழ்க அருள்நந்தி மாமுனிவர் ... 708
4. பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் ... 743
5. சிவாகமம் ... 747
6. தமிழின்பின் சென்ற திருவிளையாடல் ... 750
7. உடல் வளர்க்கும் மூலிகைகள் ... 755
8. செய்திகள் ... 766
9. எதிர்காலம் ... 776

குறிப்பு :- ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் கயிலாய தரிசன யாத்திரையைப் பாராட்டி திருவையாறு, தருமபுரம் ஆகிய இடங்களில் நிகழ்ந்த குருவழிபாட்டு நிகழ்ச்சிகள் அடுத்த இதழில் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

தருமையாதீனம் சென்னை சமயப் பிரசார நிலையத்தில்
(வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்)

திருக்கயிலாய தரிசனம் செய்து எழுந்தருளிய
தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளவர்கள் கோலுக்காட்சி வழங்குதல்

தருமையாதீனம், சென்னை, சமயப்பிரசார நிலையத்தில் (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்)

திருக்கயிலாய தரிசனம் செய்து எழுந்தருளிய 25 ஆவது குருமகாசந்நிதானம் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கோலுக்காட்சியில், சென்னை நகரப் பெருமக்களும் பிரசார நிலையத் தேவார வகுப்பு மாணவ மாணவிகளும்

திருக்கயிலாய தரிசனம் செய்து எழுந்தருளிய
தருமையாதீனம் 25ஆவது கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
61 ஆவது ஆண்டின் தொடக்க விழாவிற்குப் பின்னர்
தரிசனம் செய்தபோது கயிலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
பொன்னுடை போர்த்து ஆசிஅருளல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
ஆவணிமூல விழா



25 ஆவது குருமகாசந்நிதானம்
கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திரு. T. M. P. மகாதேவன் M A., Ph. D. அவர்களுக்கு
"வேதாந்த வித்தகர்" என்னும் பட்டம் வழங்கி
பொன்னாடை போர்த்து ஆசி அருளல்

உ

குருபாதம்

வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 | விகாரி - புரட்டாசி 10—10—59 | இதழ் 11

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

கட்டுரை 9

(மலர் 18, இதழ் 10, பக்கம் 600 இன் தொடர்பு)

இரண்டாவது சூத்திரம்

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

அவையே தானேஆய் இருவினையின் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

‘ உலகேலாம் ஆகி வேருய் உடனும்ஆய் ஒளிஆய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலேவன்ஆய் இவற்றின் தன்மை தனக்கெய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி நின்றனன் நீங்கா தென்றும்,’

விஞ :- இச் சூத்திரக் கருத்து என்ன ?

விடை :- புனருற்பவம் வருமாறு உணர்த்துதல் இதன் கருத்தாகும்.

விஞ :- புனருற்பவம் என்ருல் என்ன ?

விடை :- உற்பவம் - உளதாதல்; தோற்றம். புனர் உற்பவம் - ‘ மீளவுளதாவது ’.

விஞ :- முதல் உற்பவம் வருமாறு உணர்த்தாமல், புனருற்பவம் வருமாறு உணர்த்துவது ஏன் ?

விடை :- பிரபஞ்சம் அநாதி ஆகலின், அம் முதற் கோடி நம்மனேரால் அறியக்கூடாது. முற்சூத்திரத்தில் ‘ ஒடுங்கியுளதாம் ’ என்று உணர்த்தியதும் அதனுல்தான். அதுவே இச் சூத்திரத்தில் அவாய்நிலேயால் உணர்த்த நின்றது, நிற்கவே, (பிரதமோற்பவத்தை உணர்ந்து உணர்த்த லருமையின்) புனருற்பவமே கூறுவதற்காயிற்று.

விஞ :- இச் சூத்திரம் எத்தனே அதிகரணத்தை உடையது ?

விடை :- நான்கு அதிகரணத்தை உடையது.

விஞ :- அந் நான்கு அதிகரணங்கள் யாவை ?

விடை :- 1. அவையே தானேயாய் ; 2. ஆணேயின் இருவினேயின் ; 3. போக்குவரவு புரிய ; 4. ஆணேயின் நீக்கம் இன்றி நிற்கும் என அதிகரணம் நான்கும் வரும் வகையை அறிக.

வினு :- ‘ ஆணையின் ’ என்பதை முன்னும் கொண்டது ஏன் ?

விடை :- சூத்திரக்கிடக்கை முறை நான்கு. அவற்றுள் ஒன்று இம்முறை.

வினு :- அந் நான்கு எவை ?

விடை :- 1. ஆற்றொழுக்கு, 2. அரிமா, (சிங்கம்) நோக்கம், 3. தவளைப்பாய்த்து, 4. பருந்தின் வீழ்வு. அவற்றுள் இங்குக் கொள்ளத்தக்கது சிங்கநோக்கு.

வினு :- அவற்றின் விளக்கம் வேண்டும்.

விடை :- சூத்திரங்கள் தொடர்ந்துநிற்கும் நிலைகளுக்கு இந்நான்கும் உவமைகள்.

1. ஆற்றுநீர் தொடர்பு அருது ஒழுகுமாறுபோலச் சூத்திரங்களும் தம்முள் இயைபுபட்டு ஒழுகுவது ஆற்றொழுக்கு.

2. முன்னும் பின்னும் நோக்கும் நோக்கம் சிங்க நோக்கம். அதுபோலச் சூத்திரங்களும் இறந்ததனேடும் எதிர்வதனேடும் இயைபு படக்கிடப்பது (அரிமாநோக்கம்).

3. தவளை பாய்கின்றுழி இடையிடை நிலம் கிடப்பப் பாயும். அதுபோலச் சூத்திரம் இடையிட்டுப்போய் இயைபு கொள்வது தவளைப்பாய்த்து.

4. எங்காயினும் வீழ்ந்து தான் கருதிய பொருளைக் கொண்டுபோம் பருந்துபோலச் சூத்திரமும் இயைபின்றியே தான் நுதலி (- கருதி) முடிக்கும் பொருளை முடித்துப் போம். இது பருந்தின் விழுக்காடு. அவற்றுள் இதைச் சிங்க நோக்கு என்றருளினர் சிவஞான மாமுனிவர்.

வினு :- இந் நான்கும் சூத்திரக் கிடக்கைக்கு ஒப்பானவவே,

'ஆற்றொழுக் கரிமா நோக்கம் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை'

என்று நன்னூல், 'சூத்திரநிலை'க்கே இவற்றைக்கொண்டுரைத்தது. அவ்வாறு இருக்க, இங்கே ஒரு சூத்திரத்தில் ஒரு சொல் முன்னும் பின்னும் இயைபுறக்கொள்ள நிற்றற்குச் சிங்க நோக்கெனக் கூறல் மரபாமோ! பொருள்கோள் வகையுள் தாப்பிசைப் பொருள்கோளாகக்கொள்ளலாகாதோ?

விடை ;- சூத்திரக்கிடக்கைக்கு உரியதாயினும், சூத்திரத்துச் சொற்கிடக்கைக்கும் உரித்தாக்குவது குற்றம் அன்று.

வினா :- 'உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண அண்ணாத்தல் செய்யா தளறு.' என்பதில் உள்ள 'ஊன்' என்னும் சொல் முற்சேர்ந்து, ஊன் உண்ணாமை எனவும், பிற்சேர்ந்து ஊன் உண்ண எனவும் நிற்றல் பொல்வதே ஆணையின் என்னும் இச் சொல்லின் இயைபு.

'குணம் தொழில் சாதி பொருள் குறித் தொருசொல்
ஒருவயின் நின்று பலவயிற் பொருள்தரின்
தீவகம் செய்யுள் மூவிடத் தியலும்'

(தண்டியலங்காரம் 13)

இதிற் குறித்தவாறு இடைநிலை விளக்கம் ஆம் அன்றோ ?

விடை :- உரையெழுதியருளிய பெருமானார்க்கு அது தெரியாதோ ? தெரிந்தும், சிங்கநோக்கு என்றதன் கருத்து ஆராயற்பாலது. சூத்திரநிலை, சூத்திரச்சொல்நிலை, பொருள் கோள், பொருளணி என்பவற்றுள் ஈண்டுச் சூத்திரச் சொல் நிலையை நோக்கிக் கூறியதாதலின், 'சிங்கநோக்கு' என்றார். ஈண்டுப் பொருள்கோளும் அணியும் நோக்கத்திற் குரியவல்ல.

விடை :- இச் சூத்திரத்தின் பொருள் என்ன ?

விடை :- இதன் பொருளை உரைக்கும் முன், முதல் அதிகரணத்தைக் கூறல்வேண்டும். முதல் அதிகரணம் 'அவையே தானேயாய்' என்பது என்று முன்னமே கூறப் பட்டது. அதனை,

1. அவையேயாய்

2. தானேஆய்

3. அவையேதானேயாய் என்று மூன்று கூறு செய்து கொள்ளல் வேண்டும். முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள முத்திறத் தொடர்பும் உணர்த்துவன அம் மூன்று கூறும்.

1. ஒன்ருய்நிற்றல் (அவையேயாதல்)

2. வேருய்நிற்றல் (தானேயாதல்)

3. உடனுய்நிற்றல் (அவையேதானேயாதல்) இம் முத் திறமும் அறிந்தார்க்கே முதலதிகரணப் பொருள் இனிது விளங்கும்.

'ஈருய்முதல் ஒன்ருய் இருபெண்ஆண் குணம் மூன்ருய்
மாருமறை நான்காய் வருபூதம்மவை ஐந்தாய்
ஆருர் சுவை ஏழோசையோ டெட்டுத் திசைதானுய்
வேருய் உடன்ஆனுன் இடம் வீழிம் மிழலையே'

என்று திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாடலால், சிவபெருமானது அம் மூன்று நிலையும் என்றுமுள்ள உண்மை யாதல் புலப்படும்.

வினு :- இச் சூத்திரத்தில் 'நிற்கும்' என்றுள்ள பயனிலைக்கு எழுவாய் எது ? அதாவது 'நிற்றல்' என்னும் தொழில் யாருடையது ?

விடை :- முதற் சூத்திரத்தில் 'அந்தம்' என்றும், அதன் பொருளாகச் சங்காரகாரணன் என்றும் உரைக்கப்

பெற்ற முதல்வன் ஒன்றுயும் வேருயும் உடனுயும் நிற்பதால் ‘ முதல்வன் ’ என்பது எழுவாயும் ‘ நிற்கும் ’ என்பது பய னிலையும் ஆம். ஆதலின், இச் சூத்திரத்தில் உள்ள பய னிலைக்கு முற் சூத்திரத்தில் உள்ளதே எழுவாய் என்று அறிந்து, இதன் பொருளை விளங்க உணர்தல் வேண்டும்.

வினு :- இவ்வாறு முத்திறப் பொருளுணர்த்தும் முதல் அதிகரணத்தோடு ஏனைய அதிகரணங்கட்கும் சேர்த்துச் சூத்திரத்தின் முழுப் பொருளையும் பொழிப்புரையாகக் கூறுக.

விடை :- பிண்டப் பொழிப்பு.

(அதிகரணம் 1.) முற் சூத்திரத்தில் அறிவிக்கப்பெற்ற சங்காரகாரணன் ஆகிய முதல்வன்.

(ஒன்ருதலாகிய) கலப்பினுல் உடலின் உயிர் போல அவ்வான்மாக்களேயாய்ப்,

(வேருதலாகிய) பொருட்டன்மையால் கண்ணிற் கதிரோன் (சூரியன்) போல அவ்வான்மாக்களின் வேறுமாய்,

(உடனுதலாகிய) உயிர்க்கு உயிராதற்றன்மையால், கண்ணொளியின் ஆன்மபோதம் (பசுபோதம், ஜீவபோதம், உயிரறிவு, தற்போதம்) போல உடனுமாய் நின்று,

(அதிகரணம் 2) ஆணை (ஆக்ஞை) என்னும் பரியாயப் பெயருடைய தனது (முதல்வனது) சிற்சத்தி (சித்சக்தி, ஞானசக்தி) யான் வரும் இருவினைகளான்,

(அதிகரணம் 3) அவ்வான்மாக்கள் இறத்தலையும் பிறத்தலையும் புரியும் படி,

(அதிகரணம் 4) அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேத மாய் நிற்பன்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளாசி

[தருமையாதீனம் ‘ ஆவணிமூலத் திருநாளில் ’ காலை 9 மணிக்குத் தொடங்கி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு வழிபாடுகள் நடந்தன. மாலை 6 மணிக்குக் கூட்டம் தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் சென்னைப் பல்கலைக் கழக மெய்ப்பொருள்துறைப் பேராசிரியர் டாக்டர். திரு. T. M. P. மகாதேவன் M. A., Ph D அவர்களுக்கு ‘ வேதாந்த வித்தகர் ’ என்ற பட்டம் வழங்கியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் அருளிய அருளாசி வருமாறு]

அன்பர்களே !

இன்று செந்தமிழ்ச்சொக்கர் பண்சுமந்த பாடலுக்கு மண் சுமந்த திருநாள். ஆண்டவன் தன் அடியார்களுக்குச் சேவகனாகத் திருவிளையாடல் செய்த திருநாள். நமது தருமையாதீனம், ஆரூர். ஆலவாய்இவற்றோடு தொடர்புகொண்டதென்பதை நீங்கள் அறிவீர்கள். குரு லிங்க சங்கமம் ஆகிய முப்பெருஞ் சமய உண்மைகளை இம் மூன்று திருநகரங்களும் விளக்கிநிற்கின்றன. குருநாதர் - ஆரூர் ; இலிங்கம் - ஆலவாய் ; சங்கமம் - தருமை. ஆலவாய்ச் சொக்கர் ஆவணிமூல விழா சிவலிங்க வழிபாட்டை விளக்குகிறது. வைகாசியில் நடக்கும் குருபூஜை விழா குரு வழிபாட்டை விளக்குகிறது. சங்கம வழிபாடு நாள்தோறும் ஆதீனத்தில் நடைபெற்று வருகின்ற மாகேசுவரபூஜை முதலியனவாகும். இவை ஆதீனத்திற்குச் சிறந்த திருவிழாக்கள்.

செந்தமிழ்ச் சொக்கர் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழாய்ந்த தலைமைப்புலவர். அவர் திருநாளில், தக்க புலவர் ஒருவர்க்குப் பட்டமளித்துப் பாராட்டி வருகிறோம். இவ்வாண்டு பட்டம் பெறுபவர் சமய நூல்களில் நன்கு தோய்ந்தவர். வேதாந்த நூல்களில் விழுமிய திறம் உடையவர். வேதாந்தம்

என்பது சைவ சித்தாந்தத்தின் பிழிவு. வேதாந்தத்து உச்சியிற் பழுத்த ஆராவின்ப அருங்கனி பிழிந்த சாரம் சைவ சித்தாந்தம். வேதாந்தத்தின் தெளிவு மெய்கண்ட நூல்கள். இவையும் அவையும் வேறல்ல. சென்னைப் பல்கலைக் கழகத்தில் மெய்ப் பொருள்துறைப் பேராசிரியராக விளங்கும் நம் அன்பர் டாக்டர். திரு. T. M. P. மகாதேவன் அவர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் துணைகொண்டு 'வேதாந்த வித்தகர்' என்ற பட்டத்தை வழங்குகின்றோம். சமயத்தொண்டாற்றிப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கயிலாய நாதனைக் கண்ட மனக்களிப்பு இத்திருவிழாவிற் கோரு தனிச்சிறப்பு. அங்கே ஆண்டவன் மாணிக்க மலையாய், மனமணி விளக்காய் மன்னி நிற்கின்றான். சிவம் கயிலாய மலையாகவும், சக்தி மானசசரோவரமாகவும் அங்கே அநுபவ விளக்கம். கௌரிசங்கரம் என்று அங்கே இதை வழங்குவர். திருவருள் ஒன்றே அங்குத் துணை என்ற தெளிவு நமக்குண் டாகும். இது யாத்திரை அநுபவம்.

ஆவணிமூலம் கயிலைத் தரிசனம் செய்துகொண்டிருந்த எங்களை விரைந்தழைத்தது; செந்தமிழ்ச் சொக்கர் திருமேனி காணக் கயிலையிலிருந்து பிரியா விடைபெற்றோம். என்றினிக் கயிலை காண்பேம்; எப்பகல் கயிலைநாதன் தன் திருவடிகள் காண்பேம்: - என்ற சிந்தனை மேலோங்கத் தருமை வந் தடைந்தோம்.

எல்லோர்க்கும் கயிலைப் பெருமான் திருவருளும், செந் தமிழ்ச் சொக்கர் திருவருளும் குருவருளும் பெருகுக! என்று வாழ்த்துகின்றோம்.

வேதாந்த வித்தகர்

டாக்டர், திரு. T. M. P. மகாதேவன் M. A., Ph. D. அவர்கள்*

தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம்பெற்ற மாணிக்க வாசகர்க்குத் தொடர்புடைய நாளிலே, இத் திருவாலவாய்த் திருநாளிலே 'வேதாந்த வித்தகர்' என்னும் பட்டத்தைச்

---

*முதுபெரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

சொக்கேசன் திருவருளும் தருமைக் குருவருளும் இணைந்த ஒன்று அளிக்கின்றது. அளிக்கப்பெற்றவர் மனிதருள் மாணிக்கம். கற்றவர்க்கு நற்றுணைவர். சத் சங்கத்தின் நாயகம். சன்மார்க்கத்தின் தனிச்சின்னம். இத் தருமைக் குருபீடம் வெள்ளியம்பலத்தையும் பொன்னம்பலத்தையும் தனக் குரிமையாக உடையது. இதன் வழிபடுகடவுள் கால்மாறியாடிய கடவுள், வெள்ளியம்பலவாணன். இங்கு வந்து அடிமைத்திறம் பூண்ட குமரகுருபர சுவாமிகட்கு, இங்கு அப்போதிருந்தருளிய நாலாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பொன்னம்பலவாணன் அருட்காட்சியில்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்து வாழ் சடையானாடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

என்ற இப்பெரியபுராணப் பாடலின் அநுபவப் பொருளுணர்வு உதிக்கப் பெறவேண்டித் தில்லைக்கு ஏவியருளினார்கள்,

இங்கே இப்போது பட்டம்பெற்ற மகாதேவனார் அவர்கள், இங்கே வீற்றிருந்தருளிப் பட்டம் வழங்கிய வெள்ளியம்பலவாணரிடம் பல தொடர்புகளுடையவராய் விளங்குகின்றார்கள். அவற்றுள் தலைசிறந்ததொடர்பு அவ் வெள்ளியம்பலத்துக்கும் பொன்னம்பலத்துக்கும் தருமைக் குருபீடம் உரிமையுடையது என்பதே. சிறப்பாக 25-ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னம்பலமூர்த்திகளே என்பது, திருக் கயிலையினின்றும் எழுந்தருளுங்கால் சிதம்பரத்தில் உள்ள தீக்ஷிதர்கள் எல்லாம் செய்த உபசாரங்களால் அறியாதவர் இரார். இம் மகாதேவனார் அவர்களும் பொன்னம்பலத்துக்குத் தோன்றியவர், தாயாரும் லோகநாயகி என்னும் பெயர் வாய்ந்தவர், சிவகாமியம்மையைப் பாடிய குமரகுருபரர், குழந்தை நோய்க்குத் தாய் மருந்துண்ணும் உலகியல் வழக்கத்தை எடுத்துக்காட்டி, உயிர்களின் மலநோய் தீரச் சிவகாமவல்லி நடராஜ நடனதரிசனம் புரிவதாகப் பாடினார்.

உலகத்துயிர்களுக்குத் தாயார் யார். அவரே லோகநாயகி, சிவகாமவல்லி, பெற்ருேர் இருவரும் நற்பெயர் வாய்ந்தவர். அவர்க்குத் தோன்றிய இவர்களும் தம் பெயராலும் தமக்கு உலகில் உள்ள பெயராலும் மகாதேவரேயாஞர்.

1911இல் தோன்றிஞர். இளமை முதலாகவே இராம கிருஷ்ண மடத்தின் தொடர்புடையவர். இராமகிருஷ்ண ஹைஸ்கூலில் S. S. L. C. வரை கற்றவர். இராமகிருஷ்ண இல்லமே இவர்க்கு அருட்டாயகம். அப்பொழுது அதனைப் பரிபாலனம் புரிந்திருந்த இராமசாமி ஐயங்கார் இவர்களைப் பேரன்புடன் போற்றிவந்தார். கற்குங் காலத்திலேயே உபதேசம் பெற்ற உத்தமர். இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய சாக்ஷாத் சிஷ்யர் ஆகிய சிவாநந்தஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றவர் ஆதலின், இவர்களை எல்லாப் பெருமைகளும் தேடிவந்து சார்ந் தன, சார்கின்றன. 'குணங்களை என் கூறுவது கொம்பினைச் சேர்ந்தவை உய்யப் பிணங்குவன.' என்று கம்பர் சீதாதேவி யின் குண விசேடத்தைக் குறித்துப் பாடியதுபோல, இவரை அடைந்து தாம் பெருமைபெற வேண்டிக் குணங்கள் நான்முந்தி நான்முந்தி என முந்துறும் வகையில் வந்துறுகின்றன. நல்ல வரிடத்தில் உபதேசம் பெற்றதனுல், இந் நல்லோர் எல்லோராலும் பாராட்டப்பெறுகின்ருர். இதன் உயர்வை அறிந்து ஆராய்வார் ஆனுல், மாணுக்கர் எல்லாரும் உயர்வடையும் வழியுள் உத்தம மானது இது என்று அறிந்துகொண்டு, இந் நிலையைப் பெற முயல்வர். கல்லூரி மாணுக்கருள் தம் மரபுக்கே புல்லுருவி யாகிக் கெடுத்தும் கெட்டும் வருவோர் ஒருவர் இருவர் இருப் பினும், இவ்வுத்தமப் பண்பாட்டைப் பெற விரும்பாதிரார்.

சென்னை மாகாணக் கல்லூரியில் இண்டர்மீடியட் வரை படித்தவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தத்துவம் படித்து Phila. Hons. வகுப்பில் தேர்ந்தார். (1933) சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வில் முதல்வகுப்பில் முதல்தரத்தில் (First class first rank) தேறியதற்கு உள்ள பொற்பதக்கம் அளிக்கப்பெற்ற பெருமையுடையவர்.

1933-35 ஆகிய ஈராண்டு, ஷ பல்கலைக் கழகத்தின் தத்துவ சாஸ்திர விசாரணைப் பிரிவுக்குத் தலைவராயிருந்த சூர்யநாராயண சாஸ்திரியுடன் ஆராய்ச்சிப் புலவராயிருந்தார்.

வித்யாரண்யர் கிரந்தங்களை ஆராய்ந்து எழுதித் தந்தார். இளமை முதல் வடமொழி கற்றவராதலின், வடமொழியில் உள்ள அரிய பெரிய தத்வக்ரந்தங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதும் ஆற்றல் வாய்க்கப்பெற்றுச் சிறந்து விளங்குகின்றார்.

1935-37,இல் புதுக்கோட்டை அரசர் கல்லூரியில் தத்துவ போதகாசிரியராக இருந்து விரிவுரையாற்றிப் பெரும்புகழ் எய்தினவர்கள்.

1937இல், ஷெ கழகம் Ph. D. டாக்டர் பட்டம் அளிக்கப் பெற்றார். அப்போதெல்லாம் இப்பட்டம் கிடைப்பது மிக அரிது.

1937-43 பச்சையப்பன் கல்லூரியில் தத்துவப் பேராசிரிய ராக இருந்து, நாடெலாம் நன்கறிந்த நல்லோர் நம் மகாதேவனார் அவர்கள்.

1943 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில், தத்துவ விசாரணைப் பகுதியில் ரீடரானார்கள். ரீடர் என்றால் இங்குள்ள பள்ளிப்பிள்ளை யெல்லாம் தம் பையில் இருக்கும் ஒன்று என்று கருதலாம். பின்பு, பேராசிரியர் (ப்ரோபோஸர்) ஆனார்கள். இப்போழுது அகிலலோகத் தத்துவப் பேராசிரியராய் விளங்கு கின்றார்கள்.

அகில இந்திய பிலசாபிகல் காங்கிரஸ் என்றுள்ள பிரசித்திபெற்ற ஸ்தாபனத்தின் செயலாளராக 7 ஆண்டு இருந்தார்கள். 1956 இல், அதன் ஜெனர்ல் ப்ரஸிடேண்ட் ஆனார்கள். இந்த ஆண்டில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அறக்கட்டளைச் சார்பில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோட்படி வடநாட்டுப் பல்கலைக் கழகத்தில் சோற் பொழிவாற்றினார்கள்.

1948—49 ஆண்டில் அமேரிக்காவில் உள்ள (Cornell University) இல் தத்துவ போதகராகச் சென்றிருந்து உலகம் புகழும் உயர்வுமுற்றார்கள். அந்த ஆண்டின் முடிவில் ஹவ்வாய் (Hawaii) என்னும் (அமேரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் நடுவில் உள்ள) தீவில் நடைபெற்ற கிழக்குமேற்குத் தத்துவ ஞானிகளின் மாநாட்டில் பங்குகோண்டவர். 10 ஆண்டு கடந்து மீண்டும் அம்மாநாடு அங்கேயே 1959 ஜுன் ஜுலையில்

ஹவ்வாஸ் யூனிவர்ஸிடியின் சார்பில் நடந்தது. அண்மையில் அங்குச் சென்று கலந்துகொண்டபெருமையுடையவர்.

இவற்றையெல்லாம் ஒருபெருமையாக அவர்கள் கொள்ள வில்லை, 24 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் அருள் ஆட்சிக் காலத்தில், ஆறுபாதிக்குச் சென்றபோது இங்கு வந்து தரிசித்ததால் ஓர் உபாதியும் இல்லாமல் இனிது வாழ்வதாகவும் இப்பெருமையெல்லாம் வந்தன என்றும் சொல்லி இன்புறு கின்றார்கள். அத்தொடர்புதான், மீண்டும் இங்கு வந்து குருபூஜைத் திருவிழாநாளில் நடந்த கோடை வகுப்பில் போதிக்கச் செய்ததற்கும் இன்றுப்பட்டம் பெற இக்குருநாதரால் ஆட்கொள்ளப்பெற்றதற்கும் காரணம் என்றும் தெரிவித்தார்கள்.

இத் தொண்டை மண்டலத்துச் சான்றோர் இதுவரையில் பலநூல்களை ஆக்கி உலகிற்கு வழங்கியிருக்கிறார்கள். இந்தியப் பண்பாட்டையும் சாத்திரப்பொருள்களையும் வெளிநாட்டார் அறியச் செய்வது மிகமிகத் தேவையான அரும்பெருந்தொண்டு. அத்தொண்டுகளைப் பல்லாண்டாகச் செய்துவரும் தனிச்சிறப்பு இவர்கட்கே முழுதும் உரியதா யிருக்கின்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர்கள் பதவியேற்ற காலத்தில் நான் அங்கு இருந்தேன். அப்பொழுதும் நல்ல நூல்கள் தத்துவ விசாரணைப் பிரிவில்தான் வெளியாயின. இப்பொழுதும் இவர் களே பல பல உயரிய நூல்களை எழுதி உதவியிருக்கின்றார்கள்.

1. அத்வைத தரிசனம் (300 பக்கம்) கணேசர் & கோ. வெளியீடு.

2. உபநிஷதத்திரட்டு மொழிபெயர்ப்பு. G. நடேசன் &கோ. வெளியீடு.

3. மேலைநாட்டு அளவை நூல் (தர்க்க சாஸ்த்ரம்) 400 பக்கம். விஸ்வநாதன் சென்ட்ரல் ஆர்ட்ஸ் பிரஸ்.

4. இந்துமதம் (300 பக்கம்) பம்பாய் வெளியீடு.

5. கௌடபாதர் காரிகை (சங்கரர்க்கு முன்பே இருந்தவர்) சென்னைப் பல்கலைக் கழகத்து வெளியீடு. கௌட பாதர். 300 பக்கம்.

6. சுரேஸ்வரரது சம்பந்தவார்த்திகம் மொழிபெயர்ப்பும் உரையும். 550 பக்கம்.

7. சைவசித்தாந்தத்தின் கடவுள் தத்துவம். 1956. ஸ்ரீ காசிமடத்து அறக்கட்டளை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சார்பில் வடநாட்டுப் பல்கலைக் கழகத்திற் சொற்பொழிவாற்றியதன் பயனான வெளியீடு.

8. சுரேசுவரரால் வளர்ந்த அத்வைதம் என்பது இந்த ஆண்டில் ஆராய்ந்து முடிந்த ஒன்று.

9. கேனோபநிஷத் மொழிபெயர்ப்பும் உரையும்.

10. மஹான்கள் என்று ஓர் அரிய அருள் வரலாற்று நூல். தென்னர் மொழிகளைப் போற்றுங் கழகத்தார் (South Indian Language Trust Board) வெளியீடு.

11. திருவண்ணாமலையில் உள்ள ரமணாஸ்ரமம் ரமணரிஷிகளது உபதேசங்கள், உள்ளது நாற்பது, அதன் அநுபந்தம் என்பவற்றின் மொழி பெயர்ப்பும் உரையும்.

12. இவை அல்லாமல் வேறு பலபல கட்டுரைகள் எழுதி வெளியிடப்பெற்ற உண்மை சென்னைப் பல்கலைக் கழகத்து ஆண்டு அறிக்கைகளால் விளங்குகின்றது.

13. கிறித்தவர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, விவேகானந்தர் கல்லூரிகளில் வாரத்திற்கோருநாள் கற்பித்து வரும் உபகாரமும் செய்துவருகின்றவர்கள்.

வாழ்க அருள்நந்தி மாமுனிவர்

திருப்பனந்தாளில் 18—9—1959 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ காசிமடாலயத்தின் அருகில், வரவேற்புச்செய்ய விரும்பிக் காலையில், அடியார்களும், அன்பர்களும், ஆசிரியர்களும், மாணுக்கர்களும், உள்ளூர் வெளியூர் மக்களும் ஆகப் பன்னூற்றுவர் காத்துக்கொண்டிருந்தார்கள். காலை $5\frac{1}{2}$ மணிமுதல் அது நிகழ்ந்தது. நின்றிருந்தவர்களுள் ஒருவர்க்கும் அதனுல் கால் வலிகூட இல்லை. இன்னும் வரவில்லையே தரிசிக்க நாழிகையாகின்றதே என்ற எண்ணம் பலர்க்கு இருந்தது. எல்லோரும் ஆடுதுறைவழிமேல் வைத்தவிழிவாங்காத விழியர்கள்; நிலக்கார்கள் ஒன்றன்பின் ஒன்ருய் வானக்கார்களைவிட வேகமாக வந்து கொண்டிருந்தன. மாயூரப் பெருமக்கள் (வரவேற்புக் குழுவினர்) 'அறுபத்தோன்று' என்னும் எண்கொண்ட அத்தனை நற்பொருள் களுடன் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீகாசிமடத்தின் இளவரசு வித்துவான், ஸ்ரீலஸ்ரீமகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் காட்சி தந்தார்கள். உயிர்கள் நோக்கியிருக்கும் வான் இதோ எழுந்தருள்கின்றது என்று அறிவித்தார்கள். சிறிது நேரத்தில் எதிர்நோக்கி யிருக்கப் பெற்ற வானும் வந்தது. வான்நோக்கிய எல்லா உயிர்களும் செழித்தன. அது வருமுன் அங்கிருந்த உயிர்களின் மன நிலையை அங்கிருந்து பார்த்தவர்தாம் அறிவர். மற்றவர் யாரும் அறியார். 'மற்றவர் அறியா மாணிக்கமலை' வந்தது. 'மதிப்பவர் மாமணி விளக்கு' வந்தது. அங்கு இருந்த எல்லாரும் 'கற்றவர்'களே ஆதலின், அக் 'கற்பகக் கனியை' 'விழுங்கும்' பாக்கியத்திலும் அக் 'கரையிலாக் கருணைமா கடலை' அணுகிக் களித்தாடும் யோக்கியத்திலும் 'குறைவிலா நிறைவை' எய்திய குணக் குன்றங்களாக விளங்கினுர்கள். அவ் விளக்கம் வந்த வானிலிருந்து மின்னும் அருள் விளக்கமே அன்றிப் பிறிதில்லை. தன்னிடத்தில் இருந்து வந்த விளக்கத்தைத் தான் ஏற்றுக்கொள்ளத் தடை யிருக்குமோ? தான் பெய்யும் மழைபோல் தன்மேல் பெய்யும் மலர்மாரியை ஏற்றது. அக் காட்சியைக் கண்டு உருகிய நெஞ்சமே நெஞ்சம். அந் நெஞ்ச மெல்லாம் தன்னைத் தான் 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று வியந்து எண்ணிக்கொண்டது. கேதாரம்

பிள்ளை (திருவாளர். G. சுந்தரேசம் பிள்ளை அவர்கள்) வாய் திறந்து சொல்லி மகிழ்ந்தார். எத்தனையோ பேர் சொல்லி யிருப்பினும், பிறர்கேட்கும் நிலையில் அங்கிருந்த குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் கூடிய குழாத்தொலி இடந்தரவில்லை.

அவ்வருளுருவத்து வானை, கோடைமழையை இருபாலும் அணுக்கத்திற் சார்ந்து கும்பிட்டு, முழுநோக்கம், முக்கால் நோக்கம், அரைநோக்கம், கால்நோக்கம், கடைக்கண்ணோக்கம், புன்முறுவல், 'என்றுவந்தாய்' என்னும் திருக்குறிப்பு முதலிய வற்றுள் ஒன்றனை அவரவர் புண்ணியத்துக்குத்தகப் பெற்றுக் களிக்கும் அன்பின் பெருக்கை அந்தந்த அன்பரே அளவிடற்பாலர்.

ஸ்ரீ காசி மடத்தின் முகப்பிற் சென்றது கருணைக்கடல். சென்ற கம்பீரம், கூட்டத்தின் குதூகலம், அனைவர்க்கும் அமைந்த சாந்தம், அன்பின் பெருக்கை அடக்கி ஆளும் அச்சம், ஹர ஹர முழக்கம், சிவ சிவ விளக்கம், சிந்தனை யடக்கம் எல்லாம் தனியே ஒரு தெய்வாதீனத்தில் யாவரையும் நிலைக்கச்செய்தன. யார்க்கும் சுவாதீனம் இருக்கக் கண்டிலோம்.

திருமகள் கட்டுக்குள் புகும் தடையில் தடையுற்று நின்றது கரைகடந்து சென்ற அன்பு வெள்ளம். கருணைக்கடல் கங்கை நீராடிவந்து காட்சி தரவேண்டியே அன்பு வெள்ளமும் கருணைக் கடலும் தனித்தனியாகச் சிறிது நேரம் இருந்தன.

அருட்கடல் அன்புக் கடலில் முழுகிற்று. திருமகள் விலாசத்திற் கொலுவீற்றிருக்கத் திருவருள் கூட்டிற்று. இளங் கடல் (ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்) முதருட் கடலை வழிபட்டு அன்புக் கடலுக்கு வழிபடும் நெறியை விளக்கியது. அந்நெறிதான் 'குரு வழிபாடு' இன்னது என்று உணர்த்தும் ஒப்புயர்வற்ற உண்மைச் சிவநெறி.

தருமையாதீனத்து 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டுச் சைவ சம்பிரதாயப்படி உய்க்கும் திருவருளும் குருவருளும் இயைந்த

உயர்பிரசாதம், அக் காசிமடத்தில் எவ்வாறு எங்ஙிலேயில் ஏற்றுக்கோண்டு பூஜிக்கப்படுகின்றது என்பதைச் சோல்லாமற் சோல்லிச் செய்கையிற்காட்டும் சீரிய வழிபாடே அது.

மாயூரப்பேருமக்களின் வரிசைப்போருள்கள் வரிசை வரிசையாக வந்தன. ஒவ்வோன்றும் அறுபத்தோன்று கோண்டன. அறுபத்தோருவகைப் போருள்கள். அவற்றை ஏந்திவந்தவர்கள் யார் ? சாதாரணமானவர்கள் அல்ல. அவர் எல்லாரும் செல்வத்திலும், கல்வியிலும், சீரிலும், சிறப்பிலும் பேரிய புள்ளிகள், ஸ்ரீமான்கள் V. சாமி ஐயங்கார், சீகாழி விசுவநாத முதலியார். காளியாயிகுடி ஸ்ரீநிவாசையர். B. திருஞானம் பிள்ளை B. A., B. L., M. A. ஜகநாதம் பிள்ளை, R. K. சுப்பிரமணியப் பிள்ளை, கனகசபைச் சேட்டியார், வேங்கு சேட்டியார், சிவநேசச் சேல்வர் இராமநாதையர் B. A. சிவார்ச்சனைச்சேல்வர் தியாகராஜ ஐயர், கிருஷ்ணமூர்த்தி பிள்ளை முதலிய பலரும் அந்த அன்புருவான நிகழ்ச்சியிற் கலந்துகோண்டார்கள்.

கணக்கிலடங்காத வாழ்த்துரைகள் பாட்டும் உரையுமாகப் படிக்கப்பேற்றன. பலமணிக்கணக்கில், கோலுவில் வீற்றிருந்த நாள் அத் திருநாள் அன்றி முன்னும் ஒருநாள் இருந்ததில்லை. பின்னும் ஒருநாள் வாய்ப்பது எளிதன்று. சிலர் படிக்க நேரம் வாய்க்காமல், தாம் கோண்டுவந்த வாழ்த்துப்பத்திரங்களைச் சமர்ப்பித்து மகிழ்ந்தனர்.

வாழ்த்துரைகளைத் திருச்சேவிமடுத்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள், "வீற்றிருந்து கருத்தை வேளியீடுவது தக்ஷிணாமூர்த்திக்கே உரியது. எழுந்து நின்று சோல்வதே எம்மனோர்க்கு உரியது" என்று, எழுந்தருளி வேளியிட்ட அரும் பேருங் கருத்துக்களை எல்லாம் அங்கே கேட்ட மக்கள் உள்ளங்களைத் தோட்டு, அன்புருவாக்கி அருளில் ஆழ்த்திக் குருமகிமையையும் சிவமகிமையையும் சைவசித்தாந்த சமயத்தின் மகிமையையும் ஓரளவு சிந்தனைக்குக் கோண்டுவந்து, உருக்கிவிட்டன. அவற்றின் சாரம்:-

நான் கூட்டத்தில் கலந்துகோள்ளவோ பேசவோ விரும்புவதில்லை. An once of action is better than tens of speechs



திருக்கயிலாய தரிசன யாத்திரை: (நந்திகும்பா) திருக்கயிலை மேற்குமுகத்தில் கயிலைநதிக்கரையில்
ஸ்ரீ கயிலைநாதனைப் பிரதிஷ்டைசெய்து வழிபாடுசெய்தருளல்

தீர்த்தபுரி பாணுசுர சம்ஹாரமான வெந்நீர் ஊற்றின் அருகில்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்ததிபர் காசிவாசி
ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களின்
61 ஆவது ஆண்டுத் தொடக்க விழா ஸ்ரீ காசியில் நடைபெற்றதில்

தருமையாதீனம் 25 குருமகாசந்நிதானம்
கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளின் ஆசியுரை வழங்கப்பெறல்

திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம் காசிவாசி
ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களின்
61 ஆவது ஆண்டின் தொடக்கவிழாவில் (11—9—59)



மதுரை, சிவதர்ம பாஸ்கர, திரு. ம. க. சுந்தரேசபட்டர் அவர்களால் அளிக்கப்பெற்றது.

என்ற ஆங்கிலவழக்கு மொழியை இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன் பேசப் பழகியதும் இல்லை. பேசாமல் அறம் புரிதலே சாலச்சிறந்தது, இவ்வாறு சிறப்பிக்கவேண்டா என்பதே என் கருத்து. ஸ்ரீமான். க, சுப்பிரமணிய அய்யர் B. A., அவர்கள், முதல் முதலாகத் தங்கள் அன்பைத் தெரிவிக்கும் பத்திரம் கொண்டுவந்து தந்தார், தமிழ் நூல்களை ஊர் ஊராய்ச் சென்று பெரு முயற்சியும் பேருழைப்பும் உற்றுத் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்த மகாமகோபாத்தியாய டாக்டர், உ. வே. சாமிநாதையர் பேரனார் அவர்கட்கு என் நன்றி உரியது.

இங்கே என்னை வாழ்த்திய எல்லாருக்கும் நன்றிகூறக் கடவேன். எல்லார்க்கும் தனித்தனி பெயர் சொல்லி நன்றியைத் தெரிவிக்க முடியவில்லை. அதனால் யாரும் வேறுபடக் கருத லாகாது. பொதுவாக இங்கு வந்திருக்கும் அன்பர் அனைவர்க்கும் சிறப்பாக மாயூரப் பெருமக்களுக்கும் என் நன்றி உரியது. B. திருஞானம் பிள்ளை அவர்களும் கேதாரம் (G. சுந்தரேசம்) பிள்ளை அவர்களும் இவ்வுபசாரத்தில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டிருப்பதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்! எனக்கு அறுபதாண்டு கடந்ததன் பயன் இத்தனை அன்பர்களை யெல்லாம் ஒருசேரக் காணக் கிடைத்தது. அறுபது வயது உற்றபின்பாவது பற்று அற்றுப் பரம்பொருளைப்பற்றிப் பிறவாத பெருநெறியைத் தேடிக்கொள்ள வேண்டி, இவ் வயதில் இத்தகைய நற்செயல்களை உலகோர் மேற்கொள்கின்றனர் என்று கருதுகின்றேன்.

காசியில் ஒரு பாராட்டு நடந்தது. அது மிக்க சிறப்புடன் விளங்கியது.

பண்டைக்காலத்தில் நடைபெற்ற சம்பிரதாயங்களுள் பல இந்தக் காலத்திலும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று திசை நோக்கித் தொழுவது. திக்கு நோக்கித் தெண்டனிட்டு வரும் பழக்கம் இன்றும் சைவமடாலயங்களின் சம்பிரதாயமாகும். சைவ வைணவ சமயங்கட்கும் இது பொதுவாகும்.

இலங்கையிற் சென்று கற்பரசியைக் கண்டு மீண்ட அனுமான், இராமபிரானிடம் போந்து, இராமனைத் தொழாமலும்

அவனுக்கு எதிரில் கால் நீட்டியும் சீதாதேவி இருந்த திசை நோக்கி விழுந்து வணங்கினன். அத்திசை நோக்கித்தொழுதான். அதைக் கம்பர்,

"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇநெடி திறைஞ்சி வாழ்த்தினன்"

என்றார். அதை இராமன் பார்த்தான். சீதையின் சீரிய கற்பிற்குச் சிறிதும் கேடில்லை என்றுணர்ந்தான். தன்னையும் சீதையையும் அபேதமாகக் கருதி, அவள் இருக்கும் திசைநோக்கி வணங்குவதே தனக்குச் செய்யும் வணக்கம் என்று கருதிய அனுமனது ஞானத்தை வியந்தான்.

"திண்டிறலவன் செயல் தெரிய நோக்கினன்
வண்டிய லோதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான்"

'திசைநோக்கித் தொழுகின்றான் எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்' குகன். இவ்வாறு திசை நோக்கித் தொழுது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிக்கு அடியேனுடைய வணக்கங்களையும் நன்றியையும் செலுத்திக்கொள்கிறேன்.

"என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னைநீ புரிநல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே"

என்னும் திருப்பாடலைப் பாடித் திருவருட் செயலுக்கு வணக்கஞ் செலுத்தினார்கள்.

இங்குள்ள அன்பர் எல்லார்க்கும் செந்திலாண்டவன் திருவருள் பெருகுக என்று வாழ்த்தியருளினார்கள். பின்னர் எல்லார்க்கும் திருநீறளித்தார்கள் சிற்சிலர் விடை பெற்றுத் திரும்பினார்கள். நண்பகல் மாகேசுவர பூசை நிகழ்ந்தது. எல்லோரும் தத்தம் இலையில் இருக்கும் மிச்சிற்

பொருள்களை நோக்கி, அவற்றின் மிகுதியால், நாம் சாப்பிட்டோமோ என்று ஐயுற்ருர்கள். மாலையில், தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானத்தில் வந்து வழிபாடு செய்தார்கள். அப்போது தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரை மலர் வாசித்துச் சூட்டப்பெற்றது. சூட்டியவர் வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தருமைக்கு எழுந்தருளியது

19—9—1959 சனிக்கிழமையன்று காலை $7\frac{1}{2}$ மணிக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தருமைக்கு விஜயம் செய்தார்கள். குருதரிசனத்தையும் ஆன்மார்த்தமூர்த்தியாகிய சொக்கலிங்க சிவதரிசனத்தையும் சம்பிரதாயப்படி செய்து இன்புற்ருர்கள். ஸ்ரீ சண்முக விலாசத்தில் திருமுறைப் பண்ணிசையின்பத்தைக் கயிலைக் குருமகாசந்நிதானத்தில் சில மணி நேரம் நன்கினிது பாடி ஊட்டினுர்கள். திருவமுதுகொண்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய விபூதிப்ரசாதம் முதலியவற்றையும் வஸ்த்ராபரணங்களையும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அன்பர்களும், ஸ்ரீ வைகுண்டம் திரு. T. M. குமரகுருபரம் பிள்ளை B. A., B. L. அவர்களும் அவர்களுடைய செல்வப் புதல்வரும் ஏற்றுப் போற்றி இன்புற்ருர்கள். விடையும் பெற்றுத் திருப்பனந்தாளை நோக்கினுர்கள். செல்வவிநாயகரை வழிபட்டுப் புறப்பட்டார்கள், ஆதீன சம்பிரதாயப்படி தருமைத் திருமடத்து அன்பர்கள் செய்த மரியாதையை ஏற்றுக்கொண்டு அருட்கார் ஓடுங்காரில் அமர்ந்தருளியது. அடுத்துவரும் திருநாளை நோக்கி அன்பர் அனைவரும் திருவருளையும் குருவருளையும் நாடியிருக்கின்ருர்கள்.

வேலூரில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளுரை

22—9—59

இன்று இங்கு நடந்த பாராட்டுவிழா எல்லாம் எமக்குத் தகுதி இல்லை என்பதை நீங்கள் எல்லாரும் அறிவீர்கள். ஆனால் குருஞானசம்பந்தப் பெருமான் திருவருளால் இயங்கக் கூடிய மடமே தவிர வேறு பேருக்கும் புகழுக்கும் பட்டத்துக்கும் இந்தத் தருமபுர மடம் சிந்தனை செய்யாதது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவனருளே கண்ணாகக் கொண்டு வாழ்வதற்கு ஆன பணிகளை முடிந்தவரை நாளும் இயற்றிவருகின்றோம்.

நம் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திருவாளர் முத்தையா பிள்ளை அவர்கள் இங்குத் தம் அன்புரையை நிகழ்த்தினர். எம் ஆன்மார்த்தமூர்த்தி 108 நாட்களாகப் பிரிந்த எங்கள் முத்தையா ஒன்று மற்றொன்று முத்தையா பிள்ளை அவர்கள். நமக்கெல்லாம் திருவருள் தோய்வு வேண்டும். திருவருள் இல்லாமல் வாழ முடியாது எவ்வளவு செல்வம் எவ்வளவு அதிகாரம் இருந்தாலும் ஆண்டவன் திருவருள் துணை இல்லையேல் ஒன்றும் நன்றாகாது. '' அருளற்றார் அற்றார்மற்று ஆதல் அரிது '' என்று நமது பெருந்தகையார் கூறியுள்ளார்.

இங்கே பல வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்கள். அவற்றை அன்பர்கள் படிக்கும் பொழுதெலாம், அவையனைத்தும் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளுக்கே உரியன என்ற எண்ணம் நம் உள்ளத்தே தோன்றிற்று.

நம் மக்கள் மாயூரம் சீர்காழிப் பெருமக்கள் செய்த வழிபாடுகளும் அவர்கள் அன்புந்தான் கயிலாய யாத்திரையிலிருந்து விரைந்து திரும்பியதற்குக் காரணம், இதைச் சொல்வது மிகையாகாது. எமக்கு மிகையோ முகமனோ கூறத் தெரியாது.

உண்மை கண்டவிடத்தில் சொல்லாவிட்டால் அவன் உண்மைத் தமிழன் ஆகமாட்டான். அன்பர்கள் அனைவரும் கயிலாய நாதனின் திருவருள் பெற்று வளம்பெருகி வாழவேண்டும் என்று ஆசி கூறுவதே இயலும்; வேறு என்ன சொல்ல முடியும்?

இனி, கயிலை யாத்திரையைக் குறித்து ஓரிரு வார்த்தைகள்; நம் அன்பர் திரு. முத்தையா பிள்ளையவர்கள் கயிலாய யாத்திரையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கயிலை யாத்திரையில் மக்கள் உயிர் நாயகனை நாடவேண்டும். அப்போதுதான் இன்பம் கிடைக்கும். யாத்திரையில் வேறு எந்த வசதிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம பஜனை இல்லாவிட்டால் வெற்றிகரமாகச் செல்லமுடியாது. அவன் நாமத்தைச் சொல்லு வதல்லாமல் தனிமையான இடத்தில் வேறு யாரைத் துணைக் கழைக்க முடியும். ஆண்டவனைக் கூப்பிட்டால்தான் உய்ய முடியும். எங்கும் அமைதியாக இருக்கும் அவ்விடத்தில் நம் குரல் இறைவன் திருச்செவிகளுக்கு எட்டும். "ஆபத்சகாயா! அநாத ரட்சகா!" என்ற கூப்பாட்டுக்கு அங்கேதான் உண்மைப் பொருள் விளங்கும். இறைவனுடைய திருநாமங்களை நல்ல பக்தியோடு சொல்லிக்கொண்டே யாத்திரை சென்றால் நல்ல பலன் கிடைக்கும். மக்களெல்லோரும் உணர்ச்சியோடு யாத் திரை செல்ல வேண்டும்.

கயிலை யாத்திரையிலிருக்கும்போது பக்குவ காலத்தில் அன்பர்களின் பேரன்புத்திறம் மிக நன்றாக விளங்கிற்று. இதனை நம் அன்புக்குரிய திருவாளர் முத்தையாப் பிள்ளை அவர்களும் இங்கே விளக்கினார். வரவேற்புரைகளைப்பற்றி அவர் சொன்னார். நிஷ்காமியமாகவே அனைத்தும் இருந்தன. அன்பின் முதிர்ச்சி யிலே - யாதொரு பயனையும் கருதாமல் 'வறியார்க் கொன்றீ வதே ஈகை' - என்று நாயனார் சொல்லுவதுபோல இருக்கிறது இந்த நிகழ்ச்சி. ஆண்டவனே நம் இலட்சியம்.

செயல் செய்தால் அவனைப் பாராட்டுவதே தமிழ்ப் பண்பு: தமிழன் செயற்கருஞ்செயல் செய்தோனைப் பாராட்டிவாழ்ந்தான்; வாழ்கின்றான் என்பதற்கு இவ்விழா ஒரு சீரிய எடுத்துக்காட் டாகும். இதுபோல் நம் அன்பர்கள் சைவப் பெரியோரைப் போற்றி என்றென்றும் வாழவேண்டும். 24 மணியில் சில நிமிடங்களாவது கடவுளைப் பிரார்த்தனை செய்து வாழவேண்டும்.

மதச்சார்பற்ற அரசாங்கம் என்று கூறுகிறார்கள். ஆயினும் அரசாங்கத்தில் நமக்கு என்னென்ன துணை புரிய வேண்டுமோ அனைத்தும் செய்கிறார்கள். அரசாங்கம் இல்லாவிட்டால் ஆலயங்கள் இயங்கமுடியாது. அந்த நிலையிலே சைவசமய வளர்ச்சிக்கு ஆவன கண்டு - திருவருளும், குருவருளும் பெற்று அன்பர்கள் நல்லன எல்லாம் பெற்று நீடுவாழ்க என்று செந்தமிழ்ச் சொக்கர் சேவடிகளைச் சிந்தித்துப் போற்றுகின்றோம்.

எல்லோர்க்கும் நமது நல்லாசி.

திருவாளர் மூத்தையா பிள்ளை, M. L. A. அவர்களின்

வரவேற்புரை

இங்குள்ள குருமகாசந்நிதானம் அவர்களே! நண்பர்களே!

மகாசந்நிதானத்தில் கயிலைபோய் வந்து மூன்று வாரங்களுக்கு மேலாகியும் இன்று கிருத்திகை நாளிலே நாங்கள் மகாசந்நிதானத்துக்கு வரவேற்புக் கொடுத்துத் தங்களைத் தரிசித்துத் தங்கள் அருளாசியைப் பெறவேண்டும் என்று எங்களுடைய மனம் விரும்பியதற்கொப்பத் தாங்களும் இந்த உயர்வான கிருத்திகை நாளிலே எங்களுக்கு அருளாசி கொடுப்பதற்குச் சம்மதித்து வரவேற்புக் கொடுத்த எங்களுக்கும் அருள் தந்து வரவேற்புக்களை யேற்று எங்களுக்கு ஆசீர்வதித்தது பற்றி எங்களுடைய மனமார்ந்த அடிபணிந்த வணக்கத்தை மகாசந்நிதானத்தின் திருவடிகளில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முக்கியமான இந்த விழாக் கமிட்டியார் - குழு அங்கத்தினர்கள் குறுகிய காலமாக இருந்த போதிலும்கூட இவ்வளவுதூரம் தங்களுக்கு வரவேற்புக் கொடுத்துள்ளதன் நோக்கம் - பல இடங்களில் வரவேற்புக் கொடுத்ததெல்லாம் அவரவர் கோரிக்கைகளுக்காக இருக்குமென்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள் - அதைப்போன்றது அன்று. ஆனால் இன்று புனிதமான வாழ்க்கையிலே வைத்தீசுவரன் கோவிலில் தாங்கள் அருள்கூர்ந்து கிடைக்கவேண்டுவன

எல்லாம் முன்னதாகவே எங்களுக்குக் கிடைக்கச் செய்திருக் கிறீர்கள் என்று சொன்னுல் அது மிகையாகாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறு கிடைக்கப் பெருதன எல்லாம் கிடைத்துவிடுவதன் பலனுகத் தங்களுடைய அருள் முன்னதாகவே எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்குமேல் அருள் வழங்க இன்றும் இங்கு எழுந்தருளியிருக்கிறீர்கள்.

நாங்கள் சென்ற ஐந்தாண்டுகளுக்கு முன்னதாக, உண்மையை உரைக்குங்காலை சபத்தினுலோ அல்லது வேறு எதனுலோ தங்கள் அருளாசி பெறவில்லை என்று நாங்கள் பட்ட கஷ்டத்தை உண்மையை உண்மையாக உரைக்கத்தான் வேண்டும். இன்று மகாசந்நிதானத்தின் அருளினுல் நாங்கள் பரவசம் அடைகின்றேம். காரணம் என்னவென்ருல், நாங்கள் விளங்காமல் செய்த தவறுதல்களை உணர்ந்துவிட்டோம் என்ற நிலையைத் தாங்கள் உணர்த்தியருளினீர்கள்.

குருமகாசந்நிதானத்தில் கயிலையைவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி மாயூரம், சீகாழி நகரவாசிகளுக்கு எட்டியதும் அவர்கள் உள்ளம் எப்படியிருந்தது என்பதை அவர்கள் அடைந்த மகிழ்ச்சியைக் காணும் சந்தர்ப்பத்தை நாங்களும் பெற்றேம், பொதுமக்களும், தங்கள் அடியார்களும், ஆதீனத்தை அடிபணிந்து நிற்பவர்களும் ஆங்காங்குத் தாங்கள் வாழ வாழ்த்திப் பொதுக்கூட்டங்கள் போட்டு மகிழ்ந்தார்கள். கயிலையிலிருந்து வரும் கயிலைநாதனைச் சந்திக்க வேண்டு மேன்று நாங்களும் நினைத்தோம்.

அதற்குமேலாக மகாசந்நிதானத்தில் கயிலையிலிருந்த பொழுது எங்கள் ஒப்பற்ற தலைவர் - இந்த இலாகாவின் அமைச்சர் திரு. பக்தவத்சலனுர் அவர்கள் தலைமையின்கீழ் இங்கு நான்கு விழாக்கள் வெகு சிறப்பாக நடந்தன. பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய தங்கள் சிறந்த சேவையை இங்குள்ளவர்கள் வெகு திறமையாகப் பொதுமக்களுக்குப் பயன் படும்படி நிகழ்த்தினுர்கள். அந்த விழாக்களில் மகாசந்நிதானத் தின் ஒளியை நேராகப் பார்க்கமுடியாவிட்டாலும் தாங்கள் கயிலையிலிருந்தபோதிலுங்கூட அந்தப் பரிசுத்தமான ஒளியின் காரணமாக அந்நாள் எங்கள் மனமும் மாறியது. எதுவும்

காலத்தில் தக்கது கிடைக்குமென்ற மனப்பான்மையைத் திருத்திய மகாசந்நிதானத்துக்கு நாங்கள் ஏதாவது தவறுகளைச் செய்திருந்தாலும் நீங்கள் மன்னிப்பீர்கள், மன்னித்துவிட்டீர்கள் என்று தங்கள் திருமுகத்தைப் பார்த்ததுமே அந்த எண்ணம் எங்களுக்கு வந்துவிட்டது. என்னென்ன காரியங்களைச் செய் தாலும் தங்கள் அன்பின் ஆசியினாலும் ஆதரவினாலும் எங்களை மன்னித்து ஏவலர்களாக நினைத்து எந்தக் காரியத்தைச் சொன்னாலும் அடிபணிந்து கடைப்பிடிக்கக் காத்திருக்கிறோம் என்று தாழ்மையாகப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். மேலும் குறிப்பாக எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்குக் கூடியிருக்கின்றவர்களுக்கு இங்கு வாசிக்கப்பட்ட வரவேற்பிதழ்கள் பற்றிச் சிறிது கூற விரும்புகின்றேன். இங்கு வாசித்தவர்கள் அத்தனைபேரும் தங்கள் சுயநலத்திற்காக வாசித்தவர்கள் அல்ல; சுயநலம் போதுநலத்திற் கலந்துதான் இருக்கிறது. அவரவர்களும் தங்களிடம் அருள் பெற்றவர்களும் ஆதாயம் அடைந்தவர்களுமாக எல்லோரும் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் 8 பிரிவினையாக நடத்தினாலும் அந்த 8 பிரிவினையையும் தாங்களும் செய்திருக் கின்றீர்கள் என்பதற்கு அத்தாட்சியாகத்தான் ஒவ்வோரு இலாகா வைச் சேர்ந்த அவரவர்களும் ஒவ்வோரு இலாகாவிற்கும் இங்கு வரவேற்பளித்தார்கள் அவரவர்கள் உள்ளத்தில் தோன்றியபடி அவரவர் நன்றியைத் தெரிவிப்பது |அவசியம் ஆதலால், அவற்றை யேற்றருளினீர்கள். முக்கியமாக இங்குச் செய்ததைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலிலே அருள் எங்க ளுக்கு எவ்வாறு கிடைத்ததென்றால் 3600 ஏக்கர் சாசுவதப் பகுதிக்கு இருந்த இந்தத் தேவஸ்தான நிலங்களை 800 குடும்பங் களுக்குப் பட்டாவாக மாற்றியது. இன்றைக்கு 800 குடும்பங் களில் தங்களால் விளக்கேரிகின்றன என்றால் இதில் மாற்று யோசனை இருக்கமுடியுமா என்று கேட்க விரும்புகின்றேன். இந்த ஊரில் பகல் உணவுத் திட்டத்தில் 100 குழந்தைகள் சாப்பிடுகின்றன என்று சொன்னால் அதைவிட வேறு என்ன கூற முடியும்? என் பையில் பல குறிப்புகளை எழுதிவைத்திருக்கிறேன். அவற்றை யெல்லாம் சொல்லக் காலம் போதாது.

இங்கு அமைச்சரவர்கள் சொல்லியதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். "தங்களுடைய ஆளுகையிலிருக்கிற மடமும் தேவஸ்தானங்களும் தங்கள் காலத்திலே எங்கு பார்த்தாலும் செம்மையாக - தூய்மையாக - பரிசுத்தமாக தெய்வங்களெல்லாம் எவ்வாறு அலங்காரம் பண்ணவேண்டுமோ அப்படியே அமைந்திருக்கிறது. நான் மாகாணம் முழுதும் சுற்றிப்பார்த்தேன். தர்ம்புரத்தில் நிர்வாகம் பண்ணிவரும் கோவில்களைப்போல வேறு எங்கும் கிடையாது" என்ற வார்த்தைகளை அப்படியே சொன்னார்கள். நான் அதிகமாகச் சொல்லியிருந்தாலும் "நீ நினைப்பது தவறு;" என்று அவர்கள் எடுத்துரைத்து நாம் இன்னின்ன சட்டங்கள் செய்திருக்கின்றோம். அதற்குமேல் அதிகம் செய்கின்றவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும். நீயும் பாராட்டத்தான் கடமைப்பட்டிருக்கின்றாய்" என்று திறப்புவிழாவின்போது கூறினார்கள். அன்றைய தினமே என் மனமும் மாறியது. நான் செய்த தவறுகளை உணர்ந்தேன். அன்றைய தினமே மக்கள் மகிழ்ச்சியை உள்ளபடியே தெரிவிக்க எனக்கும் ஓர் சந்தர்ப்பம் கொடுத்திருக்கவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "அது தவறு. நான் உன்னைத்தான் பேசச் சொல்லவேண்டுமென்று எண்ணியிருந்தேன்" என்றார்கள். அன்றைய தினம் பேசியிருந்தால்கூட எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி இருந்திருக்காது. இன்றைய தினம் எனக்குக் கிடைத்த இந்த சந்தர்ப்பம் நீங்கள் எனக்குச்சொந்த முறையிலே கொடுத்த கௌரவத்தைத் தக்க முறையிலே நான் நடந்துகொள்ள வேண்டும். அந்தக் கௌரவம் சாதாரணமானதல்ல, சுயநலம் கருதாது பொதுநலத்துக்காகவே வாழ்கின்ற எனக்கு இந்த கௌரவத்தை இன்று கொடுத்தமைக்கு ஏற்ப பொதுமக்கள் எனக்களித்த இந்த அலாதியான கௌரவத்துக்கேற்ப என்றென்றும் அடிபணிந்து என் வழிகளை திருப்பிநடக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுமக்கள் எல்லோருக்கும் வராதவர்கள் வந்தவர்கள் எல்லோரும் ஆதீனத்தோடும் தருமகர்த்தர்களோடும் ஒத்துழைத்துச் சேவை செய்யவேண்டும். இன்பம் அடையவேண்டும். தாலூகா சார்பிலும், விழாக் கமிட்டியினர் சார்பிலும் உறுதியைக் கூறி நன்றியைத் தெரிவித்து வணக்கம் செலுத்தி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

தேவஸ்தானச் சார்பில்
22—9—59 செவ்வாய்க்கிழமை அன்று குருமாமணியின்
திருவடிக்கண் சார்த்திப் போற்றிப் புனைந்த

வரவேற்புரை மலர்

மலர்தலையுலகில் புற இருள் கெடத் தோன்றுவது பலர் புகழ் ஞாயிறு. அதுபோலத் திருவருள் வேட்கையுடைய அன்பர்க்குச் சமய பூமியில் அஞ்ஞான இருள் கெடத் தோன்றி எப்போழுதும் ஒளி பரப்பி விளங்கும் மெய்ஞ்ஞான சூரியன் வீற்றிருப்பது சைவாதீனம். மெய்ஞ்ஞான சூரியன் திருக்கயிலாய மலையின் உச்சியை அணி செய்பவன். அப் பரமசிவனே பரா சத்திருபியாய்க், குடிலையினின்றும் நாதம் விந்து அக்ஷரங்களின் வடிவாய் ஈசாநாதி பஞ்சப்பிரமமநுக்களாகிய சத்திகளாய், சதாசிவமூர்த்தியாய், வேதசிவாகமருபியாய், அவற்றின் சாரமான சிவஞானருபியாய் விளங்குகின்றான். 'மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே' என்று திருவாசகம் அழைக்கும் உண்மை இதுவே. இவ்வுண்மையே சிவஞானத்துக்குத் திருக்கயிலாய பரம்பரை முதன்மையாதலைப் புலப்படுத்துவது. பரமசிவன் சதாசிவமூர்த்தியாய்த் தற்புருட முதலிய நான்கு திருமுகங்களால் தோற்றுவித்த நான்மறையை நான்முகனுக்கு அநந்ததேவர் வழியால் அருளினான். ஈசானம் முதலிய ஐம்முகங்களால், காமிகம் முதலிய இருபத்தேட்டு ஆகமங்களைத் தோற்றுவித்துப் பிரணவர் முதலிய பதின்மர்க்கும் (சிவபேதம்) மகாருத்திரர் முதலிய பதினேண்மர்க்கும் (உருத்திர பேதம்) ஒவ்வொன்று அளித்தான். அவை எல்லாவற்றையும் அநந்ததேவர்க்கு ஒருசேர நல்கினான். அநந்ததேவர் சீகண்ட ருத்திரர்க்கு அருளினார். அவர் கணங்கட்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் அளிக்க முதலில் நந்திபெருமானுக்கு நல்கினார். அவர்க்கே உண்மை உணர்த்தச் சிவஞானபோதத்தையும் தந்தார். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர்கட்கு உபதேசித்தது சிவஞானபோதமே. அவர்பால் உபதேசம் பெற்றது அகச்சந்தானம். அதன்வழிவந்தது புறச்சந்தானம். அதன் முதல்வர் மெய்கண்டார். அச் சிவஞானபோதத்தைத் தமிழ் முதனூலாகத் தோற்றியருளிய மெய்கண்டசந்தானம் திருக்கயிலாய பரம்பரையில் வந்தது அச் சிவஞான பரம்பரையில்

தோன்றிய இவ்வாதீனத்தின் இருபத்துநான்கு குருமகா சந்நிதானங்கள், அறிவுருவான திருக்கயிலாயத்திலே இன்ப வுருவாய் வீற்றிருந்தார்கள் என்ற இவ்வுண்மைகளையெல்லாம் உணர்ந்த நம் குருமகாசந்நிதானம் ஒன்றே பூலோக கயிலாச கிரியைத் திருவருள் வலிமையால் கண்டு கண்டு உள்ளம் குளிரக் கண் குளிரப் பெற்றது. உடன் ஏகிய பரிவாரங்களுக்கும் அச் சிவபுண்ணியப் பயன் வாய்த்தது.

நம் குருமாமணி சிவபூஜா பரம்பரைத் தோற்றம் உடையது இளமை முதலாகச் சிவநெறியில் வழுவாதது. திருமுறைப் பாராயணம் புரிவது. ஜப தபங்களைக் கடைப்பிடிப்பது. ஸ்ரீ சொக்கநாதரை மிக்க பக்தி பயத்தோடும் வழிபட்டுவரும் அளவிலாத பெருமையுடையது. திருவருளே துணையாயும் வடிவமாயும்கொண்டு திகழ்வது. திருப்பணிகளையும் மகா கும்பாபிஷேகங்களையும் முன்பும் பின்பும் எவரும் எவ்வாற் றலும் ஈடும் இல்லை எடுப்பும் இல்லை என்னும்படி அளவிடற்கு அரியவண்ணம் செய்வித்து வருவது. நற்பொழுது போக்கிற்கு லக்ஷம் கோடியர்ச்சனைகளையும், வெற்றிக்குக் கொற்றவை யையும், அருளுக்கு அபிராமியையும், செல்வத்திற்குச் செல்வ முத்துக் குமாரக் கடவுளையும், சிவஞானத்துக்குக் குருஞான சம்பந்தரையும், பேரின்பத்துக்குச் சொக்கேசனையும் வைப்புச் செல்வமாகக்கொண்டு நல்வாழ்வு நடத்துவது. ஞானாபரணமே பூண்பது. முத்தி நிச்சயத்தில் ஐயம் உறாதது. சிவபோக சாரத்தை நுகர்வது. ‘உள்ளமலம் நீங்கி ஒங்கு சிவாநந்த வெள்ளம் திளைத்து அதுவாய்’ மேவிய அநுபவத்தைத் திருக் கயிலையிலே உற்றுக் கௌரிகுண்டம், மானசசரோவரம், கேதாரபுரோதாயம், முதலிய அற்புத தீர்த்தங்களில் மூழ்கித் தெளிந்தது. ‘பரானந்தமே கதியாகக்கொண்டு மற்றெல்லாம் துயிலிற் கனவு என மதியாதிரு’க்கும் மருந்தை எம்போல்வார் பிறவிநோய்க்கு அருளி வாழ்வித்து வாழ்வது. ‘சொல்லும் பொருளும் இழந்து சுகாநந்தத் தூக்கத்திலே அல்லும் பகலும் இருப்பது என்றோ கயிலாயத்தானே’ என்ற பட்டினத்தார் வினாவிற்குச் செயலால் இன்றே இருக்கக் கிடைத்தது என்று விடையிறுத்தவண்ணம் திருக்கயிலாயத்தைத் தரிசித்துவந்து இனிது வாழ்வது.

இன்னோரன்ன பன்னருஞ் சிறப்புக்களை யுடைய நம் குருமாமணி இத் திருக்கார்த்திகை நன்னாளில், வழிபடும்

பழமையைப் புதிதாகத் தோடங்குகின்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடி மலர்களைப் பூரண கும்பத்துடன் எதிர்கோண்டு வணங்கிப் போற்றிப் போன்மாலை நன்மாலை சோன்மாலைகளை அணிந்து வழிபட்டு, அவர்களது அருள்வரவை ஆரா அன்புடன் ஏற்று, அடங்கா ஆர்வத்துடன் வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்தி வாழ்கின்றேன். ஸ்ரீ சேல்வ முத்துக்குமாரக்கடவுளும் ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்திய நாதப் பேருமானும் எம் குல தேய்வமாகிய குருமாமணியை அகலாத பேருந் துணையாதலின், என்றும் இனிது வாழ்வித் தருளும் என்னும் உறுதியை உடைய அடியேன் திரிகரண சுத்தியுடன் வாழ்க வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன.

அடியன்,

வேளூர் தேவஸ்தானம்
வைத்தீசுவரன்கோயில்
18—9—59

சொக்கலிங்கத் தம்பிரான்

கட்டளை விசாரணை.

வேளூர் வரவேற்புக் குழுவினர் வாசித்து அளித்தது

சைவத்தின் உதயகிரி தருமையாதீனம். அதன் உச்சியில் விளங்கும் சேஞ்ஞாயிறு கயிலைச் சந்நிதானம். அதன் கோழுஞ் சுடரே தேன்னுட்டும் எந்நாட்டும் பரவும் ஞானப்ரகாசம். "ஆளும் நாயகன் கயிலைகண்டு அல்லது மீளேன்" என்று அன்று சோல்லியது சோல்வேந்தர். இன்று சேய்தது தருமை நல்வேந்தர். இது சேயற்கு அரிய சேயல். தருமைப் பரமா சாரியர்கள் வீற்றிருந்த சிவஞான பீடத்தினது பேருமையின் அருமைப்பயனே இந்தப் பேரின்ப யாத்திரை. திருக்கேதாரம், பசுபதிநாதம், அமரநாதம் ஆகிய பிரசித்திமிக்க பேறலரிய யாத்திரைப் பயனது சிகரம் இது. சுந்தரர், சேரமான் பேருமாள் நாயனர், பேருமிழலைக்குறும்பனர், காரைக்காலம்மையார், ஔவையார் வரலாற்ரேடு இணைக்கும் உயர்வுடைய வாழ்வே இந்நிகழ்ச்சி. இது சோக்கநாதர் உண்மை வழிபாட்டின் பேரும் பயன்; அளவுட்படாத திருப்பணிகளின் ஆக்கம்; எண்ணற்ற கும்பாபிடேகத்தின் பலனுக வந்த இன்பம்; துர்க்காதேவியின் அருள்; சேல்வமுத்துக்குமாரசுவாமியின்

திருவருட்டுணே; நம்மனோர் கோயிலே வலம் வரச்செய்யும் சிவபுண்ணியத்தின் விளைவு ஆகிய இவற்றின் சாரமே திருக் கயிலேப் பரிக்கிரமம். ஜபம், தபம், சிவகன்மம், சிவதன்மம், சிவத்தியானம், தவவேள்வி, மௌனவிரதம், அன்னதானம், சொர்ணதானம், வஸ்த்ரதானம், வித்யாதானம் முதலியவற்றை இடைவிடாது செய்துவரும் ஒரு ஞான ரூபமே நம் கயிலேச் சந்நிதானம்.

திருக்கோயிற் பரிபாலனத்துக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் எங்கள் வேளூரில் அனாதை இல்லம், குடிதண்ணீர் வசதி, குழந்தைகட்குப் பால் வழங்கல், மாணவ மாணவி கட்குப் பிரார்த்தனே மண்டபம், பஞ்சமூர்த்திகளுக்கும் தங்கக் கவசங்கள், தங்கக்குடம் முதலிய பல அபிஷேகப் பாத்திரங்கள் செய்வித்து, செல்வமுத்தையாவுக்கு நவரத்ந அங்கி செய்வது முதலிய பல அறங்களைப் பணித்தருளும் கயிலேக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடிகளை வணங்கி, வருக, வருக, வருக என வரவேற்று வாழ்க, வாழ்க, வாழ்க என்று திரிகரண சுத்தியோடும் வாழ்த்துகின்றோம்.

வாழ்க கயிலேக் குருமகாசந்நிதானம்.

வேளூர்ப் பொதுமக்கள் போற்றி வாசித்து அளித்தது

மனமலர்க் கோயிலில் மன்னிய குருவே !

மெய்கண்ட தெய்வம் இத் தெய்வம் அல்லாற் புவியில் வேறில்லை '' என்ற அநுபவ வாக்கு கயிலே ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திற்கே பொருந்தும். கண்கண்ட தெய்வமாக இருந்து எங்களேக் காத்துவருகிறது. திக்கற்ற குழந்தைகளுக்கு ஒரு தெய்வமாய் சந்நிதானம் விளங்குவதை இவ்வூரிலுள்ள அநாதைக் குழந்தைகள் விடுதியே அனைவருக்கும் தெரிவிக் கின்றது. அன்று ஆண்டவன் சுந்தரருக்காக - நாவுக்கரசருக் காகத் தண்ணீர்ப்பந்தல் வைத்து நடத்திப் பொதிசோறும் கொடுத்தான். திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு ஞானப்பால் வழங்கச் செய்தான். இன்று எங்களுக்குக் குடிதண்ணீர் வசதிக்காகத் தானே இயங்கும் குடிதண்ணீர்க் குழாய்களை

வீதிகளில் வைத்துக்கொடுத்திருக்கிறது. பசித்துன்பம் போக்கக் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு அளித்துவருகிறது. அபிடேகம் ஆன ஆவின் பாலைக் குழந்தைகளுக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிறது. உயர்பள்ளிக்கு நிலங்கொடுத்ததை வாயாரப் பாராட்டிச் சொல்லிப் போற்றுகின்றோம். மாணவர்கள் மனத்தின் ஒருமைப்பாட்டைப் பிரார்த்தனை ஒன்றால்தான் அடைய முடியும் என்பதை அறிந்து, சந்நிதானத்தில் அமைத்துக் கொடுக்கும் பிரார்த்தனை மண்டபம் மாணவர்களது வாழ்வின் நினைவுச் சின்னமாக விளங்கும். புகைவண்டி நிலயத்தில் இறங்கியவுடன் ஸ்ரீ வைத்தியநாதரையும் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரரையும் தரிசனம் செய்யச் சந்நிதிக்கு எதிரே ஒரு சாலை அமைக்கின்றதைப் போற்றாதார் இல்லை. கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் நிர்வகிக்கப்பெறும் இங்குள்ள கோயிலைப் பாராட்டாத மக்களில்லை. கோயில் பிராகாரங்கள் கருங்கற்றிருப்பணி செய்திருப்பதையும், பிறவித் துன்பத்தை ஒழிக்கும் சித்தாமிர்த தீர்த்தத்தில் தூய்மையும் இறங்கி நீராடுவதற்கு ஏற்ற வசதிகளும் செய்திருப்பதையும் கண்டு மகிழ்கிறோம். அவை மட்டுமோ ? ஆண்டவனுக்காகத் தங்கக் கவசங்கள், குடை, கொடி, ஆலவட்டங்கள், பொற்பாத்திரங்கள் செய்வதை அறிந்து உலகம் மகிழ்கின்றது. இப்பொழுது ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு நவரத்தின அங்கி செய்யத் தொடங்கி இருக்கின்றது. எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் சந்நிதானத்தின் பேராற்றலைக்கண்டு புகழ்ந்து போற்றுகின்றோம்.

கொற்றவை அருளால் வெற்றிகள் எய்துவோய் !

தமிழ் கூறும் நல்லுலகத்தில் தருமையாதீனத் திருமடத்தை அறச் சாலையாகவும், கலைக்கூடமாகவும் விளங்கச்செய்து பல்லாயிரவர் வாழ்த்தி வாழ இப்படி நாட்டுக்கு ஏற்பக் காலத்திற்கு ஏற்பப் பல நல்ல தொண்டுகளைச் செய்துவரும் கண்கண்ட தெய்வமாகிய சந்நிதானத்தை வருக ! வருக ! என்று வரவேற்கின்றோம். கயிலைச் சந்நிதானம் கயிலைமலை போல் இவ்வுலகில் நின்று நிலைத்துப் பல்லூழி பல்லூழி வாழ்ந்து சிவநெறியையும் செந்தமிழையும் வேதாகமங்களையும் பேணி எங்கட்கு இன்னருள் வழங்கிவரச் செல்வமுத்துக்குமரன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம். வாழ்க, வாழ்க, வாழ்க.

வேலூர் அனாதையில்லத்துச் சிறுவர்கள் சமர்ப்பித்தது

கயிலைச் சந்நிதானம் கைலாசமலையை நோக்கி எழுந்தருளிய நாள் முதல், எங்கள் ஞானத் தந்தை இனிது திரும்பி வரவேணும் என்று வினைதீர்த்த விநாயகர், தீராநோய் தீர்த்தருளும் வைத்தியநாதஸ்வாமி, தையல்நாயகி, முத்தையா எல்லோரையும் கும்பிட்டு வந்தோம். எங்கள் பிஞ்சு உள்ளம் செய்த பிரார்த்தனை நிறைவேறியது.

உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க இடமும் கொடுத்து, எண்ணக் கடவுளையும் காட்டி அருளிய கயிலைச் சந்நிதானத்தை நாங்கள் எப்பொழுதும் நினைத்து வாழ்வோம், போற்றிப் புகழ்வோம்.

எங்களைக் காக்கும் வைத்தியநாதஸ்வாமி தரிசனத்துக்கு வரும் கயிலைச் சந்நிதானத்தை நாங்களும் தரிசித்து எங்கள் வணக்கத்தைத் தெரிவித்து ஆசி பெறக் காத்திருக்கின்றோம்.

வாழ்க, வாழ்க, வாழ்க.

சீகாழி தாலுகா வாசிகள், வைத்தீசுவரன்கோயில்.

திருக்கயிலாய கிரியைத் தரிசனஞ்செய்து. இமயம் முதல் தருமபுரம்வரை லட்சக் கணக்கான மக்களுக்கு அருட்காட்சியளித்து சிறப்புடன் இன்று இங்கு வருகை தந்தருளியிருக்கும் தருமையாதீனத்தின் அருளாட்சித் தலைவரவர்களே வருக! வருக!! அனைவருக்கும் அருளாசி கூறுகவெனகோரி வரவேற்கின்றோம்.

அரும்பணி யாற்றும் ஆத்மீகப் பெரியீர்! தீரமுடன் தாங்கள் மேற்கொண்ட திருக்கயிலாய யாத்திரை மக்களின் பக்தி பெருகச் செய்திருக்கிறது. தெய்வ நம்பிக்கை தழைக்கச் செய்திருக்கிறது. கயிலைநாதனின் கருணைபற்றி சிந்திக்கச் செய்கிறது. சுருங்கக் கூறின் மக்களிடையே ஆத்மீக உணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கின்றதெனலாம், [பாரம்பர்யமாகவே தருமையாதீனத்தின் குருமகா சந்நிதானங்கள் அனைவருமே பக்தி பெருகவும், தருமம்

தழைக்கவும் பல பெரும்பணி புரிந்து வந்திருக்கின்றனர். எனினும் மதிப்பிற்குரிய மகாசந்நிதானமாகிய தங்களின் அருளாட்சிக் காலத்தில் பக்தி பெருகுவதற்கு மட்டுமின்றி, மக்களின் கல்வி, ஆரோக்கிய அறிவு வளர்ச்சிக்கும் மகத்தான பல திருப்பணிகள் தாராளமாக நிறைவேற்றப்பட்டு வருவது போற்றுதற்குரியதாகும். இந்தத் தலத்தில் ஏற்பட்டிருக்கும் பல அபிவிருத்திகளே இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன வேனக் கூறின் மிகையாகாது.

அனுதைக் குழந்தைகளுக்கு அன்னமளித்து, அறிவு புகட்டி ஆத்மீகப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இளைஞர்களுக்குக் கடவுள் பக்தி ஏற்படச்செய்ய இவ்வூர் கழக உயர் நிலைப்பள்ளியில் பிரார்த்தனை மண்டபம் சுமார் முப்பதாயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பெற்று வருகிறது. ஏழை மாணவர்களுக்குப் பகலுணவு அளிக்கப்படுகிறது. மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக வாழவேண்டும் என்பதற்காக ஆலயத்திலேயே கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. எல்லோருக்கும் சுத்தமான குடி தண்ணீர் கிடைப்பதற்கான வசதி செய்திருக்கிறது. வேளியூர் வாசிகள் தங்குவதற்கு வசதியாகப் பிரயாணி விடுதியும் அமைக்கப் பெற்றிருக்கிறது. இத்துணைப் பேருந் தேய்வத் திருப்பணிகளையும் சிறப்புறச் செய்துவரும் தாங்கள் பல்லாண்டுகளாக விவசாயிகளின் அனுபவத்திலிருந்துங்கூட அவர்களுக்குச் சட்ட பூர்வமாக சோந்தமாக இல்லாதிருந்த சுமார் 3600 ஏக்கர் நிலங்கள் விவசாயிகளின் பெயருக்கே சட்டபூர்வமாகச் சொந்தமாக்கப்பட பேருதவி புரிந்தது போற்றுதற்குரிய பெருஞ்செயலாகும். அம்மையப்பன் அருளாட்சி நடத்தும் கயிலயங்கிரி சென்று தரிசனம் செய்து சிறப்புடன் திரும்பிவந்து மக்களுக்கு அருளாசி கூறும் குருமகா சந்நிதானம் அவர்களாகிய தாங்கள் நீடுழிவாழ இறையருள் புரிய இறைஞ்சுகின்றோம்.

கூட்டுறவுச் சாகுபடிதாரர் சங்கம் (Z - 509)

சிவநெறி விளங்கும் தவமணிக் குருவே வருக! வருக!!

அன்பினைப் பெருக்கி, ஆலயங் காத்து, அருமறைச் சிறப்பினை அகிலம் பரப்பி, அழகுறும் திருப்பணி அனேகங்கோண்டு,

அடியார் வாழ்த்த ஆட்சி செலுத்திடும் ஆகமக் குருவே! அன்புடன் வருகவே!

நித்தியப் பேரின்பம் நிலைத்திடயெங்கும் நிறுவிய பீடம் இருபத்தைந்தாய் நலமுறும் ஆட்சி நன்றே போற்றிடும் ஞான யோக குருவே வருக! சீரும் சிறப்பும், சிவகதி வாழ்வும், நின் சேவை உள்ளமும் செப்புதல் எளிதோ?

திடமுறு நெஞ்சங்கொண்டு திருக்கைலாயஞ் சென்று, திருவருட் சோதியான தேவர்கோன் பாதம் நண்ணித் திருவருள் பெற்ற எம்மான் திருப்பாதம் பற்றி நிற்போம்.

வேளூர்க் கூட்டுறவு விவசாயப் பாங்கு நிர்வாகஸ்தர்கள்

கண்கண்ட கயிலை ஆதீனம் என்னும் வகையில் நினைக்க முடியாத கயிலை யாத்திரையை இனிதே முடித்தீர்கள்.

தருமம் தழைக்கும் தருமையின் புகழைக் குமரிமுதல் இமயம் வரை பரப்பித் தங்கள் பேரருளால் தங்கள் நிழலில் வந்த யாவருக்கும் கயிலை தரிசனம் கிடைக்க அருள்பாலித்தீர்கள். நல்லாரைச் சார்வதும் நன்று என்ற முதுமொழிப்படி தங்கள் அருள்பாலிப்பால் இக்கால நிலையில் முடியாத அந்த யாத்திரை விக்கினமின்றி இனிதுமுடிந்தது ஸ்ரீ வைத்தியநாதன் அருளே யன்றி வேறல்ல.

வேளூர்
திறப்புக் கிராம சாசுவத அனுபோகதாரர்கள் சங்கம்

காலத்திற்கேற்ப சீலஞ்செய்யும் செம்மால்!

ஆலயப் பிரவேசமா? அனாதை ஆஸ்ரமமா? வெள்ள நிவாரணமா? புயல் நிவாரணமா எது எந்தக் காலத்துக்கு எந்த பகுதிக்குத் தேவையோ அதை அதை அங்கங்கே சென்று சென்று செய்து வழிகாட்டும் வள்ளலாகிய தங்கள் முயற்சி அரசாங்கத்திற்கே ஒரு வழிகாட்டியாய் இருப்பதை நாங்கள் இதுவரை பலமுறைகளில் கண்டு வருகிறோம். அப்படியே

இன்றைக்கும் உழவனுக்கே நிலம் சொந்தம் என்ற மனித உரிமையைப் பாதுகாக்கப் பலஆண்டுகளாகக் கனவிலும் நடக்கமுடியாதது எனத் தீர்ந்துபோன பிரச்சினையான திறப்புக் கிராமங்களில் உள்ள சாசுவத அனுபோகதாரர்களுக்குப் பட்டாஉரிமை வழங்க முன் வந்ததும், கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை அமைத்திருப்பதும் தங்களுடைய தீர்க்க தரிசனத் தன்மையையும், திருவருள் ஆற்றலையும் விளக்குவனவாய் அவற்றை அறிந்து மகிழ்ந்து, வியந்து போற்றுகிறோம்.

வைத்தீசுவரன்கோயில் அபிவிருத்திக் கமிட்டியார்

பழம்புகழைப் புதுக்க ஆதீன நிர்வாகத்தில் பல்கலைக் கல்லூரிகளையும், உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, தேவாரப்பாடசாலை, ஆகமபாடசாலை, அநாதை ஆஸ்ரமங்கள் இவற்றையும் நிறுவித் தெய்வத் தமிழோடு ஜீவனோபாயமான பொதுக் கல்வியையும், போதித்துச் செந்தமிழ்ச் சிறுவர்களை ஈடேற்றிச் சைவ சந்ததிகளாக வளர்த்து வரும் தங்கள் பெருங்கருணைத் திறத்தைப் பெரிதும் போற்றுகிறோம். தங்கள் வரவு நல்வரவாகுக.

தெய்வீக யாத்திரை செய்த திருவருட் செல்வா!

யாத்திரை மனித மனத்தைப் பலவகையில் பண்படுத்துகிறது. உருவாக்குகிறது; உயர்த்துகிறது. சிவயாத்திரைகளோ, தெய்வ நிலையைக் காட்டுகிறது. இம்முறையில் சிவமாக்கும் திருக்கயிலாய யாத்திரையை எங்கள் மனம் எல்லாம் பின் தொடர இனிமையாக முடித்து எம்மிடையே எழுந்தருளிய தங்களுக்கு நாங்கள் என்றென்றும் மீளா ஆளாய் வழிபாடு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்

கல்விக்கோடைபுரி கருணை வள்ளால்!

வேளூரில் இதுவரை உயர்நிலைக் கல்விநிலையங்கள் இல்லாத குறையால் நேற்றைய பரம்பரை வரையில் உயர்தரக் கல்வி இல்லாதிருந்தது. அக்குறையைப்போக்கத் தஞ்சைமாவட்ட நாட்டாண்மைக் கழகம் இவ்வூரில் கல்விக் கமிட்டி ஒன்றை நிறுவி அதன் வாயிலாக ஹைஸ்கூல் ஒன்றை ஸ்தாபித்து

நடத்திவருகிறது. அதற்குக் கட்டிடம் தேவையாய் இருந்த போழுது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கருணை பூத்துக் கல்வி நிலையத்துக்கு ஏற்ற இடத்தையும் தந்து உயிர்நாடியாகிய வழிபாட்டுக் கூடம் அமைக்க முப்பதினாயிரம் ரூபாய்களையும் மனமுவந்து அளித்தமையையும் பெரிதும் பாராட்டுகிறோம்.

நாங்கள் எப்போதும் தரிசிக்கின்ற திருக்கயிலைச் சிவ மாகிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய வருகையால் எங்கள் கிராமம் உயர்ந்தது, கல்வி நிலையங்கள் கருணை விளக்கம் பெற்றன. என்றைக்கும் திருவருளுடையோம்.

மருவத்தூர் கூட்டுறவு சாகுபடியாளர் சங்கம்

தவநிலை ஓங்கும் தருமைக் குருவே வருக! வருக!

தண்ணொளி திகழ தவநெறி தாங்கித் தாய்மை அன்பினும் சாலச் சிறந்து, திருக்கயிலாய பரம்பரை தன்னில், திருவருள் செழிக்க இருபத்தைந்தாம் பீடம் அமர்ந்தோய்! அருள்வழிவந்த அடியார் போற்றி. ஆகமக் குருவாய், அன்பர் நலனாய், மெய்த் தவஞானம் மிகுந்து தழைக்க மாமறை கற்று, மன்னிய யீசன் மலர்ப்பதம் போற்றிச் செம்பொன் ஆலயம் சீர்பெற விளக்கிடும் தம்பிரான் போற்றும் தவகுண சீலரே!!

தங்கள் திருவருள் நிலவ திருத்தல யாத்திரை திகழும் வண்ணம் திருக்கயிலாய தரிசனம் கண்டு, திவ்ய நீராடித் திருவும் உருவும் துலங்கிய துறவோய்! நின்பாத தெரிசனம் கண்டே உள்ளம் களிப்படைகின்றோம்.

கதிராமங்கலம் டெவலப்மெண்டு கமிட்டி

சிவநிலை விளக்கும் குருமுனி வருக!

மறைமுடி விளக்காய், மாதவக்குருவாய், பிறைமதி யீசன் பேரருள் திகழ, பொறையும், பொற்பும் பொலிவுறக்கொண்டு. உறையும் பதியாய் தருமபுரமதில்வைகி அன்பு செறிந்த ஆட்சி பேணி அடியார் குழாங்கள், அனுதினம் வாழ்த்த அரசு செலுத்தும் ஆகமச் சுடரே வருக.

தத்துவஞான தனிப்பெருங் குருவே வருக! வருக!

முத்தமிழ் போற்றி, முதுமறைபேணி, கற்றவர் சிறக்க களிப்புடன் பரிசுகள் நல்கி, கோற்றவன் விளங்கும் கோயில் சார்ந்து பற்றிய அன்னம் பலவோர்க்கீந்து நற்றவம் சிறக்கக் நாளும் நடத்திடும் நறறமிழ்ஞான நாயகமே வருக.

தூய மாமறைகள் எல்லாம் துதித்திடும் கைலை சென்று, பாயவோர் கருணை வெள்ளம் பற்றிய பாங்கிளேடு ஆ··· வாழ்வின்பமெல்லாம் அருளது தனதாய்ப்பெற்று நேயமாய் ஆட்சிகாணும் நீதியே குருவே வாழி.

வேலூர் திருவள்ளுவர் வாலிபர் சங்க பக்தகோடிகள்

அன்பு விளங்க ஆகமக் குருவாய்
அடியார் போற்ற ஆட்சி நிகழ்த்திடும்
தன்னிக ரில்லாத் தவமணிக் குருவாய்
தருமை நகரில் திருமடங் கோண்டு
இன்பத் திருவருள் யெங்கணும் பரப்பி
இருபத் தைந்தாம் பீடம் அமர்ந்து
சின்மய ஞான சுப்ர மண்யராய்
சீர்பேறும் நாமம் சிறப்புறக் கோண்டோய்
ஓங்கும் அருளால் உயிர்கள் தழைக்க
உயர்பேறு தவநிலை உளமது கோண்டோய்
நீங்கும் மருள்நேறி நீடுறு துன்பமும்
நிகழுறும் புவியில் நிலையுரு வண்ணம்
தாங்கிய வேடம் தவப்பயன் அன்றே
உன்னொளி எங்கும் உலவித் திகழ
உயர்பேறு மறையின் உண்மை விளங்கி
வாழ்வுறு சிவகதி வற்றுக் கருணையை
வேண்டி நின்றனே வாழ்கயெம் எம்மான்
மன்னிய ஆட்சி மகிமை சேலுத்திடும்
வள்ளல் பேரும! வாழ்கநின் பேரருள்
அருவுரு வாகிய அம்பல நாதனை
கைலை யீசன் கங்கா தரனை
கற்பகம் விளங்கும் கண்ணுதற் கடவுளை
தோழுது புரண்டுத் தோத்திரம் பாடித்
திருவருள் பெற்ற குருவே வாழி!

வேளூர் பஞ்சாயத்துத் தலைவர்களும், அங்கத்தினர்களும்

சைவம் காக்கும் தனிப்பெருந் தலைவ!

சமய ஒழுக்கமே அரண்: சமயமே அமைதி நிலைக்களன், சமயமே சாந்த சாகரம் என்பதைத் திருவுளத்துக்கொண்டு, அதற்கு இடையூறு வராமற் பாதுகாப்பதற்கும், இடையூறு வந்த காலத்து அதனை நீக்கிச் செந்நெறியிற் செலுத்துதற்கும், மேலும் மேலும் மக்கள் அனைவரும் பரிபாகம் பெற்று வாழ்வ தற்குமாகச் சிவபெருமானே சைவப் பாதுகாவலரான பரமா சாரிய மூர்த்திகளாக எழுந்தருளுகின்றார்கள் என்பதை ஆக மங்கள் அறிவிக்கின்றன. அம்முறையை ஒட்டிக் கண்கண்ட குருமஹானாக அவனியில் எழுந்தருளி இருபத்தைந்தாவது பட்டத்து வீற்றிருக்கும் தங்கள் கருணைத் திருவோலக்கத்தைப் போற்றுகின்றோம். தங்கள் வரவு எங்கள் புண்ணியம்,

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களே!

ஆதீனம் என்பது அவிச்சின்ன ஆசாரிய பரம்பரை: அருளூற்றிலிருந்து பெருகிவரும் ஆனந்தப் பேராறு. திருக் கயிலை உச்சியில் தோன்றி உலகம் முழுவதையும் தூய்மை யாக்கும் தெய்வீகக் கங்கைப் பெருக்கு. அதன் அனுபவ அணை இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாகிய தாங்கள். இப்படி எங்களுக்கு எளிமையிற் கிடைத்த பெருமைக் கருவூ லத்தைப் போற்றி இருமையும் பெற்று மகிழ்கின்றோம் வரவேற்கின்றோம்.

திருக்கயிலைச் செல்வ!

இதுவரை மகாசந்நிதானம் அனைவரும் திருக்கயிலாயப் பரம்பரையினராகத் தோட்டாரைத் தோட்டுத்தோன்று தோட்டுத் திகழ்ந்து வந்தார்கள். இருபத்தைந்தாவது தலைமுறையாக வந்த தாங்கள் திருக்கயிலையைத் தோட்டு வலம் வந்து, தோழுது. சிவப் பரம்போருளை சித் சக்தியை நேரே கண்டு சிவானந்த வாழ்வில் திளைத்து உலகெல்லாம் உய்ய எங்க ளுடைய தெய்வீக வாழ்வில் புதுமுனையைத் தோன்றச் செய் திருக்கின்றீர்கள். தங்கள் வரவு சிவ பரம்போருளின் திரு வோலக்கம். தங்கள் ஆசி சிவனருளாசி: தங்கள் பிரசாதம் சிவப்பிரசாதம் எனப்போற்றுகின்றோம்.

திருப்பதிக்கு வருகின்றவர்கள் அனைவரும் திருவேங்கடமுடையானுடைய அருட்பெருக்கை வீதிகளிலும், விடுதிகளிலும் உண்ணும் நீரிலும் உணவிலுமாகக் கண்டு, அனுபவிப்பது போலத் தாங்களும் வேளூரில் உண்ணும் நீரிலும், உணவிலுமாகக் கண்டு சுவைக்க உண்ணுநீர்க் குழாய்களை அமைத்திருப்பதை நுகரும் யாத்திரிக அன்பர்கள் மனம் நிறைந்து போற்றுகின்றார்கள்.

வடக்குவீதி மேலவீதிகளைத் திருத்தம் செய்ய இரண்டாயிரம் வெண்பொற்காசுகளை அளித்ததை மிகப் பாராட்டுகிறோம்.

வைத்தீசுவரன்கோயில், வர்த்தக சங்கத்தார்

மதுரைச் சோக்கனின் அருளைப்பெற்ற குருமணியே வருக!

எழுதாத மறையளித்த எழுத்தறியும் பெருமான் காளத்தி மலைக்கொழுந்தாயும், கயிலைவாழ் கண்ணுதலாகவும் எழுந்தருளியிருப்பதை மனங்களிப்பக் கண்குளிரக் கண்டு வந்த கருணைக்கடலே வருக!

நஞ்சையுடைய பாம்புகளும் வஞ்சனை நிறைந்த மிருகங்களும், தீநாளும், கோளும் ஆலவாய் அருள்பெற்ற அடியவர்களுக்கு ஒன்றும் செய்யாது என்பதை மெய்ப்பித்த மாசிலா மணியே வருக!

கயிலைமலையிருக்கும் திக்குநோக்கி வழிபாடு செய்தலே பேரின்பம் பெறலாம் என்பார்கள் அடியார்கள். கயிலைமலையையே கண்டு கயிலை நாதனின் அருள்பெற்று கண்கண்ட கடவுளாக விளங்கும் குருமணியே வருக வருக எனவாழ்த்தி வரவேற்கின்றோம்.

வைத்தீஸ்வரன்கோயில் கழக உயர்நிலைப்பள்ளி,
தலைமை ஆசிரியர்,
எஸ். வீராகவன் பி. ஏ., எல். டி.,

எழிலுறு கயிலையின் காட்சி கண்ட குருமணியே வருக!
ஆகமம் கற்ற அருளே வருக!!

மாக்களிலிருந்து மக்களாகப் பிரிப்பது கல்வி. அக் கல்வீ யின் பயன் இறைவனைத் தொழுதல் என்பதையறிந்து அறிவுக் கல்வியோடு அருட்கல்வியைப் பெற வழிபாட்டு மண்டபம் கட்டி உமையுறுபாகன் அருளைப் பெறச் செய்த தவமணியே வருக! உளம் வேண்டியதைச் செய்ய உடல் உறுதியுடன் இருக்க வேண்டுமென்பதையறிந்து அவ்வுடல் உறுதிபெற விளையாடு மிடந் தந்து நெஞ்சில் உரத்தையும் நேர்மைத் திறத்தையும் வளர்க்கும் சிவக்கொழுந்தே வருக! வாழ்க !!

வேலூர். ஜில்லாபோர்டு ஆரம்பப் பாடசாலை,

ஆசிரியர்களும், மாணவர்களும்

கயிலை கண்ட கருணைக் கடலே! அறவழியின் சிகரமே !! ஆத்மீக வளர்ச்சிக்கு அரும்பணிபுரிந்து வரும் தாங்கள் அறிவு வளர்ச்சிக்கும் ஆவன செய்துவருகிறீர்கள். எங்கள் பள்ளியில் பயிலும் பாலர்களின் பசிப்பிணியைப்போக்கப் பகலுணவு தந்து பைந்தமிழ் பயில வகைசெய்த தங்களை வாழ்த்தி வரவேற் கின்றோம்.

டாக்டர், R. தியாகராசன்

கண்ணுதல் காட்சிக் கயிலையில் கண்டு மீண்டோய் வருக!

அப்பரும் காணு அப்பெரு மலையினை அரன் அருளதனுல் அடிகள் நீர் கண்டுளீர் நும் மரபிற்குளே யார் அதைக் கண்டவர்? அப்பெரும் புகழதை அடிகள்நீர் ஏற்றுளீர். உத்தம அடிகளே! உலகோர் உம்மையே உவந்து புகழ்கின்றனர்.

இறைவனுலயம் தூய்மையாய்த் திகழ நிறை பணிகள் பல புரிந்தோய் வருக!

தங்கள் அருளாட்சியில் ஆலயங்கள் சிறப்பாயும், ஆண்டவ னின் அருட்பாடலைப் பாடுவித்தும், மக்களிடம் பக்தியை வளர்க் கப் பல சமயச் சொற்பொழிவுகளை நடத்தியும், திருப்பணிகள் பல புரிந்தும், சிறப்புறத் திகழும்படிச் செய்யும் தங்கள் அருட் டிருத் தொண்டினைக் கண்டு போற்ருதார் யாருளர்.

சீகாழியில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளுரை

25—9—59

சைவசமய ஒழுக்கம் உள்அழுந்தியகாலத்துச் சிவ சூரியன் என உலகவர் போற்றத் திருஞானசம்பந்தர் அவதரித்து அருள் பெற்ற தலம் சீகாழி. கற்றவர்கள் தொழுது ஏத்தும் சிறப் புடையது இத் தலம். கற்றல் கேட்டலுடைய பெரியவர் வாழ்வது இவ்வூர். இவ்வூரில் வசிக்கின்ற போதுமக்களாகிய நீங்கள் வரவேற்பு அளித்திருக்கின்றீர்கள். இவ் வரவேற்பும் போற்றுதலும் எமது குருமூர்த்தியாகிய குருஞானசம்பந்தரது திருவடிகளுக்கே உரியன. அவரது திருவடியில் கொண்டுள்ள பக்தியே யாத்திரையை இனிது முடித்துக்கொடுத்து இருக்கிறது. இறைவனுக்கு நீங்கள் எல்லாம் செய்த அர்ச்சனையும், வழிபாடும் யாத்திரையைக் கூடிய விரைவில் எளிமையாகவே முடித்துக் கொடுத்து இருக்கின்றன. இவ் யாத்திரையால் பல அனுபவங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் மிகவும் முக்கியமானது பிரார்த் தனையும் வழிபாடும் ஆகும். மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் சமய வாழ்வு மிகவும் இன்றியமையாதது. நாம் ஒவ்வொரு நாளும் செய்கின்ற நன்மை தீமைகளை இறைவன் கணக்கெடுத்து வருகிறான். நலம் செய்தார்க்கு நன்மையும், தீங்கு இழைப் பார்க்குத் துன்பங்களும் அவன் அருளால் கொடுக்கப் படுகின்றன. இக் கருத்தை அப்பர் சுவாமிகள்

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

என்று அருளியுள்ளார்கள். "ஆளும் நாயகன் கயிலை கண்டல் லால் மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன் என்றார் நமது அப்பர் சுவாமிகள். அவ்வுறுதிதான் அவருக்குக் கயிலைக் காட்சி காட்டிற்று. இன்று நாங்கள் காணத்தந்தது அவரது

அருட்பாடல்களை அன்றுடம் பாராயணம் செய்வதே வாழ்க்கைக்குப் பெருந்துணையாகி நின்றது. பொருளோ, புகழோ துணைசெய்யமுடியாது இந்த யாத்திரையில். சுருங்கச்சொன்னுல் இறைவன் திருவருள் இருந்தாலன்றிக் கயிலைநாதனைக் காண்பது அரிதாகும் என்பது எங்கள் அநுபவம். உங்கள் எல்லோருக்கும் கயிலைநாதன் திருவருள் உண்டாவதாக ''

சீகாழி தேவஸ்தானச் சார்பில்

25—9—59 வெள்ளிக்கிழமையன்று குருமாமணியின்

திருவடிக்கண் சார்த்திப் போற்றிப் புனைந்த

வரவேற்பு மலர்

பூமகள் அருளைப் பொருந்தி நிலம்நீர்க்
காமுறு சோலைக் கவின்மிகு சோணுட்
டகத்திற காழியி லவதரித் தருளிய
ஞானசம் பந்தர் நற்பாண்டி நாட்டிலும்
வானசம் பந்தம் வாய்ந்தொளிர பெருமான்
பாண்டிய நாட்டில் பலர்தவப் பயனெலாம்
ஈண்டிய தெனஇலங் கெழிற்சீர் வில்லி
புத்தூர்த் தோன்றிய புண்ணிய மூர்த்தியாம்
ஞானசம் பந்தர் நண்ணியிந் நாட்டிலும்
அமணிருள் அகவிருள் அகற்றிச் சைவப்
பேரொளி பரப்பிய பேரரு ளாளர்
அவருள் பின்னவர் அருட்பரம் பரையில்
தவரெலாம் வணங்கவும் சைவம் ஓங்கவும்
தருமையம் பதிவாழ் சற்குரு ராய !
அமண்மா சறுத்த கவுணியர் பெருந்தகை
பிள்ளைமை விடுத்த தள்ளரும் குமாரத்
துள்ளதன் படிவம் உணர்த்துவ கடுப்ப
மாநிலத் தமர்ந்த ஞானசம் பந்தநின்
பொன்னடிக் கமலம் சென்னிவைத் திறைஞ்சுதும்
ஈண்டுனைத் தமியனேம் வேண்டுவது யாதெனின்
தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருக்கும்

பெருமையோ டினியொளி பிறங்கும் கயிலையும்
சார்ந்து போந்தது தகும்தகும் நினக்கே
சங்கபி டேகாதி சகலமும் ஏய்ந்து
பொங்கக் களிநடம் புரிந்தநற் செய்க்கும்
துங்கத் திருமுலை சுரந்தநற் றுய்க்கும்
தங்கக் கவசம் சார்த்திய மூர்த்தியே !
வருக ! வருக ! வாழ்க, வாழ்க.
பிரமதீர்த் தத்திற் பிள்ளையின் சரிதம்
பரமன தருளோடு பார்ப்போரறிய
வளவு நிறுவிய வள்ளால் வருக !
தெள்ளிய ஞானப் பிள்ளைவீற் றிருக்க
வெள்ளி மஞ்சமும் விளங்குபொற் றேரும்
திருப்பணி பலவும் திருமுறைக் கோயிலும்
பொருப்புறை பெருமான் புனிதமார் முத்துச்
சட்டை நாதர்க்குத் தகைமைகொள் விழாவும்
நிட்டையில் நிறுத்தும் நெடுந்திருப் பதிகக்
கல்லெழுத் துக்களைக் கவினுற நாட்டலும்
வழிபடு வோர்க்கெலாம் மதிமிகச் செய்தருள்
குருபர வருக ! குணமலை வாழ்க.
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்திய செப்பரும் பயனுல்
பெரும்பொருட் செலவும் பேரிடர்ப் பாடும்
அரும்பே ருழப்பும் அமைவுறச் செலினும்
காண்டற் கரிய கயிலைக் கேகி
வேண்டற் குரிய மெய்ப்பொரு ளொன்றே
துணையாக் கொண்டு துணையோடு மீண்டு
இனிதே வந்திங் கெழுந்தரு ளியதிரு
ஞானசம் பந்த நல்லருள் வேந்தனென்
றருந்தவர் துதிப்பவோர் பெரும்பெயர் நிறுவிய
தூயமா மணியே சுப்பிர மணிய
தேசிக முதல்வ சிறியேம் நறுமலர்
தூவிப் பொன்னடித் துணையெம் தலைமிசை
மேவிச் சுடரவும் வினையெலாம் தீர்க்கவும்
முப்பொறித் தூய்மையும் முழுப்பே ரன்புமுற்று

இங்கெழுந் தருளுக. எங்களை ஆள்க.
பொங்கு பேரருளைப் புரிக. வாழ்க,
வாழ்க, வாழ்க. வண்டினம் ஒலியோடு
சூழ்கழல் இணைதலை சூடிநின் றனமே !

அடியன்,

சீகாழி தேவஸ்தானம் } வித்துவான், முத்துக்குமாரசாமித் தம்பிரான்
25—9—59 கட்டளை விசாரணை.

சீகாழிப் பொதுமக்கள்

சமயாசாரியர் வழிச் செல்லும் சான்றோய் வருக! வருக!

சமயா சாரியர்களுள் திருஞானசம்பந்தர் ஞானக்கண்ணால் கயிலையைக் கண்டு பாடினார். திருநாவுக்கரசர் கயிலைக் காட்சியைத் திருவையாற்றினில் கண்டு போற்றிப் பரவினார். சுந்தரர் கயிலாயத்திற்கு நேரே பாடிச் சென்றார். நாயன்மார் களுள் சேரமான்பெருமான் சென்றார். காரைக்காலம்மையார் சென்று தரிசித்துத் திருவாலங்காடு திரும்பினார். சந்தானாசாரிய பரம்பரையில் இதுவரை எவரும் கைலைக்குச் சென்றதாகவோ சென்று திரும்பியதாகவோ கயிலாய பரம்பரை வரலாற்றுள் கண்டிலோம். முதன்முதலாகத் தாங்கள்தான் சென்று நலமே திரும்பி வந்திருக்கிறீர்கள் என்பதையறிந்து பெருமகிழ் வெய்துகிறோம். கயிலைநாதனைக் கண்டுவந்த சமயக்குரவர் மூவரும் எங்கள் காழிநகர் போந்து, காழிநாதனைப் பணிந்து போற்றியவர்களே. கயிலைமலையானைத் தரிசித்த தாங்களும் இத்தலத்திறைவனைத் தரிசித்திருப்பதும், தரிசிப்பதும் மிக்கப் பொருத்தமானதாகும்.

இன்பம் விரும்பாது வினைவிரும்பும் ஏந்தலே! வருக!

கடுங்குளிர் கொடும்பனி ஒருபக்கம். பெருமலைத்தோற்றம் ஒருபக்கம். காளி எனமுழங்கும் காளிகங்கையின் சீற்றம், கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் ஒற்றையடிப்பாதை வழி, இரத்தத்தைக்குடிக்கும் அட்டைகளின் சேட்டை ஒரு பக்கம், மூச்சைத் திணறவைக்கும் கணவாய்கள் தமிழ்ப் பண்பறியாத திபேத்தியக் கூலியாட்களின் தொல்லை, திபேத்திய

ஆட்சியைக் கைப்பற்றும் சீனர்களின் ஆதிக்கப்போராட்டம், வழிதெரியா வனுந்திரங்கள் முதலிய பல இடையூறுகளையும் விரக்தி, வைராக்கியம் என்னும விவேகத்தோடு தோலை உரத்தே அணிந்து, ஆளும் நாயகன் கயிலை கண்டன்றி மீளேன் என்ற மனத்திடத்தால் திருவருளையே துணையாகக் கொண்டு கடந்து கயிலாயயாத்திரையை இனிது நிறைவேற்றி எழுந்தருளியிருக்கின்றீர்கள். இதைக்காணும் நாங்கள் தங்கள் ஆதீன, அருட் பீடத்தின் பெருமையையும் தங்களிடம் உள்ள தெய்வ பலத்தையும் நன்கு தெளிகின்றோம். தங்கள் அருளாட்சியில் இது ஒரு புதிய திருப்பம் என்றே கருது கிறோம். ஆதீனங்களிடத்து மக்கள் கொண்ட மாற்றமான மனப்போக்கை இக்கயிலை யாத்திரை பெரிதும் மாற்றிவிட்டது என்பதை நன்கு உணர்கிறோம். இனி சமய மறுமலர்ச்சி தொடங்கிவிட்டது என்று நம்புகிறோம்.

தெய்வ வழிபாட்டால் தேசம் செழிக்கும் என்பதைத் தாங்கள் செய்துவரும் பஞ்சமுகார்ச்சனை, நவமுகார்ச்சனை, இலக்ஷார்ச்சனை, கோடி அர்ச்சனை முதலியவற்றால் நானில மக்கள் நன்குணர்ந்து தங்களைப் போற்றுகின்றனர். உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல், என்னைச் சிங்காரித்து இடர்ப் பட்டேன் என்றனர். தங்கள் ஆதீன முதல்வர் குருஞான சம்பந்தரும், தாயுமானரும், இறைவிக்கும் முருகனுக்கும் சொன்மாலை, பொன்மாலை மலர்மாலை அணிந்து அலங் கரிப்பதோ. தங்கங்கக் கவசம், நவரத்தினக் கவசம் முதலி யனவும் அணிவித்து வருகின்றீர்கள். அவனை அழகு படுத் தினால்தான் நாமும் அழகிய முறையில் வாழலாம் என்பதை மக்கட்கு உணர்த்தி வருகிறீர்கள். இச்செயல் பையப்பைய மக்களை மாகேஸ்வரன் பணிக்கு ஆளாக்கும் மாண்பினை எடுத்துக் காட்டுகிறது.

ஆதீனக் கோயில்களில் நித்திய நைமித்திக வழிபாடுகளைக் குறைவறச் செய்து மற்றைய கோயில்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாகத் தாங்கள் 27 கோயில்களிலும் வழிபாட்டை வளர்த்து வருகின்றீர்கள். புற இருள் நீக்கி ஒளி காட்டும் நட்சத் திரங்களைப் போல் தங்கள் ஆதீனத்தின் 27 கோயில்களும் மக்களின் அக இருள்போக்கும் 27 நக்ஷத்திரங்களாக அருள் ஒலி பரப்பிப் பிரகாசிப்பதை நாங்கள் மட்டுமா போற்றுகிறோம்.

அரசியலாரும் அதிலும் அறநிலையத்துறையாரும் நன்கு உணர்ந்து பாராட்டி வருகின்றனர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

கோலத்தால் அடியவராக, சீலத்தால் ஆசாரியனாக, காணமுடியாத கயிலைநாதனின் ஒளியைக் கண்ட சிறப்பால் சிவலிங்க மூர்த்தியாகத் தங்களைக் காண்கிறோம். குரு, லிங்க சங்கமத் திருமேனிகளில் அருள் வழங்கும் இத் தலத்திற்குக் குரு லிங்க சங்கமாக விளங்கும் தாங்கள் வழிபட எழுந்தருளி யிருப்பது தனித்ததோரு சிறப்பாகும். வருக! வருக! எனத்தங்கள் திருவடிகளைப் போற்றிப் பணிவன்போடு பக்தி சிரத்தையோடு பயபக்தியோடு வரவேற்கிறோம்.

சீகாழி சபாநாயகமுதலியார் கல்வி நிலைய ஆசிரியர்களும், மாணவர்களும்

தருமை யாதீனத் தனிப்பெருங் குருவே!
மறையோ ரேத்தும் மாதவக் கொழுந்தே
இறைவனே ரெழிலுட னிலங்கிடும் கோவே
எண்ணுதற் கரிய ஏற்றமாம் மலைபல
நண்ணியே கயிலை நாதனைக் கண்ட
பூவுலகம் புகழ் புண்ணிய மூர்த்தியே
மூவுல கமும்தொழு முத்தியின் வித்தே
புலவரைப் புரக்கும் புரவல! அவர்தாம்
நிலவரை யினிலினி நின்னரு ளினையே
தூக்கிற் றூக்கித் துதிபா டிடுநல்
வாக்கின் வேந்தே! வண்மைக் குரிசிலே
தனிப்பெருஞ் சைவம் தரணியிற் றழைக்கவும்
நனிபெருந் திருப்பணி நானிலஞ் செழிக்கவும்
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குந்
தேனினு மினிய தேவாரப் பாக்களைத்
திருக்கோ யில்களில் தினமு மோதவும்
உருக்கோ யில்பல ஒண்மையா யோளிரவுங்
கலைபயில் பள்ளிகள் கல்லூரி களுடன்
நிலைபெறு வறம்பல நித்தலு மியற்றியும்
அருளிய அன்பின் அருளா ரமுதே

தென்பெறு ஞான தேசிக! எந்தேவே
ஆளுடைப் பிள்ளையா ரமர்ந்தினி திலங்கி
நாளுடன் கோளும் நம்ப னடியார்க்
கேன்செயு மென்றே எதிரம ணிருளைத்
தன்செய லாற்றலாற் றகர்த்தெறிந் தோட்டிய
ஆழியே கொள்ளினும் ஊழியினு முவப்பிலாக்
காழியம் பதியுறை கறைமிடற் றண்ணலார்
ஆலய மதனி லாசிரிய ரனைவரும்
மாலய னறியா மதியணி முடியடி
நேரே கண்டியாம் நேக்குரு கினமே
ஊரே உவக்கு மோப்பிலா மணியே
வருக! வருக!! வளர்தவச் சீலரோ!
தருக! தண்ணருள் தரணியோர் தழைக்க
ஆழிசூ ழவனியி லனைவரும் மகிழ
வாழி! வாழி!! வையத்து வாழியே!!!

தொழிற்சாலையின் சார்பாக வ. சம்பந்தம்

தருமபுரத்து அமரும் கண்கண்ட தெய்வமே!

தருமையம் பதியில் குருவாய் அமர்ந்து பற்பல வகையிலும் தெய்வ பக்தியை நான்கு திசையிலும் பரப்பிவரும் தாங்கள் அண்மையில் கயிலை மலைக்குச் சென்று, தாங்களும் தங்கள் அணுக்கத் தொண்டர்களும் சுகமாய்த் திரும்பிவந்த செய்தி கேட்டும், தங்களை நேரில் தரிசித்தும் மகிழ்ச்சி அடைகிறோம். தங்கள் யாத்திரையில் தோன்றாத் துணையாயிருந்து அருள்செய்த கயிலை ஆண்டவனை வாயார வாழ்த்தித் தலையார வணங்குகிறோம். தங்களை வருக! அருள் புரிக! என வரவேற்கிறோம்.

அருளாட்சி செய்யும் தருமை அரசே!

அரசன் செங்கோல் செலுத்தி குடிமக்களை வளர்க்கிறான். அருளாட்சி செய்யும் தாங்களோ சைவப்பணி மூலம் தெய்வ நெறியை வளர்த்து வருகின்றீர்கள். தாங்கள் கயிலாயம் செல்லும் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அன்பு வழியே செல்லும் தங்களுக்கு எந்த அல்லலும் வாராதென்பதைக்

கண்கூடாக் கண்டோம். தருமைக் குருபரனுக இருக்கும் தாங்கள் கயிலை கண்டது முதல் கயிலைக்குருபரனுகவே விளங்குகின்றீர்கள். தங்கள் தரிசனத்தால் கயிலைப்பெரு மானையே தரிசித்த பேறு பெற்ருேம். தங்களின் கருணை போழியும் திருக்கண் மலரை எங்கள்மீது சார்த்தி அருளுமாறு வேண்டுகிருேம்.

ராம. ச. கோபாலகிருஷ்ணபிள்ளை

திருத்தருமை அமர் தேய்வக் குருமணியே!

உலகில் தேன்றிசைக் கயிலாயமேன்னும் திருத்தருமையில் சிவம் பேருக்கும் குருபரனுய் எழுந்தருளி இங்குள்ள மக்களுக்கு அவம் பேருக்கும் புன்னேறியை அகற்றித் தவம் பேருக்கும் நன்னேறியைப் புகட்டிச் சிவப்பணி சேய்தும், சேய்வித்தும் வரும் தங்களின் அன்பின் திறத்தையும், அருளின் ஆற்றலையும் இன்று நாங்கள் தேளிவாகக் கண்டோம். கயிலை சேன்றுவந்த தங்களைக் கைகூப்பித் தேரிசித்துக் களிகோண்டோம். தங்கள் திருவடி வாழ்க! வாழ்க!

சீகாழி - சேம்மங்குடி, S. பாலசுப்பிரமணியபிள்ளை.

கயிலாய பரம்பரைக் குருமகான் என்பதைச் சேயல் முறையில் சேய்துகாட்டிய எங்கள் தவப் பேருங்குன்றே!

கயிலை என்பது மனித இயல்பில் காணமுடியாத ஒன்று என்றும், கனவோ? கற்பனையோ? என்றும் சோல்லப்படுவது. அத்தகைய கயிலாய யாத்திரையை இன்று நனவாக மேய்ப் பித்தருளினீர். இவ்வுலக யாத்திரையை முடித்த தாங்கள் கயிலாய யாத்திரையும் சேய்யவேண்டுமேன்று எண்ணிய தங்கள் நோக்கமும் அதற்கேன எடுத்த ஊக்கமும், நினைவின் படி முடித்த சேயலாக்கமும் வியத்தற்குரியன. இத்தகைய பேறு இருபத்தைந்தாவது குருமூர்த்தமாய் எழுந்தருளும் தங்களுக்குக் கிட்டியதுபற்றி மகிழ்ச்சி யடைகிருேம். தன்னை-தம் வாழ்வை - இவ்வுலகை மறந்து இயற்கையின் சதிக்குக் கோஞ்சமும் அஞ்சாமல் ஒரே நோக்குடன் தாம் பிறந்த

இடத்தைக் காண விழையும் ஒரு தனி மகன் போலப் பெரு விருப்புடன் கயிலை சென்றீர். இறைவனைக் காணவேண்டு மென்ற தீவிரமான அன்பின் முன் இயற்கை தரும் எந்த அச்சமும் தோன்றவில்லை போலும். தங்களின் அன்பின் திறத்தைப் புகழ்வதா? தாங்கள் எண்ணியபடி தங்கட்கு அருளிய இறைவன் அருள்திறத்தைப் புகழ்வதா? தங்கள் புது வருகையை உளமார வரவேற்கிறோம். வாழ்க! நுந்தண்ணருள்.

கயிலை என்னும் திருமலையைக் கண்ட கருணை மூர்த்தியே!

தவமும் தவமுடையார்க்கு ஆகும், என்பதும் செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கோடார் என்பதும், ஆன்றோர் வாக்கு. தாங்கள் கயிலையைக் கண்டு வந்த ஒரு பேற்றால் தங்கள் தவத்தின் ஆற்றலை அறிந்தோம். கயிலாய பரம்பரைக் குரு என்பதையும் தாங்கள் மெய்ப்பித்தருளினீர். இமயத்தின் இதயம் என்னும் திருமலைக்குச் சென்று திரும்புங்கால், தங்கட்கு வழிநெடுக வழங்கிய வரவேற்புரையும் வாழ்த்துக் களும் எண்ணற்றன. திருக்கயிலை கண்ட அருட்பெரியாருள் தாங்களும் ஒருவர் என்பதை அறிந்தோம். தங்கள் புதிய வருகையால் - புதிய தரிசனத்தால் இன்றும் என்றும் யாங்கள் அடையும் இன்பங்கள் பலபல. சைவம் புரக்கும் தங்கள் திருவருட் செங்கோல் தழைத்து ஓங்குவதாகுக,

आगमप्रवीण साहीत्यशिरोमणि शिवाचार्य सोमसुन्दरशर्मा अर्चकः

॥ सानन्दं समर्पितेयं स्वागत पत्रिका ॥

आर्य भोः महा कैलासदर्शनानन्द मूर्ते !

स्वागतं, दिनंचेदं सुदिनं, तत्र भवतं। महाकैलास निवासभूत पार्वतीसनाथ परमेश्वरस्य अनन्य साधारणं दर्शनं अस्मदीयानां अनन्तानन्दं जनयति। नास्थिक प्रचार बहुलभूते अस्मिन् समये भवदीय श्री महाकैलास, केदार, नेपाल, अमरनादादि क्षेत्र दर्शन यात्राः सर्वेषां जनानां आस्थिक्य बुद्धिं अचञ्चलां भक्तिं च निरतिशयं उत्पादयन्ति।

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலைநகர்.

(மலர் 18 இதழ் 10 பக்கம் 656 இன் தொடர்ச்சி)

" ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும் " (புறநா - 152)

என்று கூறியுள்ளமை காண்க. இதனுல் குறிஞ்சிதிரிந்த பாலைப் பரலில் மட்டுமன்றி உடும்பு குறிஞ்சி நிலத்துப் புற்றிலும் வாழும் இயல்பினது என்பதுணரலாம். மலைவாழ் வேட்டுவர் இவ்வுடும்பினைப் பிடித்துக்கொன்று அதன் தசையை மிசைதலு முண்டு. வேட்டுவ ஆடவர்கள் உடும்பினைப் பிடித்து அறுத்து அதன் தோலை யுரித்துக் கொழுப்பைக் கொடுவந்து ஒடுவமரத்தின் கழிகளால் கட்டிய படலையுடைய சிறப்பில்லாத வீட்டு முற்றத்தில் உறவினர்க்கெல்லாம் கூறுசெய்து கொடுத்தற்காகக் கொள்ளி வைத்துக் கொளுத்துகின்றுர்கள். கொழுப்பைக் கொளுத்தியதால் உளதாய நாற்றம் தெருவெல்லாம் சென்று கமழ்கின்றதாம். இதனை

" ஆடவர் உடும்பிழு தறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீரில் முற்றில் கூறு செய்திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழும் " (புறநா - 325)

என உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் என்னும் உயர்மொழிப் புலவர் உரைக்கின்றுர். உடும்பின் கொழுப்பைத் தயிருடன் பெய்து புளிஞ்சோறு சமைப்பதுண்டு. இவ்வகையான புளிஞ்சோற்றைச் சிறந்த உணவாக மதித்து வேட்டுவர் தம் விருந்தினர்க்கு விருந்துணவாகப் படைப்பது உண்டு. ஒரு வேட்டுவ மாது தன் வீட்டிற்கு வந்த புதிய பாணர் கூட்டத்திற்கு இந்தப் புளிஞ்சோற்றை விரும்பி யளித்த நிகழ்ச்சியைத் தண்கால்பூட் கொல்லனுர் விவரிக்கின்றுர்

" ... ... குறுந்தா ளுடும்பின்
விழுக்கு நிணம்பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரோ டோராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் " (புறநா - 326)

என்பது காண்க. விதவை - சோறு ; இது மிதவை எனவும் வழங்கும். இந்த உடும்பின் தோலே யுரித்து வீரர் கையில் அணியும் கைச்சரடு செய்வதுண்டு.

" உடும்பு செய் பாணி நெடுந்தேர் வல்லர் " (புறநா - 333)

என்றது காண்க. ஆகுபெயரால் உடும்பு அதன் தோலே யுணர்த்திற்று. பாணி - கைச்சரடு. இது அம்பு எடுத்து எய்யுங்கால் கைவிரல்களில் காயம் படாமல் பாதுகாப்பாக அணியும் உறை. இனி பாணி என்பது தாளத்தை உணர்த்தும் சொல்லாகக் கொண்டு தாள சுருதியுடன் தட்டும் சிறுபறையைக் குறிப்பதாக வும் கொள்ள இடமுண்டு. உடும்பின் தோலால் சிறுபறை செய் வதை இன்றும் காணலாம். இவ்வுடும்பு தோல் உரித்தபின் தோன்றும் தோற்றத்தைப் பசியால் வாடும் பாணர் சுற்றத்தின் மருங்கில் மேற்பட்டுத் தோன்றும் எலும்புக்கு உவமையாக ஆலத்தூர் கிழார் கூறியுள்ளார்.

" உடும்புரித் தன்ன என்பெழு மருங்கிற் கடும்பு " (புறநா - 68)

என்றது காண்க. இந்த உடும்பினே நாயும் கொன்று கொணர்ந்து வேட்டுவர்க்குத் தருவதுண்டு என்பதும் அவ்வாறு தந்த உடும்பின் தசையை அறுத்துச் சமைத்து விருந்தினர்க்குப் படைப்பதுண்டு என்பதும் கடியலூர் உருத்திரங் கண்ணனர் கூற்ருல் உணரலாம்

" ஞமலி தந்த மனவுச் சூலுடும்பின்
வறைகால் யாத்தது வயின் தோறும் பெறுகுவிர் "
(பெரும்பாண் - 132,3)

என்பது காண்க. உடும்பின் கரு, பலகறை போன்று இருத்தலின் ' மனவுச் சூலுடம்பு ' என்ருர். இதனுல் இப்புலவரின் உற்றுநோக்குந் திறம் பெறப்படும்.

5. ஓந்தி

இது, ஓணான் என்று வழங்கப்படுகின்றது. இது வடிவ அமைப்பில் உடும்பினைப் பெரும்பாலும் ஒத்து, அளவில் சிறியதாக இருக்கும். இதில் பலவகையுண்டு. பச்சோந்தி யையே 'ஓதி' என்கின்றனர் புலவர். குவளை அரும்பு முறுக் கவிழ்ந்து மலர்தற்கு இந்த ஓந்தியின் கரிய அணலை உவமை கூறியுள்ளார் பரணர்

" வைவா லோதி மையண லேய்ப்பத்
தாதுறு குவளைப் போதுபிணி யவிழ " (அகநா - 125)

என்றது காண்க. இதனால் ஓந்தியின் வால் கூரியதாக இருக்கும் என்பதும் அதன் கன்னங்கள் கருத்திருக்கும் என்பதும் அவன் வாய் குவளைப்போதுபோல் இருக்கும் என்பதும் உணர லாம். (வை - கூர்மை, அணல் - கன்னம், தாது - மகரந்தம். போது - பேரரும்பு) இது பாலைவனத்தில் வற்றல் மரத்தில் வாழும் இயல்பினது. பொன்னிறமுடைய தலையையுடையது. வெயிலால் அழகிழந்த பாலைவனத்தில் கண்டார் துன்பமடையு மாறு மெல்ல நிமிர்ந்து அருகில் உள்ள ஞெமை மரத்தில் ஏறும் இயல்பினது. இதன் இயல்பை :

" வற்றல் மரத்த பொற்றலை யோதி
வெயிற் கவின் இழந்த வைப்பிற் பையுள்கொள
நுண்ணிதின் நிவக்கும் வெண்ஞெமை " (அக்கா - 145)

எனக் கயமனர் என்னும் புலவர் விளக்கியுள்ளார். பையுள் - துன்பம். பாலைவனத்தில் பசையற்ற வற்றல் மரத்தில் இருந்த தால் உணவு பெறாது உடம்பு மிக இளைத்துள்ள ஓந்தி விரைந்து ஏறமாட்டாது மெல்லமெல்ல ஞெமை மரத்தில் ஏறும் மெலிந்த நிலையைக் கண்டவர்கள் இரக்கத்தால் வருந்துவார்கள் என்க. அள்ளூர் நன்முல்லையார் என்னும் புலவர், இவ்வோந்தியின் முதுகு மயிர்ஒழுங்கு கருக்கு அரிவாள் போன்று இருக்கும் என்றும் சுரத்தில் வாழும் இயல்பினது என்றும் வழிச்செல்வோர் இவ்வோந்தியைக் காண்பது நன்னிமித்தமாகக் கருதுவர் என்றும் விளக்கியுள்ளார்.

" வேதின வெரிநின் ஓதி முதுபோத்து
ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும் கான் "
(குறுந் - 140)

என்றது காண்க. வேதினம் - கருக்கரிவாள், வெரிந் - முதுகு, ஓதி - ஓந்தி, போத்து - ஆண், புள் - நிமித்தம். இந்தப் பச்சோந்தி அடிக்கடி நிறமாறும் இயல்பினது என்பதையும் மக்களைக் கண்டு அஞ்சும் இயல்பினது என்பதையும் ஒருபுலவர் நுண்ணிதின் உணர்ந்து.

" வறங்கூர் கடத்திடை
வேனி லோதி நிறம்பெயர் முதுபோத்துப்
பாண்யாழ்க் கடையா வாகிப் பாங்கர்
நெடுநிலை யாஅம் ஏறுந் தோழில " (நற்றி - 186)

என்று, அதன் இயல்பெலாந்தோன்ற விளக்கியுரைத்துள்ளார். (' பாண்யாழ் கடைய வாங்கி ' என்ற பாடம் பிழையானது எனத் தோன்றுகின்றது) அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தியின் வியத்தகு நிலையை நன்கு காணவேண்டும் என்னும் நயப்பால் வழிச்செல் பாணர் வற்றல் மரத்தில் இருந்த பச்சோந்தியைப் பிடிக்கத் தம் யாழ்க்கோட்டினால் கீழ் இழுக்க முயன்றார்களாக, அவ்வோந்தி அந்த யாழ்க்கோட்டிற்கு எட்டாதாகிப் பக்கத்தில் உள்ள நெடிய யா மரத்தின்மேல் ஏறும் தொழிலையுடையதாயிற்று என்க. இதுகாறும் கூறியவற்றால் பச்சோந்தி கூரிய வாலை யுடையது. கருக்கரிவாள்போன்ற முதுகினையுடையது ; நிற மாறும் இயல்பினது ; வறண்ட பாலைவனத்தில் வற்றல் மரத்தில் வாழ்வது ; சில நேரங்களில் யாமரத்திலும் ஞெமை மரத்திலும் ஏறுவது ; குவளைப்போது போன்ற வாயையுடையது என்பன அறிந்தோம். (தொடரும்.)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், களமூர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

அலையிற் பிரிந்தவ ரத்தமேண் ணுதவ ராவலிற்செய்
கொலையிற் பிரிந்தவர் குற்றமில்லாதவர் கோலமூறுங்
கலையிற் பிரிந்தவர் சைனவினத்துக் கடவுளர்தந்
நிலையிற் பிரிந்தவர் நெஞ்சஞ் துயர்பவர் நேரிழையே.

சிவாகமம்

[சகளீகரணம்]

ஆகம வித்துவான்,
திரு. S. சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

(மலர் 18. இதழ் 5. பக்கம் 318 இன் தொடர்ச்சி)

उमौ संयोज्य वौषडन्तमूलेन परमीकृत्य

" உபௌ சம்யோஜ்ய வௌஷடந்தமூலேன பரமீக்ருத்ய "

(அகோர சிவாசாரியார்)

உபௌ - வலது இடது இரு கைகளையும். ஸம்யோஜ்ய சேர்த்து வௌஷடந்தமூலேந பரமீக்ருத்ய ஓம் - ஹ்ராம் ஹௌம் சிவாய வௌஷட் என்று சிவனோடு இரண்டறக் கலந்ததாகப் பாவித்துப் பின் அங்கந்யாசம் செய்யவேண்டும்.

दक्षिणाङ्गुष्ठाभ्यां हृदि त्वासनमूर्त्तिकम् ।
विन्यस्य विधिवद्देहे पञ्चब्रह्म न्यसेत्ततः ॥
मूर्ध्नि वक्त्रे च हृद्देशे गुह्यदेशेऽथ पादयोः ।
ईशानादि क्रमेणैव विन्यसेद्ब्रह्म पञ्चकम् ॥ (कारणागमम्)

" தக்ஷிணாங்குஷ்டாப்யாம் ஹ்ருதி த்வாஸந, மூர்த்திகம்
விந்யஸ்ய விதிவத் தேஹே பஞ்ச ப்ரும்ம ந்யஸேத் தத :
மூர்த்நி வக்த்ரே ச ஹ்ருத்தேசே குஹ்யதேசே த பாதயோ :
ஈசாநாதி க்ரமேணைவ விந்யஸேத் ப்ரும்ம பஞ்சகம் "

(காரணாகமம்)

தக்ஷிணாங்குஷ்டாப்யாம் - வலது பெருவிரலால், ஹ்ருதி - மார்பில் ஆஸந மூர்த்திகம் ஓம் ஹாம் சிவாஸநாய நம : ஓம் ஹாம் ஹம். சிவ மூர்த்தயே நம : என்று ஆஸன மூர்த்திகளை அதாவது பாத தலம் முதல் சகல சரீர வ்யாபக தேஜோருபமான சிவமூர்த்தியை விந்யஸ்ய - ந்யாஸித்து. விதிவத் - முறையாக தேஹே - சரீரத்தில். தத :- பிறகு. பஞ்ச பிரும்ம. ஐந்து பிரும்ம மந்திரங்களை. ந்யஸேத் - நியசிக்கவேண்டும் மூர்த்னி - சிரசிலும். வக்த்ரே - முகத்திலும். ஹ்ருத்தேசே - மார்பிரதேசத்திலும். குஹ்யேச -

தொப்புளிலும். அத - பிறகு பாதயோ: - பாதங்களிலும் ஈசா நாதிக்ரமேணைவ - ஈசாநம் முதல் முறையாக. பஞ்சப்ரும்மகம் - ஐந்து பிரம்ம மந்திரங்களை. விந்யஸேத் - ந்யாஸம் செய்ய வேண்டும். அதாவது கையை முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு பெருவிரலால் தலையில் ஓம் ஹோம் ஈசாந மூர்த்தாய நம: என்று தொடவேண்டும். பிறகு பெருவிரலுடன் கூடிய ஆள் காட்டி விரலால் ஓம் ஹேம் தத் புருஷ வக்த்ராய நம: என்று முகத்திலும். பெருவிரலுடன்கூடிய நடுவிரலால் ஓம் ஹூம் அகோர ஹ்ருதயாய நம: என்று மார்பிலும். பெருவிரலுடன் கூடிய மோதிரவிரலால் ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: என்று உந்தியிலும். பெருவிரலுடன் கூடிய சிறுவிரலால் ஓம் ஹம் சத்யோஜாதமூர்த்தயே நம: என்று இரு கால்களிலும் தொடவேண்டும்:

अंगुष्ठानामिकाग्रेण विद्यादेहं न्यसेद् हृदि ।

" அங்குஷ்டாநாமிகாக்ரேண வித்யா தேஹம் ந்யஸேத்ஹ்ருதி "

அங்குஷ்டாநாமிகாக்ரேண பெருவிரலுடன் கூடிய ஆள்காட்டி விரலால் ஹ்ருதி – மார்பில் வித்யாதேஹம் வித்யா சரீரத்தை அதாவது ஈசானம் முதலிய ஐந்து பிரும்மமந்திரங்களின் சமஷ்டி ருபமாயும் ஐந்து முகம் முதலியவைகளுடன் கூடிய சகல சரீர வ்யாபகமாயுமுள்ள தேஹத்தை வைத்து நியஸிக்க வேண்டும்.

लोचने विन्यसेन्नेत्रं मध्यमांगुलिभिस्त्रिभिः
प्रासादं हृदि विन्यस्य पश्चादङ्गानि विन्यसेत् ।

" லோசனே விந்யஸந் நேத்ரம் மத்யமாங்குளிபி: திருபி:
ப்ராஸாதம் ஹ்ருதி விந்யஸ்ய பஸ்ச்சாதங்கானி விந்யஸேத்

த்ருபி:— மூன்றுகளான. மத்யமாங்குளிபி: நடுவிரல் முதலிய விரல்களால். லோசனே - கண்ணில். நேத்ரம் - நேத்ரமந்திரத்தை அதாவது ஓம்ஹம் நேத்ரே ப்யோநம: என்று வின்யஸேத் - நியசிக்க வேண்டும். பச்சாத் - பிறகு ஹ்ருதி - ஹ்ருதயத்தில் ப்ராஸாதம் - பிராஸாத மந்திரத்தை அதாவது மூர்த்தி பூதமான பஞ்ச பிரும்ம மந்திரங்கள் அதிஷ்டேயமாயும் நேத்ரம் அதனுள்

அடங்கினதாயுமிருப்பதால் அதிஷ்டாத்ரு பூதமான சிவனை விளக்கும் ப்ராசாத மந்திரத்தை, விங்யஸ்ய ங்யாசம் செய்து அங்கானி - ஹ்ருதயாதி மந்திரங்களை நியசிக்க வேண்டும். அதாவது முன்போல் பெருவிரலுடன் கூடிய சிறுவிரலால் ஓம் ஹாம் ஹ்ருதயாய நம : என்று மார்பிலும், பெருவிரலுடன் கூடிய மோதிரவிரலால் ஓம் ஹீம் ஸிரஸே நம : என்று தலையிலும், ஓம் ஹூம் சிகாயை நம : என்று பின்பக்கமுள்ள குடுமியிலும் நியசித்து ஓம் ஹைம் கவசாய நம : என்று இரண்டு கைகளாலும் கழுத்தைச் சுற்றிக்கொண்டு அக்கையைத் தனது மார்புவரையில் கொண்டுவந்து நிறுத்தி முஷ்டி முத்திரையாகக் கையை வைத்துக்கொண்டு ஆள்காட்டிவிரலை நீட்டி வைத்துக் கொண்டும், ஓம் ஹ : அஸ்த்ராய நம : என்று ஹஸ்த தலங்களில் ஆள்காட்டி விரலாலும் தோட்டு, நியாசம்செய்து -

अस्त्रेण तालत्रय पुरस्सरं दिग्बन्धनं कृत्वा ।
कवचेन अवकुण्ठ्य मूलेन वौषडन्तेन महामुद्रां प्रदर्शयेत् ॥

(अघोरशिवः)

" அஸ்த்ரேண தாளத்ரய புரஸ்ஸரம் திக்பந்தனம்
க்ருத்வா கவசேந அவகுண்ட்ய மூலேந வௌஷடந்
தேன மஹா முத்ராம் ப்ரதர்சயேத் ! "

(அகோர சிவாசாரியார்)

அஸ்த்ரேண - ஓம்ஹ : அஸ்த்ராயநம ; என்று மூன்று தடவை கைகொட்டுதலை முதலில் செய்து திக்பந்தனம் - தன்னை சுற்றி நான்கு திசைகளிலும் சுற்றுதலை, க்ருத்வா - செய்து கவசேன ஓம்ஹைம் கவசாய நம: என்று தன்னைத் தனது கைவிரல் - கொண்டு சுற்றிக்கொண்டு, வௌஷடந்த என்ற மந்திரத்தினால், மஹா முத்ராம் மஹாமுத்திரையை ப்ரதர்சயேத் - காண்பிக்க வேண்டும்.

மஹாமுத்திரை என்பது தனக்கு அபிமுகமாக வைத்துக் கொள்ளப்பட்ட கைகளால் கால் முதல் தலை வரையில் ஸ்பர்சித்தல்.

இவ்வாறு செய்யப்பட்ட அங்கந்யாஸ கரந்யாஸங்களால் பூஜகனுடைய சரீரம் ஆத்யந்தம் மந்த்ர பூதமாயும் மந்த்ர க்ரியா பாவனைகளுக்குத் தகுதி பெற்றதாயும் ஆகிறது. (தொடரும்)

தமிழின்பின் சென்றதிருவிளையாடல்

சேஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்,
தமிழ்ப்பேராசிரியர் ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

காட்சி 5

இடம் - கோயில்

உறுப்பினர் - இடைக்காடர் - சிவபிரான் பார்வதிதேவி

இடைக் : தமிழறியும் பெருமானே! தன்னைச் சேர்ந்தோர் நன்னிதியே! கேள்! உனது ஆட்சி மேவிய பாண்டியனல் உன்னடியானுக்கு உண்டான அவமானச் செய்தியைக்கேள்! உனது அடியவன் தமிழ் கூறி அவமானம் பெற்ற அந்தச் செய்தியைக் கேள்! பாண்டியன் பழியோடு படராதவன்; கல்லவன்; பாவலன்; பாஙயம் கண்டுணரும் பரிசுடையோன்; கவி அவன் கண்; புவி அவன் விண் என்றெலாம் வையம் பாடுவது கேட்டு வந்தேன் வழுதியைக் காண; வண்டமிழ் வார்த்தைகளால் வாயாரக் கவி புனைந்தேன். அவையிலே முழங்கினேன் அந்த முத்தமிழை! பாராட்டவில்லை பாண்டியன்; வாளாவிருந்தான் வையங் காவலன்! மகிழவில்லை மன்னன்; விலங்காக இருந்தான் வேந்தன்; உப்பங்கழியாய்க் கடலாய் உளுத்துப்போன உள்ளத்தால் தலையசையாது செருக்கினுல் சிறந்திருந்தான் செழியன். ஐயோ, ஆண்டவனே! உனது அடியவனுக்கா இந்த நிலை! தாங்கமுடியவில்லை என்ஞல்! தாங்கமுடிய வில்லை என்ஞல்!

(அழுதல்)

பெருமானே! என்னை இகழ்ந்தனனே தென்னவன்? இல்லை; இல்லை; சொல்வடிவான உன்னையும், பொருள்வடிவான மீனுட்சியையுமன்றே இகழ்ந்துவிட்டான்! ஆம்; உனது அருளாணையிட்டுச் சொல்கிறேன் இனி தமிழ்ப்புலவனை

மதியாத தமிழ்ப்பாடலை மதியாத இத்தண் கூடற்பதியில் இருந்தும் பயனில்லை ; நான் வருகிறேன் ;

(புறப்பட்டுச் செல்கிறான்)

சிவ : (சிரித்து) அங்கயற்கண்ணி !

மீனா : சுவாமி !

சிவ : இணையற்ற புலவன் ; இடைக்காடனை மதியாத வழுதிக்குத் தக்க பாடத்தைக் கற்பித்தேயாகவேண்டும் ; புறப்படு வையையின் அக்கரையில் சென்று வீற்றிருப்போம் ; ஆம் அதுவே ஆலவாய், அரசன் உணர்ந்து திருந்தும்வரை ! எழுக !

மீனா : அப்படியே சுவாமி !

(செல்லுதல்)

காட்சி 6

இடம் - வீதி

உறுப்பினர் - புலவர்கள்

கபி : வேட்கம் புலவர்களே வேட்கம் ! விழுமிய புலவனது வித்தகப்பாடலை வேந்தன் மதியாதது வேட்கம் !

கோல் : இவ்வளவு செருக்கு எங்கிருந்து வந்தது மன்னன்பால் !

பெருங் : மன்னன் மதிமயங்கிவிட்டான் !

பெருந் : வானத்திலே தோன்றிய களங்கமற்ற வெண்மதியாயிருந்த வழுதி ஏனோ களங்கம் பேற்றுவிட்டான் !

கபி : களங்கம் கவிஞனை மறந்துவிட்டது மறந்தது மட்டுமல்ல மறுத்துவிட்டது !

கோல் : கவிஞனை மதியாத காவலன் ஆட்சியில் நாம் வாழ்தலும் பிழை !

பெருந் : உண்மை ! உண்மை !

பெருங் : இடைக்காடரை மறுத்துவிட்ட இவன் ஆட்சியில் நம் சங்கப் புலவர்கள் இருத்தலும் பெரும் பிழை ! வாருங்கள் ! வையையின் அக்கரையில் சென்று இடைக்காடரோடு இருப்போம் !

கோல் : புறப்படுங்கள்; போதியமலைக் காவலனுக்குப் புத்தி வரும்வரை முத்தமிழ்க் கூடலை மறந்திருப்போம் !

(போதல்)

காட்சி 7

இடம் - கோயில்

உறுப்பினர் - அர்ச்சகர்.

அர்ச் : (ஓடிவந்து) என்ன ஆச்சரியம் ! சோக்கநாதப் பெருமானே ! அங்கயற்கண்ணி அம்மையே ! ஆலயத்தைவிட்டு எங்கு சென்றுவிட்டீர்கள் ? அர்த்தசாம வழிபாட்டுக்குப் பின் எங்கு சென்றுவிட்டீர்கள் ? விபரீதம் ! விபரீதம் ! எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்த சொக்கலிங்கம் ஆலவாயைவிட்டுப் பிரிவதா ? ஐயோ ! ஆபத்து ! நாட்டுக்கு ஏதோ நலிவு பிறந்துவிட்டது ! ஆம்; அரசனிடம் இதனைத் தெரிவித்தேயாகவேண்டும்; தெரிவித்தேயாகவேண்டும் !

அரசை நோக்கி (ஓடுதல்)

காட்சி 8

இடம் - மண்டபம்

உறுப்பினர் - அரசன், அர்ச்சகர், காவலன்.

அர : என்ன அமைச்சரே ! பலமான யோசனை ?

அமை : ஒன்றுமில்லை யரசே ! தமிழ்ச் சங்கத்திலிருந்து சென்ற ஆண்டில் வெளியான ஏட்டுச் சுவடிகள் அனைத்தையும் பாதுகாவல் செய்யவேண்டும் என்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தீர்களே, நினைவிருக்கிறதா ?

அர : ஆம்; நன்றாக நினைவிருக்கிறது ! அதன் மூலம் பத்தோன்பதாயிரத்து இருநூற்று மூன்று இலக்கியச் செல்வம் சேமிக்கப்பட்டிருக்கிறது என்பதும் நினைவு வருகிறது.

அமை : இப்போது ஓர் புதிய செல்வம் அதனோடு இணைகிறது அரசே !

அர : என்ன, அது ?

அமை : இடைக்காடனார் பாடிய ஊசிமுறி என்ற ஒப்பற்ற இலக்கண நூல் !

அர : (தனக்குள்) இடைக்காடனார் ! நேற்று நம்மரசவையில் நமக்கு நிகரான புலமையோடு வந்த புலவனா ?

அமை : (தொடர்ந்து) யாப்பு நுணுக்கங்களை எத்துணை அழகாக விளக்கியிருக்கிறார் என்கிறீர்கள் ? தெளிவான நடை; தேர்ந்த சொல்வளம்; சுருங்கிய உருவம்; பெருகிய பொருள்; சுருக்கமாகச் சொல்லநினைத்தா ஊசிமுறி நம் இலக்கியங்களுள் தனிச் சிறந்ததவோர் இலக்கண இலக்கியம் ! இதனை வெளியிடுவதில் நமது பாண்டிய அரசுக்கிருக்கும் பெருமையை எண்ணிப் பார்த்தேன் பேரரசே !

கா : அரசே ! அர்ச்சகர் வந்திருக்கிறார்

அர : வரச்சொல் !

அர் : (ஓடிவந்து) அரசே ! விபரீதம் ! விபரீதம் !

அர : பதராதீர், என்ன நடந்தது சொல்லும் ?

அர் : நடக்கக் கூடாதது நடந்துவிட்டது அரசே ! பாண்டிய நாட்டில் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக மதுரைத் திருக்கோவிலில் குடிகொண்டிருந்த சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலைவிட்டே பிரிந்து விட்டார் !

அமை :
அர : } என்ன ?

அர் : ஆம் அரசே ! இன்று காலையிலே வழிபாடு புரியச் சென்றேன்; பெருமானையும் பெருமாட்டியையும் காண வில்லை.

அர : பெருமானே ! இது என்ன சோதனை !

(திடீரென்று மயங்கி வீழ்தல்)

குரல் : வானத்திலிருந்து மதி உதிர்வதா ? வையத்திலிருந்து உண்மை உலர்வதா ? மதுரை மாநகரை விட்டு மாதேவன் பிரிவதா ? மன்னா ! உன்னாட்சியில் ஏதோ ஓர் பெரிய பிழை நடந்திருக்கிறது ! பிழை ! பிழை ! பிழை !

அர : (தெளிந்து) ஆம்; என்னை அறியாமல் ஏதோ ஓர் பிழை நிகழ்ந்துவிட்டிருக்கிறது ! சோக்கலிங்கப் பெருமானே - சோதனை ஏன்? என்ன பிழை செய்தான் உனது அடியவன்? நீ தென்கூடல் திருநகரையும், தமிழ்ச் சங்கத்தையும், மறந்துவிடுமளவுக்கு மாபெரும் பிழை நடந்திருக்கிறதா ? ஐயோ ! நான் ஓர் கயவன் ! நான் ஓர் பாவி !

(மயங்குதல்)

அமை : அரசே! ஏதோ பெரும்பிழை எங்கோ நிகழ்ந்து விட்டிருக்கிறது ; எழுங்கள்; விசாரித்து முடிவு காண !

அர : விசாரிப்பதா ? என் உயிர்க்குயிரான சோக்கரைப் பிரிந்து விசாரிப்பதா? மலர் மணத்தைப் பிரிந்து மலர்வதா? அமைச்சரே ! போற்கைப் பாண்டியனும், நெடுஞ்செழிய மன்னரும், உக்கிரப் பெருவழுதியும் இருந்து அரசாட்சி புரிந்த என் நீதிப் பரம்பரையிலே களங்கம் விளைந்து விட்டது அமைச்சரே களங்கம் விளைந்துவிட்டது, வளையாத செங்கோல் வளைந்துவிட்டது ! விளையாத அநீதி விளைந்துவிட்டது !

காவலன் : (ஓடிவந்து) அரசே! அதிசயம்! அதிசயம்! வையையின் வடகரையிலே வானளாவிய ஓர் திருக்கோயில்! சோக்கலிங்கப் பெருமானும், மீனாட்சியும் அங்கே வீற்றிருக்கிறார்கள் ! இடைக்காடனார் முதலியசங்கப் புலவர்கள் அங்கே இருக்கிறார்கள் ! இது ஒரு புதுமை, காணவும் கேட்கவும் வியப்பாக இருக்கிறது அரசே !

அர : என்ன ! எம்பெருமான் வையையின் வடகரையில் வீற்றிருக்கிறாரா ? சங்கப்புலவர்கள் அங்கிருக்கிறார்களா ? உய்ந்தேன் ; உய்ந்தேன் ; இதோ ஓடுகிறேன் பெருமான் திருமுன் ; வேண்டுகிறேன்; சோக்கலிங்கப் பெருமானே ! உன் திருவடியே சரண் ! திருவடியே சரண் !

[ஓடுகிறான்; அமைச்சர், அருச்சகர், காவலரும் பின்னேயே ஓடுகின்றனர்]

(தொடரும்)

உடல் வளர்க்கும் மூலிகைகள்

திரு. V. பலராமையா B., A., B. L., அவர்கள்,
District Magistrate, Cuddalore.

மலவிசர்ஜன லேகியம்:

இந்த லேகியம் எல்லோரும் தயார்செய்து கொள்ளலாம்.

கடுக்காய் பிஞ்சு	பலம்	2
ஆவாரைவிதை	,,	2
குல்கந்து	,,	10
சூரத்நிலாவரை இலை	,,	1

பசும் பால் பாதி, நீர் பாதி சேர்த்து மண் பாத்திரத்திலிட்டு அதன் வாயிற்கு ஒரு சல்லாத்துணி கட்டி அத்துணியில் சூரத் நிலாவரை இலையை வைத்து மேல்மூடி வைத்து சிறு தீயில் பாலைக்காய்ச்சவும். ஒருமணி நேரம் வேந்தபின் எடுத்து இலையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்துகொள்ளவும்.

கடுக்காய்ப் பிஞ்சு, ஆவாரை விதை இரண்டையும் ஒடியும் பக்குவத்தில் தனித்தனியாய்ச் சிறு தீயில் வாணலிலிட்டு வறுத்து எடுத்து இரண்டும் இடித்து சன்னமான சூரணம் செய்து கொள்ளவும். பிறகு குல்கந்தை அரைத்து அதில் ஷை 3 சூரணங்களையும் கொஞ்சம் கொஞ்சமாயிட்டு அரைத்து புட்டியில் அடைக்கவும்.

அளவு:

எலுமிச்சம்பழம் அளவு எடுத்து இரவில் படுக்கும் சமயம் மென்று சாப்பிடவும். காலையில் நன்ருக மலசுத்தியாகும். அதிகமாய்ப் பேதியாகின் குறைத்துக் கொள்ளவும். சாப்பிட்ட அன்றே மலசுத்தியாகாவிடினும் சிலநாட்கள் உட்கொண்டு வந்தால் பழைய மலம் கரைந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் குடல் இளகி மலச்சிக்கல் நீங்கும். ஆரோக்யத்தைப் பெருக்கும்

ஆவாரைவிதை நீரிழிவுக்குச் சிறந்தது. பெரியோர்களுக்கு உகந்த லேகியம் இது.

கடுக்காய்த் தோல் கஷாயத்தில் அயத்தூளை மூன்று நாட்கள் ஊறவைத்தெடுக்க அயக்களிம்பு நீங்கி சுத்தியாகும். அயத்தை மேற்சொன்ன கஷாயத்தாலரைத்து வில்லை தட்டி உலர்த்தி பெரும்புடம்போட செந்தூரிக்கும். இப்படி அயத்தைப் பல புடங்களிடவேண்டும்.

நெல்லிக்காய் 2

Telu : Usirikaya. Mal : Nellikay. Sans : Amalaki.

இதன் தோலை நெல்லிமுள்ளி யென்றும் சொல்லுவர். இது இருவகைப்படும். அரிநெல்லிக்காய் என்னும் வகை நமக்கு உபயோகமில்லை. பெருநெல்லிக்காயே சிறந்தது, இதற்கு திரிதோஷ சமனம் உண்டாக்கக்கூடிய குணம் உண்டு. வாதம் பித்தம் கபம் என்னும் மூன்று தோஷங்களையும் அதன் தன் அளவுப்படி வேலை செய்யும்படி செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தது. திரிதோஷத்தைச் சமனம் செய்யக்கூடிய மூலிகைகள் எதுவானுலும் மிகவும் சிறந்ததென ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். பின்னுல் திரிதோஷ சமனி மூலிகைகளைப்பற்றி குறிப்புக்கள் வரும். சத்துவம், ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களும் சமமாகப் பாவிக்க சக்திவாய்ந்தவன் பேரறிஞுகிருன்; அதேபோல் திரிதோஷ சமனம் சரீரத்தில் உண்டானுல் நோயற்ற சுத்த உடலாகுமென்பதை அறிய வேண்டும்.

பதார்த்த குணசிந்தாமணியில் இதனுடைய குணங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது. நெல்லிக்காய் கடல் அமிர்தத்திற்கு ஏற்றது. ''காயைப் பகற்போதுண்ணில் பயித்தியம், கபநோய், பீநசம், வாய்நீர் சுரப்பு, வாந்தி, மலபந்தம் பிறமோகம்போம், காமன் அழகுண்டாம். அதன் புளிப்பால் வாயுவும், துவர்ப்பால் கபமும் நீங்குமென்க ''

சவனப்பிராச லேகியத்தில் நெல்லிக்காய் தாய்மருந்து. அந்த லேகியத்தை சவனரிஷி என்பவர் தனக்குப் பாலைக் கொடுத்துவந்த ஓர் கிழவனுக்குச் சொல்லி அவன் அதைச்செய்து

சாப்பிட யௌவனம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இதைக் கதையாகக் கொண்டாலும் அனுபவத்தை ஒட்டிப்பார்த்தால் அது மிகையாகாதெனச் சொல்லலாம்.

குறிப்பு: நெல்லிக்காய் எவ்விதம் உண்டாலும் சரி, சர்க்கரை வியாதி (Diabetics) உள்ளவர்களுக்கு மிகவும் பயனைத்தரும்.

உபயோக முறை:

நெல்லிக்காய்களில் வெள்ளிக்கம்பியினால் சிறுதுவாரங்கள் உண்டாக்கி வெல்லப்பாகில் போட்டுவைக்க ஒருவருடமானாலும் கெடாது. ருசிகரமாயிருக்கும். இதை நெல்லிக்காய் மொரப்பா என்றும் சிலர் சொல்லுகின்றனர். ஷெ துவாரமிட்ட காய்களைக் கடலைப் புளிப்பில் (Vinegor) போட்டுவைக்க நன்றாக ஊறி வெகு உன்னதமாகவும் ருசியாகவுமிருக்கும். ஊறுகாயிற்குப் பதிலாக உபயோகிக்கலாம். பல வியாதிகளைக் குணப்படுத்தும்.

இதை மற்றபடி இடித்து ரவியில் காயவைத்து கொட்டை களை அகற்றிப் பதனம் செய்து வைத்துக்கொண்டு ஒரு மிளகாய் உப்பு வைத்துத் துகையல் சட்னி செய்து தயிரில் கலக்கி தாளித்துத் தயிர்ப் பச்சடியாகச் செய்து சாப்பிடலாம். ருசியா கவும் இருக்கும். உடலையும் இருக்கும். சுக்லத்தைப் பெருக்கும், துகையலைச் சாதத்துடன் பிசரி நெய்விட்டுச் சாப்பிடலாம்.

குறிப்பு: அமிருதத்துக்கொத்த நெல்லிக்காயில் விஷத்தைச் சேர்ப்பதுபோல் பலர் கடுகு, நல்லெண்ணெய் நிறையவிட்டு ஊறுகாய் செய்கின்றனர். அப்படித் தயார் செய்யப்பட்ட நெல்லி எள்ளளவும் பயன்தராது.

நெல்லியை உரலில் இட்டு வேண்டிய அளவு மஞ்சள்பொடி, உப்பு அதிலிட்டு இடித்து ஜாடியில் பதனம் செய்து மூன்று நாள் ரவியில் வைத்து மூடிவைத்துக்கொண்டால் கெடாமல் பல மாதங்கள்வரை உபயோகிக்கலாம். இது ஓர் நல்ல முறை. இதில் கொஞ்சம், எடுத்துக் கொட்டைகளைப் பொறுக்கி எரிந்து விட்டு மிளகாய் வற்றல் கொஞ்சம் சேர்த்துத் தண்ணீர்விடாமல் சட்டினியாக அரைத்து வைக்கப் பல நாட்களானாலும் கெடாது.

பிரதிதினமும் ஊறுகாய்க்குப் பதிலாக உபயோகிக்கலாம். தயிரில் கொஞ்சம் கலக்கித் தயிர்பச்சடியாக உபயோகிக்கலாம்.

அயச்செந்தூரம்:

தேனிரும்பை ராவிய பொடி 10 தோலாக்களை வாயகண்ட ஒரு ஜாடியிலிட்டு 30 எலுமிச்சம்பழ ரசத்தை அதில் விட்டு துருசு ஒரு தோலா பொடிசெய்து அதனுள் இடவும், பிறகு மூங்கில் குச்சி அல்லது கண்ணுடி குச்சியினுல் பிரதிதினமும் 2, 3 முறைகள் கிளரிவிடவும். அப்படியே செய்துவரின் 20 நாட்களில் அயம் துருசு எல்லாம் ரசத்துடன் கலந்து நீராகும். பிறகு அதை ஒரு பீங்கான் கோப்பையிலிட்டு நன்ருகச் சுண்டும்வரை வேயிலில் வைத்து வரவும். பிறகு ஒரு மண் சட்டியில் சோற்றுக்கற்ருழை சோற்றை எடுத்து சட்டியில் பாதி யிட்டு அயத்தை (ஈரமாயிருந்தாலும் பரவாயில்லை) எடுத்து அதன் மேலிட்டு மற்றும் அதன்மேல் கற்ருழை சோற்றையிட்டு மேல் அகல்மூடி மூன்று சீலைமண் செய்து சீலை உலர்ந்தபின் 150 எருவில் புடமிட்டெடுக்கத் துல்யமான செந்தூரமாகும். ஒரு வேளை கருத்திருப்பின் செந்தூரத்தை ஓர் இரும்பு கடாயிலிட்டுக் கற்ருழைச் சோற்றை வேண்டியதிட்டு வறுத்துக்கொண்டே யிருந்தால் எல்லாம்சுண்டி செந்தூரம் சிகப்பாகும். பிறகு அதை எடுத்து கல்வத்திலிட்டு நேல்லிக்காய்ச் சாறு வேண்டிய அள விட்டு வேயிலில்வைத்துச் சாறு சுண்டும் சமயம் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை லேசாகத் தட்டி அலர உலர்த்தி அகலிலிட்டு அகல் மூடி சீலை செய்து 100 வறட்டியில் புடமிடவும், செந்தூா மாகும். நீலவர்ணமாக ஒரு சமயம் ஆகக்கூடும்: அப்படியே இருக்கலாம். இந்த அயச்சேந்தூரம் வேகுபலனைத்தரும். இந்த அயச்சேந்தூரத்தை 6 மாதங்கள் கோள்ள சரீரத்தில் புதுரத்தம் பரவி சரீரம் கேட்டிப்படும். ஆயுள் பேருகுமேன்பது சாஸ்திர சம்மதம். (தோடரும்.)

பன்னெறி விளக்கம்

களமூர், பேருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

குயவ ரிழப்ப துடைந்தமட் பாண்டத்தைக் குற்றமற்ற
வயவ ரிழப்பது மாற்ருரிற் ருேல்வியை வஞ்சமில்லா
வுயவ ரிழப்பது தாரித்திரத்தை யுதவி யில்லாக்
கயவ ரிழப்பது கைவந்த யாவையுங் காரிகையே.

சிதம்பரத்தில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

அருளுரை

2—10—59

தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையின் தொடக்கத்தில் சிறப்பிக்கப் பெற்ற உங்களிடையிலே, எமது அன்புக்குரிய சைவப் பெருமக்கள் அன்புவலைப்பட்டு இவ் விழாவிற் கலந்துகொள்கின்றோம். இங்கு அளிக்கப்படும் வாழ்த்தும் வணக்கமும் எம் ஆதி பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளுக்கே உரியன. அவர்கள் திருவடி தோய்ந்த - அருள் விளக்கம் நிறைந்துள்ள இந்த மண்டபத்திலே நாம் கூடியிருப்பது நம் பெருந்தவப் பயனேயாகும்.

சிதம்பரம் முத்திஸ்தலம் ; இத் தலத்தை - நடராசப் பெருமானைத் ' தரிசனம் கண்டவர்க்கு மறு ஜன்மம் இல்லை ' என்பது கோபாலகிருஷ்ண பாரதியார் வாக்கு. எம் பரமாசாரிய சுவாமிகள் ' தில்லைவனங்காசி திருவாரூர் மாயூரம் ' என்ற திரு வெண்பாவிலே முதலில் இத் தலத்தை வைத்தருளியுள்ளார்கள். திருமுறைகளை உலகிற்குபகரித்த பெருமான் இங்கே கூத்தரசனாக விளங்குகின்றான்; திருமுறைச் சேமிப்பு நிகழ்த்த இத் திருத் தலமே சிறந்த இடமாதலை அருளினான். இந்தப் பெருமைமிக்க மூர்த்தி இங்கே ஆடாவிட்டால் உலகம் இயங்காது ; உண்மை விளக்கத்திலே இந்த ஆடல் தத்துவம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. இங்கே வந்து வழிபட்டே நம்முடைய நால்வர் பெருமக்கள் நன்னெறி வளர்த்தார்கள். அவர்கள் இத் தலத்திலே வந்து தங்கள் இன்றமிழ்ப் பதிகங்களை ஓதினார்கள். ' கோயில் ' என்ற பொதுப்பெயரோடு சைவர்க்குச் சிறந்து விளங்கும். இங்கு வழிபட்டுப் பெருமான் அருள் வெள்ளத்தை நாடெங்கும் பரப்பினார்கள். சித்தாந்தம் என்றால் சைவ சித்தாந்தம் ; பூ என்றால் தாமரை, கோயில் என்றால் சிதம்பரம்.

இங்கு வீற்றிருக்கும் பெருமான் திருவடிப் பெருமைகளை அப்பரடிகள் பாடியுள்ளார்.

சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றேநம்மை ஆட்கொண்டதே.

நாம் கயிலைக்குச் சென்றதாக எண்ண இடம் இல்லை, ஆட எடுத்திட்ட அப்பாதமன்றே கயிலை செல்வித்தது' என்றுதான் கூறவேண்டுமே ஒழிய நம் செயலன்று என்பதை உணர்தல் வேண்டும். பொன்னம்பலமும் வெள்ளியம்பலமும்தான், மதுரையும் தில்லையும்தான் கயிலை யாத்திரை புரிய - நிறைவேறப் பெருந்துணையாய் நின்றன. 'ஆலவாய் அரன் நிற்கவே' என்ற ஞானசம்பந்தப்பிள்ளையார் அருள் வாக்கே விளக்கம். இப்பெருமான் திருவடி ஏத்துதலே இன்பம்; செல்வம். இப் பெருமான் திருவடியைப்பற்றினல்தான் பாவம் உயிரைப்பற்ருது.

கற்ருங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்ருர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்ரு வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்ரு நின்ருரைப் பற்ரு பாவமே.

திருவருள் தோய்வோடு திருவடிச் சிந்தனை வேண்டும் திடமனத்தோடு வழிபடல் வேண்டும். 'உன் திருவடிக் கீழ் தலைமறைவு வேண்டும்' என்று ஆசாரியப்பெருமக்கள் வேண்டினுர்கள். 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாரனுர்க்கே' என்ற அருள்வாக்கை மெய்ப்பிக்க, இங்கே இடப் பாகத்தில் திருமால் சக்தி வடிவாய பெருமான் உள்ளார். அரியும் சிவனும் ஒன்று' என்ற உண்மையை இத் தில்லைத்தலமே இனிது விளக்குகின்றது அன்ரே? மாணிக்கவாசகப் பெருமான் இங்கே திருமால் குஞ்சிதபாதம் தரிசனம் செய்தபின் மற்ரெரு திருவடியையும் காட்டமாட்டாயா பெருமானே என்று வரங்கிடப்பதாகக் கூறுகின்ருர்கள்

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடு எந்தாய் என்றுஇரப்பத் தன்ஈரடிக்கு என்இரண்டு
கரங்கள் தந்தான் ஒன்றுகாட்டமற்று ஆங்கதும் காட்டிடுஎன்று
வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றில்அம் மாயவனே.

துஷ்டநிக்ரகம் பண்ணும் திருவடி ஒன்று; சிஷ்டபரிபாலனம் பண்ணும் திருவடி ஒன்று. இவற்றை மறந்தால் வாழ்வில்லை.

நம் சாத்திர ஆசிரியர்களில் உமாபதிசிவம் ஒருவரே - தில்லைவாழந்தணர்களில் ஒருவரே! ' சிவம் ' என்று அழைக்கப் படுகின்றார். ஏனையோர் திருப்பெயரமைப்பில் இச் சிறப்புப் பெருமை இல்லாமையோர்க. அப் பெருமான் எட்டு நூல்களை - சாத்திரங்களை அருளியுள்ளார். அவற்றுள் ஒன்றாகிய கோடிக் கவியில் பஞ்சாட்சரத்தத்துவத்தை-நடராசப்பெருமான் அருளிப் பாட்டை அருளியுள்ளார். பஞ்சகிருத்தியங்களையும் இவ்வாடலில் காட்டி விளக்குகின்றான் பெருமான். இன்றைக்கும் அணு ஆராய்ச்சியில் ஓர் ஆடல் - அசைவு இருப்பதாகக் கண்ட விஞ்ஞானிகள், ஆடுகின்ற தெய்வ அமைப்பை அறிந்து வியக் கின்றார்கள். இப் பெருமான் இங்கே ஆனந்தத் தேனாய் ஆடுகின்றான்; அங்கே கயிலைநாதன் மலையாய் விளங்கி ஞானப் பால் தருகின்றான். அங்கே பால்; இங்கே தேன்.

தினைத்தனை உள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தோறுங் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைந்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி

அந்த ஞானப்பால் உண்ணுதற்குப் பண்பு, பக்தி, அநுபவம் வேண்டும். அதனை உண்டால் ஊன் தேய்ந்தாலும் உணர்வு தேயாது. அப்பர் சுவாமிகள் அப் பெருமான் புகழ் பாடு கின்றார்கள்.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

அப்பரடிகள் அங்கே இப்படிப் போற்றிய நிலையை, தில்லையிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபட்டு வணங்கிய நிலையோடு

ஒப்பீட்டு உணர்தல்வேண்டும். சேக்கிழார் திருவாக்கு இவ்விடங்களில் அற்புதமாக அமைந்திருக்கிறது.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்து வாழ் சடையானாடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தேண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம் என்று
கண்ணில்ஆ னந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

முக்குணங்களும் சாத்துவிகத்திலே அடங்கினால்தான் யாத்திரை-கயிலை யாத்திரை நிறைவேறும்; பெருமான் திருவருட்பேறு கிடைக்கும் என்று நினைவிற்கொள்ளவேண்டும். 'பேரின்ப வெள்ளத்துள்' திளைத்து என்ற சேக்கிழார் வாக்குக்கு விளக்கம் திருக்கோவையாரில்,

ஆனந்த வெள்ளத் தழுந்தும்ஒர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத்திடைத் திளைத்தால் ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைசுழலோன் அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றுது முற்றுதிவ் வணிநலமே.

தில்லைச்சிற்றம்பலத்துப்பெருமான் அடியார்க்கு எளியவன்; உமாபதிசிவத்துக்கு எழுதிய கைச் சீட்டிலே, பெற்றான் சாம்பானுக்கு என எழுதிய அருள் திருமுகத்திலே இதனைக் காண்கின்றோம்.

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு — படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

வேள்ளியம்பலத்துப் பேருமானின் ஆட்சித்திறமும், அடியார் மேலும் அரசன் மேலும் அப்பேருமான்கோண்ட பேரன்பும் திருமுகப் பாசுரத்தில் தேளிவாகின்றன. அங்கே சேர நாட்டுக்குப் பாணபத்திரனை அனுப்பிய பேருமான் அருளிய அத்திருமுகப் பாசுரத்தின் அழகு போருந்திய அமைப்பு மிகச் சிறந்ததாகும்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிறகு
அன்னம் பயில் போழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மோழிதரு மாற்றம்
பருவக் கோண்மூப் படியேனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க :
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்போருள் கோடுத்து வரவிடுப்பதுவே.

'பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்' என்றதன் நயமும், 'மன்னிய சிவன்' என்றதன் நயமும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். 'ஏழிசைச் சூழல்புக்கோ' என்ற மணிவாசகப் பேருமான் திருவாக்கையும், 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கும், 'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி' என்ற அப்பரடிகள் வாக்கையும், 'பண்ணின் பயனும் நல்லிசையும்' என்ற சேக்கிழார் வாக்கையும் இங்கே நோக்கி உணர்தல் வேண்டும்.

சேரமான்பேருமான் தில்லைப்பேருமான் திருவடிச் சிலம் போசை தினமும் கேட்கும் திறமுடையார். சுந்தரர் பேருநட்புச் சேரமானுக்குக் கிடைக்கவேண்டும் என்று பேருமான் திருவருட் செயல் புரிந்தபேற்றி இங்கே நினைக்கத்தகுந்தது. 'உலகியலும் அரசியலும் உறுதியல்ல என்றுணரும்' தேளிவைச் சேரமானுக்குத் தந்தது இப்போன்னம்பலமே ஆகும். ''அடிவண்ணான் அடிச்சேரன்,' 'வருந்தாது ஏகும்' என்ற தோடர்களில் சேக்கிழார்குறித்தருளும்நயப்பாட்டைநன்குஉணர்தல்வேண்டும். இப்பேருமான் திருவடிகளை எப்போதும் உள்ளத்து வைத்துப் பூசித்தல் வேண்டும். அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்கள்.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு மகத்தடக்கி:
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.

மேலும் இப்பிறவி நடராஜப்பெருமானை வாழ்த்தவும் வணங்கவும் வேண்டும் என்று வற்புறுத்தி மகிழ்கின்றார்கள்.

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

முதற் பராந்தகன் தில்லையம்பலத்துக்குப் பொன்வேய்வதற்கு முன்பே தேவர்கள் பொன்வேய்ந்து வழிபட்டார்கள் என்று அறிதல் வேண்டும். அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்கள் :

முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙனம் உய்வனே.

இத்திருப்பாடலில் நடராஜப்பெருமானை வழிபடவேண்டிய விதத்தையும் அப்பெருமான் திருக்குறிப்பையும் அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார்கள். இத்தகைய பெருமானின் பேரருளை இனிதுபெறக் குருவருள் துணைபுரியவேண்டும். குருவருள் இல்லையேல் இதனைப்பெற வியலாது. குருநாதனே உள்ள நோய் தீர்ப்பவன் ; ஒளி சேர்ப்பவன். டாக்டர் உடல் நோயைத் தீர்ப்பதுபோல, அவன் உள்ளநோய் ஒழிக்கின்றான்.

தமிழன் கடவுள் நம்பிக்கையும், பண்பாடும், குருபக்தியும் உடையவனாய் வாழ்தல் வேண்டும். திருக்குறள் கடவுள் வாழ்த்துக் கடவுள் வாழ்த்தின் அவசியத்தை எடுத்துரைக்கின்றது.

தென்னாடே இயற்கைப் பருவக்கோளாறுகளின்றி அன்பு நெறியின் பிறப்பிடமாய்த் திகழ்கின்றது. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற தொடர்க்கு விளக்கமும், தெளிவுரையும்

வடநாடு சென்று உணர்தல் வேண்டும். யாத்திரை அநுபவமாக எதுவும் கூறவேண்டுவதில்லை. திருவருளே அழியாச் செல்வம்; அதுவே நமக்கு அரண் ; மனிதமுயற்சி சதமில்லை என்பதே கயிலை யாத்திரை உலகுக்குணர்த்தும் படிப்பினையெனலாம்.

'கற்றுங் கேரியோம்பிக் கலியை வாராமே செற்று' விளங்கும் நல்லோராகிய நீவிர் வாழும் இத் தலமே திருமுறைகளை உலகிற்குத் தந்தது என்ற உணர்ச்சி ஒவ்வோருவர்க்கும் வேண்டும். திருவருள் நம்பிக்கையும், நடராஜப்பெருமான் திருவடி மறவாச் சிந்தனையும் வேண்டும். தியாகராஜப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார், திருத்தொண்டத்தொகை பிறந்தது. நடராஜப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார்; பெரியபுராணம் பிறந்தது. அரசன் கட்டளையில் காரியங்கள் செம்மையாக நடப்பதுபோலக் கோடையரசனும் கூத்தரசனுமாகிய அருளரசர்கள் ஆட்சியில் அனைத்தும் செம்மையாக நடக்குமன்றோ ?

இந்த விழாவினை அன்புருவாகிய நம் அன்பர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களும், டாக்டர் திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும், திரு. சபாபதிப்பிள்ளை அவர்களுள்ளிட்ட தில்லைவாழ் சைவப் பெருமக்கள் ஏற்படுத்தியதோடு தங்கள் அன்பின் திறத்தால் குருவழிபாடும் புரிந்து பெருமை கொண்டுள்ளார்கள். கடமையைத் தன் கண்ணெனக் காத்து மருத்துவப் பணிபுரியும் நம் அன்பர் திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்களின் அன்புத் திறமும், ஏனைய பெருமக்கள் அன்புத் திறமும் உலகறிந்தவை. இவர்கள் அனைவர்க்கும் குருவருளும், எம் ஆன்மார்த்தமூர்த்தியாகிய சொக்கலிங்கப்பெருமான் திருவருளும் ஸ்ரீமங் நடராஜப்பெருமான் பேரருளும் பெருகுக! வாழ்க உலகம்! வாழ்க பக்திநெறி!

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

செய்திகள்

ஆவணிமூலத் திருநாள்
ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா

11—9—59 வெள்ளிக்கிழமை ஆவணிமூலத் திருநாள். இந்த நாளுக்கு முன்புள்ள ஒன்பது நாட்களிலும் செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறந்த முறையில் நடைபெற்றன. ஆவணிமூலத்தில்தான் மணிவாசகரின் பெருமையை உலகுக்கு உணர்த்தினான் இறைவன். வந்தியின் தலைஅன்பிற் கட்டுண்ட இறைவன் அவள் தந்த பிட்டை உண்டு வைகையின் வெள்ளத்தைத் தடுக்கக் கூலியாளாக வந்தான். மண் சுமந்து கூலிகொண்டு பாண்டியனின் பிரம்படியும் பட்டான். இந்த வரலாற்று நினைவே ஆண்டுதோறும் ஆதீனத்தில் நடைபெறுகின்ற ஆவணிமூலத் திருநாள்.

இத் திருநாளில் செந்தமிழ்ச் சொக்கனை ஆன்மார்த்த மூர்த்தியாகக்கொண்டு வழிபட்டுவரும் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன மடாலயத்தில் ஆவணிமூல விழா 9—9—59 முதல் 11—9—59 முடிய உள்ள நாட்களில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. 11—9—59 அன்று ஆவணிமூல விழாவிற்கு மாயூரத்திலிருந்து பல பெருமக்கள் வந்து வழிபட்டு இருமைப்பயனும் எய்தினார்கள்.

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலை வழிபாடு முடித்து எழுந்தருளியபின் நிகழ்ந்த இவ் ஆவணிமூல விழாவில் பெருமக்களுக்கும், ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய எல்லோருக்கும் பிரசாதங்கள் போடப்பெற்ற பை வழங்கினார்கள்.

ஆவணிமூலத் திருநாளில் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா கொண்டாடப்பெறுவதுபோல இவ்வாண்டும் சிறந்த முறையில் கொண்டாடப்பெற்றது. திருக்கேதாரத் திருநாள், திருக்கயிலைத் திருநாள், திருவாலவாய்த் திருநாள்

என்ற முறையில் மூன்று திருநாட்களும் கொண்டாடப்பெற்றன. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்கள். 9—9—59 புதன்கிழமை திருக்கேதாரத் திருநாளன்று வேத சிவாகம பாடசாலை. ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி இவை களின் ஆண்டு விழாவும், 10—9—59 வியாழக்கிழமை திருக் கயிலைத் திருநாளன்று ஆதீனத் தேவாரப் பாடசாலை, ஆதீன உயர்பள்ளி இவைகளின் ஆண்டு விழாவும் நடைபெற்றன. 11—9—59 வெள்ளிக்கிழமை திருவாலவாய்த் திருநாள். இந்த நாள் ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ செந்தமிச் சொக்கலிங்கப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தும் நாள். இந்த நாளில் ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழா நிகழ்ந்தது

தருமையாதீனம் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் விழாவிற்குத் தலைமை யமர்ந்து சென்னைப் பல்கலைக் கழக மெய்ப்பொருள்துறைப் பேராசிரியர் டாக்டர் திரு. T. M. P. மகாதேவன் M. A. Ph. D. அவர்களுக்கு "வேதாந்தவித்தகர்" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி ஆசி அருளினார்கள்.

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனக் கல்வி நிலையங்களில் பேச்சு, கவிதை, கட்டுரை, விளையாட்டு முதலிய போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்பெறுந் தகுதி யடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கியருளினார்கள்.

'வேதாந்த வித்தகர்" பட்டம்பெற்ற T. M P. மகாதேவன் அவர்கள் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு நன்றி கூறுமுகத்தால் போற்றியுரை கூறினார்கள்.

விழாவின் சிறப்புச் சொற்பொழிவாளராகிய திரு. M. K. நடராஜ ஐயர் அவர்களும் "ஞாலம்நின் புகழே மிக வேண்டும்" என்ற தலைப்பில் ஆதீனப் பல்கலைக் கல்லூரி பிரின்ஸிபால், முதுபெரும் புலவர். திரு. முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இரவு ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களால் "சுந்தரர்" என்ற நாடகம் நடிப்புத் திறனுடன் நடிக்கப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களுக்கு

வரவேற்பு

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

22—9—59 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ செல்வமுத்துக்குமரனுக்கு உகந்த நாள். மேலும் அன்று திருக்கார்த்திகைத் திருநாள். மாதந்தோறும் வரும் கார்த்திகை நாட்களில் வழிபடுவதுபோல் இந்நாளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனையும், ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானையும் வழிபட எழுந்தருளினார்கள். அந்த நாளில் வேளூர்ப் பெருமக்கள் கயிலைத் தரிசனத்திற்குப் பின்னர் முதன்முதலாக எழுந்தருளும் குருமணியை வழிபடவேண்டும் என்ற எண்ணமுடையவர்களாய்ச் சிறந்த வரவேற்பு கொடுக்கத் திட்டமிட்டு வரவேற்புக்குழு அமைத்தார்கள். வேளூர் நகர முழுவதும் தோரணங்களால் ஒப்பனை செய்யப்பெற்றிருந்தது.

கட்டளை மடத்துக்கெதிரில் உள்ள கட்டடத்தில் வரவேற்புக் குழுவினர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களைக் கொலு விருத்தி வழிபாடு செய்தார்கள். பொதுமக்கள் பலரும் வந்து வழிபட்டனர். பின்னர் வரவேற்புக் குழுவினர் முதலியவர்கள் 16 வரவேற்புரைகள் வாசித்து அளித்தனர். தேவஸ்தானச் சார்பில் கட்டளை விசாரணை ஸ்ரீமத். சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை ஒன்று வாசித்தளித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கி திரு. முத்தையாப்பிள்ளை M. L. A. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தருளினார்கள். பின்னர் திரு. முத்தையாப் பிள்ளை M. L. A. அவர்கள் வரவேற்புரையும், ஆதீனத்தின் சார்பில் வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றியுரையும் கூறினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ செல்வ முத்துக்குமரனின் சந்தனக்குழம்பு அபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளியானார்கள். பெருமக்கள் பலரும் பொதுமக்களும் திரளாகக் குழுமி யிருந்தனர், வழிபாட்டிற்குப் பின்னர்

ஸ்ரீ செல்வமுத்துக்குமரனின் மகாப்பிரசாதம் வைக்கப்பெற்ற பையை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு வழங்கியருளினூர்கள். "கயிலை யாத்திரை" என்ற ஒரு நூலும் வழங்கப்பட்டது.

நண்பகல் ஒரு மணிக்கு மாகேசுவர பூஜையும், ஏழைகளுக்கு அன்னமிடுதல் முதலியனவும் சிறப்பாக நடைபெற்றன. மாலை 6 மணிக்குத் திருமதி. K. B. சுந்தராம்பாள் M. L. C. அவர்கள் குழுவினரின் இன்னிசை விருந்து நிகழ்ந்தது. அன்பர்கள் கண்டும் களித்தும் கேட்டும் உய்ந்தனர்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

25—9—59 வெள்ளிக்கிழமை கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்துக்கு சீகாழிப் பெருமக்கள் வரவேற்பளித்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்துக்கு எழுந்தருளியானதும் பூர்ணகும்ப மரியாதைகளுடனும், அதிர்வேட்டுக்கள் முதலிவைகளுடனும். தேவஸ்தானத்திலுள்ளவர்களும் சீகாழிப் பெருமக்களும் வரவேற்றனர். அன்று ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குப் பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது. சீகாழி தேவஸ்தானச் சார்பில் வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் பொதுமக்களும், மற்றும் பலரும் வரவேற்புரைகள் வாசித்து அளித்தனர். 7 வரவேற்புரைகள் வாசித்து அளிக்கப்பெற்றன. பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் அருளாசி வழங்கினூர்கள்.

சீகாழி பெருநிலக்கிழார் ஸ்ரீ எஸ். சுப்பராய முதலியார் அவர்கள் கையிலை யாத்திரை எண்ணத்திற்கும் ஆக்குதற்கும் அரியது; அதைச் சாதிப்பது சாத்தியமல்ல. முற்கால முனி புங்கவர்கள் செய்திருக்கலாம். சந்தானுசாரிய பரம்பரையில் முதன் முதல் கையிலைநாதனைக் கண்டவர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமே. அவரைக்கண்ட மாத்திரத்திலே சிவனைக்கண்ட உணர்ச்சிவுண்டாகின்றது. அடியார்களுக்கும் இப்பேரவா வுண்டாகையால், யாத்திரை செல்லுமுன், அடியவர்களிடமும் அறிவித்திருந்தார்கள், அவர்கள் பெற்ற இன்பத்தை வையகமும்

ஓ சிறிது பெற்றிருக்கும் எங்கள் பிரார்த்தனையும் அதிகமாகக் கலந்திருக்கும். ஆயினும் கையிலை கண்ட சத்குரு! நம் தருமை ஆதீன குருமூர்த்தி என்பதை எண்ணிப் புளகாங்கித மாகின்றோம். வாழ்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் பல்லாண்டு வாழ்க வாழ்கவென ஸ்ரீ சோக்கலிங்கப் பெருமானை வாழ்த்துகின்றோம். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளவர்கள் நன்றி நவின்றார்கள்.

தருமையில் ஆடுர்ப்பாக்கியம் செட்டியார்கள் குரு வழிபாடு

27—9—59 ஞாயிற்றுக்கிழமை காலையில் தருமையில் பெருந்திரளான மக்கள் கூடினர். தருமை யாதீனத்தின் பரம்பரைச் சிஷ்யர்கள் அவர்கள். செந்தமிழ்ச் சோக்கலிங்கப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. பின்னர் பண்டாரக்கட்டில் சிஷ்ய பரம்பரையினரின் கூட்டம் கூடியது. கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை வாசித்துக்கொடுத்தனர்.

கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினார்கள். சிஷ்ய பரம்பரையில் கந்தசாமிச் செட்டியார் முதலியவர்கள் பாராட்டுரை முதலியன கூறினார்கள். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சிஷ்ய பரம்பரை யினர் அடிக்கடி ஆதீனத்தோடு தொடர்புகொண்டு குருபூஜை விழா முதலியவற்றில் பங்கு கொள்ளவேண்டும் சைவ சமயத்தை ஆங்காங்கு இருந்து பரவும்வகை செய்யவேண்டும் என்பன முதலிய பல கருத்துக்களைக் கூறி நன்றி நவின்றார்கள். நண்பகல் மாகேசுவர பூஜையுடன் அன்றைய குருவழிபாட்டு விழா நிறைவுற்றது. வழிபாட்டிற்கு ஆண்களும், பெண்களு மாகப் பலர் குழுமியிருந்தனர். எல்லோருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் திருக்கயிலாய யாத்திரை என்ற நூல் வழங்கப்பட்டது.

தருமையில் மாயூரம் பெருமக்கள் செய்த குருவழிபாடு

30—9—59 புதன்கிழமையன்று மாயூரம் பெருமக்கள் கயிலைத் தரிசனம் செய்து எழுந்தருளி நமக்கெல்லாம் அருள் வழங்கும் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்கு வரவேற்பு

செய்யவிரும்பினர். அதன்படி அன்று காலை 9 மணிக்குத் தருமை யாதீனம் ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. மாயூரம் பெரு மக்கள் பலர் வந்து கலந்து கொண்டனர். வழிபாட்டில் கலந்து கொண்ட அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதம் வழங்கினார்கள்.

அன்று ஸ்ரீ அருணந்தி தேவர் திருநாள் ஆதலால் வழிபாடு முடிந்ததும் பண்டாரக்கட்டில் அன்பர்கள் கூட்டம் நிகழ்ந்தது அப்பொழுது திரு G. சுந்தரேசம் பிள்ளை, திரு. B. திருஞானம் பிள்ளை ஆகிய இருவர்க்கும் பொன்னுடை போர்த்தி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் அருளாசி வழங்கினார்கள். பின்னர் பல பெருமக்கள் பல சிறந்த கருத்துக்களைக் கூறினார்கள். அடுத்து வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அருணந்திதேவரைப்பற்றிக் கூறி சைவப் பெருமக்கள் சைவ சித்தாந்தத்தைப் பயில வேண்டும். ஆதீனத்திற்கு வந்து இங்கு நிகழும் விழாக்களில் கலந்து பிறப்பின் பயனை அடைய முயல வேண்டும் என்று கூறி நன்றி நவின்றார்கள்.

அன்று நண்பகல் மாகேசுவரபூஜை சிறப்பாக நடைபெற்றது. பலருக்கு நண்பகல் உணவு அளிக்கப்பெற்றன. மாலை 6 மணி அளவில் வடக்கு வீதியிலுள்ள ஆதீனத் தேவார பாடசாலைக் கட்டிடத்தில் மாயூரம் பெருமக்கள் கூடி அங்கிருந்து 25 தட்டுக் களில், 25 பொருள்களை வைத்து, 25 பேர் எடுத்து வந்தனர். 25 என்ற எண் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் 25 ஆவது பட்டத்தைக் குறிக்கும் முறையில் அமைந்தது. கயிலாய மலையை வெள்ளியினால் செய்து அதில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுருவத்தை வழிபாடு செய்யும் முறையில் பொன்னால் அமைத்து எடுத்து வந்தனர் சைவப்பெருமக்கள். சிறந்தநாதசுரக்கச்சேரியுடனும் யானை முதலிய எடுபிடிகளுடனும் வரிசைப்பொருள்கள் திருநேறிய தெய்வத் தமிழ் மன்றத்துக்கு எடுத்துவந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடி மலரில் சமர்ப்பித்து வழிபட்டனர். திரு. B. திருஞானம்பிள்ளை B A., B.L., அவர்களும், திரு. R. K. சுப்பிரமணியப்பிள்ளை அவர்களும் வரவேற்புரைகளை வாசித்து அளித்தனர். பலர் மலர்மாலைகளை யும் அணிவித்து மகிழ்ந்தனர். பின்னர் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினார்கள். திரு. கிருஷ்ண மூர்த்திப்பிள்ளை முதலிய பல அன்பர்கள் கயிலையாத்திரை

சென்று வந்ததைப் பாராட்டிப் போற்றினர். வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி நவின்றபின் திருமதி M. L. வசந்தகுமாரி அவர்கள் குழுவினரின் இன்னிசை விருந்து நிகழ்ந்தது

இவ் விழாவிற்கு வந்தவர்களுக்குத் திருக்கயிலாயயாத்திரை என்ற நூல் வழங்கப்பட்டது.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வரவேற்பு

28—9—59 திங்கட்கிழமை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாய தரிசன யாத்திரைக்குப் பின் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளினார்கள். திருக்கயிலாய தரிசனத்திற்கு எழுந்தருளும் முன் திருவையாற்றில் வழிபாடு நிகழ்த்தியதுபோல் லக்ஷார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை முதலியன நிகழ்ந்தன. தென்கயிலை, வடகயிலை ஆகிய இரண்டு ஆலயத்திலும் கயிலாய திருப்பதிகப் போற்றி அர்ச்சனைகள் நடைபெற்றன. தேவஸ்தானக் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும். போதுமக்கள் சார்பில் பூர்ணகும்ப மரியாதைகளுடன் திரு. R. மாணிக்கம் பிள்ளை அவர்களும் வரவேற்றனர். 25 ஆவது பட்டத்தைக் குறிப்பிட 25 வேட்டுகள் போடப்பட்டன. வரவேற்புரைகள் வாசித்து அளிக்கப்பட்டன. தண்டாயுதபாணி ஆலயத் திருமுறைப் பந்தலில் பாராட்டு விழாக் கூட்டமும் திருமுறை மாநாடும் நிகழ்ந்தன.

காங்கிரஸ் காரியதரிசி திரு. G தங்கவேலு பிள்ளை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் விஜயம் செய்து அருளுரை வழங்கியதற்கும், விழாவைச் சிறப்புறச்செய்த போதுமக்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார். தண்டாயுதபாணி ஆலயத்தில் தஞ்சை சேஷன்ஸ் நீதிபதி திரு. R. லட்சுமண அய்யர் தலைமையில் திருமுறை மாநாடும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். தருமையாதீனவித்துவான், திருமுறைச் செல்வர் திரு. ராம. கோவிந்தசாமி பிள்ளை "கயிலை மலையார்",

வித்துவான் திரு. நா. இராமசாமி செட்டியார் "கயிலாயத்துச்சி யுள்ளான்", திரு. அரங்கசாமிப் புலவர் "நோடித்தான்மலை உத்தமன்", கல்வெட்டு ஆய்வாளர் வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார் "அன்பர் மொழிவாசகம்", சிரோமணி திரு. A சுந்தரேசாச்சாரியார் "என் கண் குளிர்ந்தனவே", வித்துவான் திரு. M. ஆபத்சகாயம் "அன்பும் சிவமும்", ஆசிரியர் திரு. T. S. சுவாமிநாதன் "தேசிகர்பிறந்துமொழி பயின்றபின்", திரு. G. தனவேலு பிள்ளை "மலர் சிலம்படி" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

திருமுறை வகுப்புக் குழந்தைகளுக்கு பரிசுகளை சேஷன்ஸ் நீதிபதி வழங்கினார். இரவு யானைமீது திருமுறை தேவார இன்னிசையுடன் நகர்வலம்வர விழா இனிது முடிந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் விஜயத்திற்கு பக்கத்து கிராமங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசித்து ஆசியுரைகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

சிதம்பரத்தில் பாராட்டு விழாவும் குருவழிபாடும்

சிதம்பரத்தில் சைவப் பெருமக்கள் அளித்த பாராட்டு விழாவும் குருபூசையும் மிகச் சிறப்பாக நடந்தன. கனகசபை நகரிலுள்ள தருமை ஆதீனம் மடத்தில் மாலை 6 மணிக்குக் கோலு வழிபாடு ஆற்றினார்கள். சைவப் பெருமக்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தைக் கோலுவில் வழிபட்டபின் பட்டணப்பிரவேசமாக ஸ்ரீமந் நடராஜப் பெருமான் திருக்கோவிலுக்கு மேளவாத்தியக்கச்சேரியுடன் அன்பர்கள் புடைசூழ அழைத்துச்சென்றார்கள். அங்கே தீட்க்ஷிதர்கள் வரவேற்பு, நடராஜப் பெருமான் வழிபாடு முதலியன நடந்தன. இரவு 10 மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தில் பாராட்டுவிழா. சிவஸ்ரீ கல்யாணசாமி தீட்க்ஷிதர் அவர்கள் தலைமை அமர்ந்து தலைமை உரையில் கூறியது :-

இங்குக் குழுமியிருக்கும் ஆஸ்திகப்பெருமக்கள் எல்லோர்க்கும் எனது அன்பு நிறைந்த நன்றி உரித்தாகுக. இன்று நாம் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கயிலாய தரிசனம் செய்துவந்தமை குறித்துச் சிதம்பரம் சைவப் பெருமக்களான பாராட்டுக் குழுவினர்கள் சார்பில் நிகழும் வரவேற்புக் கூட்டமாகிய இந்த வைபவத்திற்கு

என்னைத் தலைமைதாங்க ஏற்படுத்தப்பட்டதுபற்றி எனக்கு ஒன்றும் சொல்லத்தெரியவில்லை. ஆனாலும், சிற்றம்பலந்தன்னை தலையால் வணங்கினார் தலையானார்களே என்பதால்தான் அமைந்திருக்க வேண்டுமென்று நிச்சயிக்கிறேன். 17—8—59 அன்று ஷை குழுவினர்களால் நடத்தப்பெற்ற பிரார்த்தனைக் கூட்டத்திற்கும் நானே தலைமை தாங்கினதும் அந்த சந்தோஷத்தை இன்றும் தலைமை தாங்கி ஆனந்தப்படவும் நடராஜப்பெருமானின் திருவருள் கூட்டி வைத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நடராஜப்பெருமானிடத்தில் அழுத்தமான நிறைந்த பக்தியும், அவரின் திருவருளையே பூரண ஆதாரமாகவும் கொண்டவர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், செல்வ நெடுமாடம் என்ற பாட்டில் கூறிய முறையில் தீக்ஷிதர்கள் ஒரு குறைவுமில்லாமல் நன்கு வாழவேண்டும் என்ற நிறைந்த ஆசையுள்ளவர்கள். அவர்களுடைய அன்பை யும், பக்தியையும், கருணையையும் பெருநோக்கையும் சொல்லுதலோ, எழுதுதலோ முடியாது. ஆக இறைவன் திருவுளமும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளமும் ஒன்றுபட்டு அவர்கள் நடத்தும் எந்த விஷயத்தை யும் உலகினர் ஆச்சரியப்படும்படிக்கும், போற்றும்படிக்கும் அமைகிறது.

நான் சில ஆண்டுகளாகத் தருமையாதீன மாதவெளியீடான ஞானசம்பந்தத்தின் நண்பன். அப் பத்திரிகையால் திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள் தானும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுடன் யாத்திரை செல்கையில், அப்போ தைக்கப்போது யாத்திரையில் நடக்கும் அதிசயம், அறபுதம், பிரயாண கஷ்டம் சிலவற்றையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், உடனிருக்கும் மற்றவர்களுக்குச் சோர்வு வராமல் ஊக்குவித்துக்கொண்டே அழைத்துச் சென்றதும், பாதையில் இந்த லோக சமாசாரங்கள் எல்லாம் ஓரளவு முற்றுப்பெற்றதோ என நினைக்கும்படியா உள்ளதை அறிந்தேன். சாதாரண மாக மனிதர்களால் அறிவால், விஞ்ஞானத்தால் நடத்தப் பெறும் காரியங்களை எல்லாம் கடந்து தெய்வசக்தியான திருவருள் ஒன்றே இயங்குவதாகவும் மற்ற எந்த சக்தியும் சாமர்த்தியமும், காசுபணங்களும் பிரயோஜனப் படாமல் இருக்கும் நிலையை அகக்கண்ணால் கண்டு களிக்கப்பெற்ற

நானும் திருக்கயிலாய யாத்திரைக்குப் போனேன் என்பதில் ஐயமில்லை. கயிலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் எதைப் போய்ப் பார்த்துவந்தார்கள் என்ருல், நால்வேதத்தப்பால் நின்ற சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற சொலற் கறிய சூழலாய பதியைப் போய்ப்பார்த்தார்கள் பரமேச்வரனின் பிரதான சீடர்கள் வழி வழியாய் வந்ததே ஸ்ரீ தருமையாதீன திருக்கயிலாய பரம்பரையாகும். அந்த பீடத்தில் 25 ஆவது கயிலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மனதினுல் நினைத்ததை யெல்லாம் செயலிலே செய்துகாட்ட இறைவன் திருவருளைப் பரிபூரணமாகப்பெற்று உலகினர் என்றேன்னும் போற்றிப் புகழும்படிக்கு சைவ உலகிற்கு - சைவத்திற்கு நால்வர்கள் சமயாசாரியர்கள் கொண்ட பழந்தமிழுக்கும் திருக் கோயில்கட்கும் செய்துவரும் பெருந்தொண்டும் நல்லதென்ற எந்தக் காரியங்கட்கும் வாரி வழங்கும் கொடையும் மிக மிகப் போற்றத்தக்கது. ஆதலால் திருக்கயிலை தருமை ஆதீன மகா சந்நிதானமவர்கள் நீடுழி காலம் நாடு நலம்பெற இறைவன் திருவருள்துணையுடன் இருந்து வாழவேண்டி நடராஜமூர்த்தியை பிரார்த்தித்து எனது தலைமை யுரையை முடித்துக்கொள் கிறேன். டாக்டர். திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் வரவேற் புரைநிகழ்த்தியபின் ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமகாசந்நிதானம்அவர்கள் அருளாசி புகன்ருர்கள். பெருமக்கள் சார்பாக திரு. சபாபதிப் பிள்ளை அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள். திருவாசக மணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்களும் விழாவிற் கலந்துகொண்டார்கள். மீண்டும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக திரு. மடத்துக்கு எழுந்தருளினுர்கள். அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன. மாலை கொலுவழிபாட்டின்போது காட்டுமன்னுர்குடி - திரு. இராமலிங்கம் பிள்ளை, டாக்டர், திரு. அரங்கசாமிப் பிள்ளை, திரு. சபாபதிப் பிள்ளை முதலிய சைவப் பெருமக்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்து ஆசிவழங்கினுர்கள். தலைமை தாங்கிய சிவஸ்ரீ கல்யாணசாமி தீக்ஷிதர் அவர்களுக்கும் பொன்னுடை போர்த்து அருளினுர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் வரவேற்பில் 25 ஆவது பட்டம் என்பதைக் குறிக்க 25 வேட்டு கள் முழங்கின. ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் லட்டுபாவாடை நிவேதனமும் நிகழ்ந்தன.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(விகாரிஸூ அர்ப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)
(18—10—59 முதல் 16—11—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி நக்ஷத்திரம் 1, 2 பாதங்கள் மிச்ரமாயும், அதிக உழைப்போடும், வீண் கவலைகளோடும் நடக்கும். 3, 4 பாதங்கள் காரிய விக்னங்களும், கடன், குடும்பத் தொல்லைகள் முதலியன உண்டாகும். பரணி முதல் பாதம் சுப சந்தோஷங்களையும், ஆடையாபரணாதி சேர்க்கைகளையும் தரும். 2, 3, 4 பாதங்கள் மிச்ரபலனைத் தரும். கார்த்திகை முதல் பாதம் வீண் அலைச்சல்களையும், நஷ்டத்தையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் அதிக சிரமத்தைத் தரும். தொழில் மந்தமாகும். ரோகிணி 4 பாதங்களும் வியாதி பயத்தையும், குடும்பக் கஷ்டங்களையும் உண்டாக்கும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் தொழில்பங்கம், இடம் மாறல் இவைகளைத் தருவதோடு கவலையும் அதிகமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் லாபம் தரும். தொழில் ஓங்கும். நூதன பிரபு தரிசனம் ஏற்படச் செய்யும். திருவாதிரை 4 பாதங்களும் ஆரோக்கியத்தைத் தரும். சுகவாழ்வு ஏற்படும். கவலைகள் நீங்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் சத்துரு உபாதைகளின் நிவாரணமும், நஷ்டமான பொருள் வரத்தும், புத்திராதிகளால் மேன்மையும் உண்டாக்கும். ஆனாலும் குடும்பத் தொல்லைகள் மட்டும் இருந்துவரும். புதன், சனி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4ம் பாதம் வித்யா விருத்தியாகும். பெரியோர்களின் அன்பு கிட்டும். குடும்ப சுகமேற்படும். பூசம் நான்கு பாதங்களும் சஞ்சார பலனையும், விவகார வெற்றிகளையும், கிரக, பூமி லாபங்களையும் தரும். ஆயில்யம் 4 பாதங்களும் விவகாரம் ஜயிக்கும். தொழில் ஓங்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 4 பாதங்களும் மகோந்நதமான சுகபோகங்களை அநுபவிக்கச்செய்யும். சென்றவிடமெல்லாம் சிறப்பும், கீர்த்தியும் உண்டாகும். தேவதா குருபக்தியையும், பந்து மித்ராதிகளுடைய சேர்க்கையையும் உண்டாக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் ஆரோக்கியத்தையும், அதிக லாபத்தையும் தரும். ஹஸ்தம் 4 பாதங்களும் இக, பர சாதனங்களையும், இல்லற சுகபோகங்களையும், தான, தர்ம மகாபலன்களையும், நஷ்டமான பொருள் வரவையும் தரும். உலகப் பிரசித்தியையும் உண்டாக்கும். சித்திரை 1, 2 பாதங்கள் கடன் நிவாரணமாகும். புத்திராதிகளால் சுப சந்தோஷம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். சனி, புதன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்களும் சுபத்தையே தரும். நூதனத் தொழிலால் லாபம் கிட்டும். சுவாதி 4 பாதங்களும், தெய்வ பலத்தால் நடக்கும். சகல காரியங்களும் சித்தியாகும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் அதிக உழைப்பினால் பலன் கிட்டும். அடிக்கடி ரோக பீடைகளைக் காட்டும். வரவுக்கு மிஞ்சிய செலவைத்தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

அனுஷம், கேட்டை, விசாகம் 4-ம் பாதம் சுபமிராது. அதிக உழைப்பும், கடனும் ஏற்படும். அனுஷம் 4 பாதங்களும் சிரமத்தோடு நடக்கும். குடும்பக் கலகமும் வீண் செலவுகளும்

ஏற்படும், கேட்டை 4 பாதங்களும் ஆரோக்கியத்தையும், பொருள் வரவையும், குடும்ப சுகத்தையும் தரும். குடும்பம் ஓங்கும். புதன், சனி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் 4 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். மன நிம்மதியிராது. சஞ்சலத்தோடு நடக்கும். பூராடம் 4 பாதங்களும், உத்திராடம் முதற்பாதமும் விசேஷ சுபத்தைத் தரும். நஷ்டமான பொருள் கிடைக்கும். கடன் நீங்கும். ஆரோக்கியம் உண்டாகும். தெய்வபலம் பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம். $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். உத்தியோக உயர்வும், ஆரோக்கியமும், வம்ச விருத்தியும் ஏற்படும். சுக வாழ்வு ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் தன, தான்ய பெருக்கத்தையும், அடிக்கடி சஞ்சாரபலன்களையும், குடும்பப்பெருக்கையும் ஆடை ஆபரணச் சேர்க்கையையும் உண்டாக்கும். சகல காரியமும் சித்தியாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மகா சௌக்கியத்தைத் தரும். தன, தான்ய லாபத்தையும், உத்தியோக விருத்தியையும், கீர்த்தி பத்திரம் கிடைத்தலும், மேலோர் பெரியோர் அன்பும் கிடைக்கும். சுகவாழ்வு ஏற்படும். சனி, புதன் சுபமாகும்.

குறிப்பு:— ஷெ மாதம் இயற்கை சரியாயிராது. பயிர்களுக்கும் விளைந்த தான்யங்களுக்கும் கெடுதல் உண்டு பண்ணும். தெய்வபலமுள்ள பிரதேசம் மட்டும் செழிக்கும். சாதுக்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். எங்கும் ஆஸ்திக சஜ்ஜனங்கள் ஓங்குவார்கள்.

தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை ஆலயத்தில் நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவி ஆலயத்தில் 3—10—59 முதல் 10—10—59 முடிய உள்ள நாட்களில், காலைமாலை சதசண்டி யக்ஞம். வேதபாராயணம், தேவீமாகாத்மிய பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம் முதலியன நடைபெற்றன. ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்களும், லக்ஷார்ச்சனையும், ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன. 10-10-59 நண்பகல் சதசண்டி யக்ஞ மகாபூர்ணாஹுதியும் நடைபெற்றது. நவராத்திரி நாட்களில் யாகசாலையில் பூசை செய்யப்பெற்ற தங்கக் கலசாபிஷேகம் 11—10—59 ஞாயிற்றுக்கிழமை நண்பகலில் சிறப்பாக நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஜன்மநக்ஷத்திர விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நக்ஷத்திரத்தில் மாதந்தோறும் சிவதலங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் திருப்பதிகங்களை அச்சிட்டு வழங்கி வருதல் போல இம் மாதம் 3—10—59 சனிக்கிழமை திருநெல் வெண்ணெய் ஸ்ரீ வெண்ணெயப்பர் சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத்துப் பரிசு

ஆயிரம் (1000) ரூபாய்

தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளால் நடைபெறும் ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணாக்கர் திரு. சி. கோவிந்தசாமி (தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமைத்தமிழாசிரியர்) ஷெ பரிசுபெற்றார். இக்கல்லூரிப் பேராசிரியர் செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனாரும் இப் பரிசு பெற்றவர் என்பது பலரும் அறிந்தது. இது சென்னை மாகாணத்தில் பல்கலைக் கழகத்தாரால் நடத்தும் வித்துவான் தேர்வில் மாகாண முதல்வராகத்தேர்ச்சியுறுவோர்க்கு அளிக்கப்பெறுவது, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் ஐந்தாம்ஜார்ஜ் மன்னரின் நினைவாக வைக்கப்பெற்றது இப் பரிசு. வாழ்க பனசைக் காசி மடாலயம்.

நவமணிமாலை கீர்த்தனை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் - பிலகரி] [தாளம் - ஜம்பை

பல்லவி

தேவி லக்ஷ்மிதுர்க்கே — சேவித்தேனுன்னையே
ஆவியுட[illegible] பொருளும் — அர்ப்பண[illegible] செய்தேனே (தேவி)

அநுபல்லவி

கூவியழைத்தேனே — கும்பிட்டு நின்றேனே
காவியங் கண்ணாளே — கருணையே இல்லையோ (தேவி)

சரணம்

பாவியசுரர்களை — பாரதனில் ஒழித்தாயே
நாவினால் துதிப்பார்க்கு — நலமேலாந் தருவாயே
பூவினா லர்ச்சித்தே — பூசைசெய் தருமபுரம்
காவியணிந்தோர்மற்றோர் — காணவந்தருள் தாயே. (தேவி)

மதிப்புரை

திருவாசகம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத்து வெளியீடு. விலை 50 ந. பை. கழிவு இல்லை, அஞ்சற்செலவு 67 ந. பை, கிடைக்கும் இடம், செயலாளர். ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள், உயர்பள்ளி, ஆடுதுறை P. O. (தஞ்சைமாவட்டம்).

இப்பதிப்பு, பழக்கம்போலச் சிறந்து விளங்குகிறது. இது, ஸ்ரீஸ்ரீல காசிவாசி சுவாமிகள் அவர்களது 61 ஆவது ஆண்டுத் தொடக்கம் ஆகிய ஆவணி மூலத்திருநாள் (11—9—59) வெளியீடாகச் சைவவுலகிற்கு. வாய்த்தது. 'ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டு உண்டு உடுத்த இருந்தேன்' என்னும் திருவாசகத்தை உளங்கொண்டு, மெய்கலந்த அன்பராய், மைகலந்த கண்ணிபங்கன் மலரடிக்கே சேரப் பாடிக் கசிந்து போற்றி இன்ப நிறைவை எய்தும் வேட்கை யுடையார்க்கு உறுதுணையாயிருக்கும் இவ்வருள் நூலைத் தொட ஓதக் காண நேரும்போதல்லாம் 'அருள்நந்தி மாமுனிவர் வாழ்க' என்று சொல்லி வாழ்த்துவதே, ஸ்ரீ காசிமடத்திற்குச் செய்யும் நன்றி. வாழ்க பனசைத் திருமடத்து முதல்வர். வளர்க அவர்கள் செய்துவரும் அறங்கள் —முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—10—59.